# இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள்

கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி

நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.F.FAYIQ ⓜ

Acc. No :- 61
Class No :-
Date :-

# இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள்

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி

நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்
பேருவளை.

பேருவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பரந்து விரிந்த இப் பிரபஞ்சத்தினதும், அதில் உள்ள அனைத்தினதும் சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாஹ், தனது உன்னதமான சிருஷ்டியான மனித இனத்திற்கு வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டுவதற்காக அருளிய வாழ்க்கை நெறியாக இஸ்லாம் விளங்குகின்றது. அது மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் பொதிந்துள்ளது. அதன் பிரசார நோக்கு, மனித ஆளுமை பற்றிய கருத்து, வாழ்வின் குறிக்கோள், இலட்சியம் பற்றிய கோட்பாடு என்பன தனித்துவமானவை. 'மதம்' என்ற பதம் இன்று மிகக் குறுகிய ஒரு கருத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது . இதற்குச் சில வரலாற்றுக் காரணிகள் உண்டு. **'சில வணக்க வழிபாடுகள், சடங்கு சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதே மதம்'** என்பதே இன்று மதம் பற்றிய பொதுவான கருத்தாகும். இக் கருத்து மனித வாழ்வின் துறைகளை மதம் சார்ந்தவை, (religious), உலகியல் சார்ந்தவை (secular) என இரு பகுதிகளாகப் பிரித்து நோக்குகின்றது. இந்தக் குறுகிய கண்ணோட்டத்தில் அரசியல், பொருளியல், கல்வி, கலை, இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய அனைத்தும் மதத்தோடு எத்தகைய தொடர்பும் அற்ற உலகியல் சார்ந்த துறைகளாகக் கொள்ளப்படுகின்றன. இதன் பாதகமான விளைவுகளை மனித சமூகம் இன்று அனுபவித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது. அறமற்ற அரசியல், எத்தகைய தார்மீகக் கோட்பாட்டையும் வரித்துக் கொள்ளாத பொருளியல், ஒழுக்கப் பின்னணியற்ற கலை, இலக்கியம், வெறும் தகவல்களை மூளையில் திணிப்பதையே நோக்கமாகக் கொண்ட நவீன கல்வி என்பன இக் கருத்தினடியாகத் தோன்றிய வரலாற்று விளைவுகளாகவே உள்ளன. நுகர்வுப் பொருளாதாரம், ஆபாச இலக்கியம், பாலியல் நோய்கள், குடும்ப வாழ்வின் சீர்குலைவு, போதைப் பொருள் பாவனை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், பெருகி வரும் தற்கொலைகள், சூழல் மாசடைதல், மனித உரிமை மீறல், வன்முறைக் கலாசாரம் ஆகியன இதன் பிரத்தியட்சமான வெளிப்பாடுகளாகும்.

'மதம்' பற்றிய மேற்குறிப்பிட்ட குறுகிய கருத்திற்கு முற்றிலும் முரணான வகையில், இஸ்லாம் விளங்குகின்றது. இஸ்லாத்தைக் குறிப்பதற்கு அல்-குர்ஆனில் பயன்படுத்தப்படும் 'தீன்' என்ற பதம் மிக விரிந்த பொருளுடையது. அனைத்தையும் பொதிந்த, மனித வாழ்வு முழுவதற்கும் இஸ்லாம் ஓர் ஆத்மீகப் பரிமாணத்தை வழங்குகின்றது. அது ஒரு தார்மீக, ஒழுக்கக் கட்டுக்கோப்பை அளிக்கின்றது. மனித வாழ்வை, 'மதம் சார்ந்தவை', 'உலகியல் சார்ந்தவை' எனக் கூறுபோடுவதையும் இஸ்லாம் முற்றிலும் நிராகரிக்கின்றது. இஸ்லாம் மனிதன், பிரபஞ்சம், வாழ்வு ஆகியன பற்றி ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. இந்தக் கண்ணோட்டத்தின் பின்னணியில் கல்வி, ஒழுக்கம், அரசியல், வரலாறு, இலக்கியம் ஆகிய துறைகள் பற்றிய இஸ்லாத்தின் கோட்பாட்டை விளக்குவதே இந்நூலின் நோக்கமாகும். இத் துறைகள் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு எந்த வகையில் மேற்கத்திய கோட்பாட்டோடு முரண்படுகின்றது என்பது பற்றியும் இந்நூல் தெளிவுபடுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி. ஒழுக்கம். அரசியல். வரலாறு என்ற இந்தத் தொடரில். அறிவியல் பற்றிய இஸ்லாமிய நோக்கும் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இந்த வெற்றிடத்தை வாசர்கள் சிலர் ஒரு குறையாகக் கருதவும் இடமுண்டு. "மதமும் அறிவியலும்" என்ற எனது நூலில் இது மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளதன் காரணமாக அறிவியல் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு இதில் இடம்பெறவில்லை.

இந்நூல் பொதுவாக அனைத்து வாசகர்களுக்கும். குறிப் பாக உயர் வகுப்பு மாணவர்களுக்கும், பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களுக்கும் மிகவும் பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே!

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி

'தாருல் புஷ்ரா'
60, ராகுல வீதி.
மாத்தறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **Title** | : | ISLAMIYA VALVIYAL KOTPADU (TAMIL) |
| **Author** | : | Dr. M. A. M. Shukry |


© Copy Right Reserved

| | | |
|---|---|---|
| **First Edition** | : | 1999 |
| **Cover Design** | : | M. K. M. Shakeeb |
| **Type Setting** | : | A. R. Rizvi Mohamed |
| **Offset** | : | A J Prints<br>No. 44, Station Road, Dehiwala. |
| **Published by** | : | Naleemiah Bureau of Islamic Publications<br>P. O. Box - 01, Beruwala. |
| **Pages** | : | 118 + 6 =124 |
| **Copies** | : | 1000 |
| **Price** | : | **75/-** |

**ISBN - 955 - 8234 - 00 - 1**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இஸ்லாமிய கல்வித் தத்துவம் | 01 |
| 2. | இஸ்லாமிய ஒழுக்கவியல் கோட்பாடு | 29 |
| 3. | இஸ்லாமிய வரலாற்றுத் தத்துவம் | 56 |
| 4. | இலக்கியம் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு | 82 |
| 5. | இஸ்லாமிய அரசியற் கோட்பாடு | 99 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கல்வித் தத்துவம்

"நவீன உலகில் 'அறிவு', 'கல்வி' என்ற பெயரில் பிரபல்யப் படுத்தப்படுவதல்லாம் உண்மையில் மேற்கத்திய சிந்தனையின் அடிப்படையில் அமைந்த அறிவும் கல்வியுமாகும். இந்த அறிவையும் கல்வியையும் அதன் பிரசார சாதனங்களின் சக்தியினால் உலகெங்கிலும் பரப்பி, அதனை எல்லோருக்கும் பொதுவான, பொருத்தமான, உண்மையான அறிவு, கல்வி என்ற பிரமையை மக்களின் உள்ளங்களில் தோற்றுவிப்பதில் மேற்கத்திய நாகரிகம் வெற்றி கண்டுவிட்டது. எதிலும் சந்தேகம் கொள்வதுதான் அறிவு தேடுவதற்கான அடிப்படை விதி என்ற கோட்பாட்டை அறிமுகப் படுத்தியதன் மூலம் மனித சிந்தனையில் ஒரு குழப்ப நிலையையும், புற உலகில் ஓர் அமைதியின்மையையும் இக்கோட்பாடு தோற்றுவித்துவிட்டது. இது தாகம் தீர்ப்பதற்கு கடலிலுள்ள உப்பு நீரைக் குடித்த மனிதனின் கதையாக முடிந்துவிட்டது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்றால் என்ன? என்ற வினாவிற்கு விடை காண முனைதல் மிகவும் சிரமமான, சிக்கலான ஒரு முயற்சியாகும். கல்வி பற்றியும், அதன் நோக்கம், இலட்சியம், செயல்பாடு, தத்துவம் பற்றியும் எண்ணற்ற சித்தாந்தங்களும் கோட்பாடுகளும் காணப்படுகின்றன. பொதுவாகக் கூறின், ஒரு பரம்பரையின் அனுபவங்களை இன்னொரு பரம்பரையினருக்குப் பரிவர்த்தனை செய்யும் ஒரு முயற்சியினையே கல்வி என்ற பதம் குறித்து நிற்கின்றது எனலாம். கல்வி (Education) என்பது பாடபோதனையிலிருந்து (Instruction) வித்தியாசமானதும் ஒரு தனி மனிதனின் ஆளுமையின் (Personality) பரிபூரண வளர்ச்சிக்குத் துணைபுரியக் கூடியதுமாகும். பாடபோதனையின் நோக்கம் ஒரு தனி மனிதனுக்கோ, குழுவிற்கோ ஒரு வேலையைத் திறம்படச் செய்வதற்குப் பயிற்சியளிப்பதாகும். ஒரு மனிதன் சிறந்த தச்சனாக, வழக்கறிஞனாக, மருத்துவனாக விளங்கலாம். அதே நேரத்தில் அவன் அரைகுறை கல்வியைப் பெற்ற, ஒழுக்க நடத்தையற்ற, பண்பாடற்ற மனிதனாக இருக்கலாம். அத்தகையவர்கள் தமது தொழில் துறைகளில் போதனை பெற்று நிபுணத்துவம் அடைந்தவர்களேயன்றி, கல்வியைப் பெற்றவர்களன்று.

ஒவ்வொரு கல்விமுறையும் அதற்கேயுரிய குறிப்பிட்ட கோட்பாடுகளின் அடித்தளத்தில் எழுதப்பட்ட அதற்கேயுரிய தத்துவத்தைக் கொண்டுள்ளது. மனித வாழ்க்கையோடு தொடர்புடைய பல்வேறு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. மதசார்பற்ற (Secularist) அணுகுமுறை, நவீனத்துவ (Modernist) அணுகுமுறை, மக்கள் நல (Humanist) அணுகுமுறை போன்றன இத்துறை சார்ந்த முக்கிய தத்துவங்களாகும். இத்தத்துவங்களின் அடிப்படையில் பல்வேறு கல்விக் கோட்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த அணுகு முறைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்களின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள கல்விக் கோட்பாடுகள் கல்வியை ஒரு சமூகத்தின் பாரம்பரியங்களின் பாதுகாவலனாகவோ, மானிட மதிப்பீடுகளின் காப்பாள னாகவோ கருதுவதில்லை; இவை கல்வியைச் சமூக மாற்றத்திற்கான ஒரு செயல்முறையாகவும், இதுவரை அறியப்படாத விடயங்கள் பற்றிய தேடுதல் முயற்சியாகவும் கருதுகின்றன. அவை நித்தியமான அடிப்படைகளுக்கும், மாற்றமடையும் நியதிகளுக்குமிடையிலும் வித்தியாசம் காண்பதில்லை. இஸ்லாத்தின் மொழி நடையில் கூறினால், "மனிதனின் தேடுதல் முயற்சியால் பெறப்படும்" அறிவிற்கும் இறைவனால் "இறைதூதின்" உருவில் மனிதனுக்கு வழங்கப்படும் அறிவிற்கும் இடையில் அவை வித்தியாசம் காண்பதில்லை. எனவே, இத்தகைய கல்விக் கோட்பாடுகளில் தெளிவோ, அதற்கு அப்பால் தாண்டிச் செல்லும் விரிந்த இலட்சியமோ இல்லை . பகுத்தறிவினதும் அறிவியலினதும் அடிப்படையில் எழுதப்பட்ட இத்தத்துவங்கள், ஆத்மீக நம்பிக்கைகளையும், எல்லாக் காலத்திற்கும் உரிய நித்தியமான மதிப்பீடுகளையும் நிராகரிக்கின்றன.

## அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் மேற்கத்திய கல்விமுறை

உன்னதமான இலட்சியமோ குறிக்கோளோ அற்ற இத்தகைய கல்வியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்கத்திய நாகரிகமும் அதன் கல்விக் கோட்பாடுகளுமே நவீன மனிதனை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் பயங்கரமான அறைகூவல் களாக அறிஞர்களால் கருதப்படுகின்றன. அறிவு என்பது நடுநிலைமையானதன்று. ஒவ்வொரு தத்துவமும், அறிவை அதன் கொள்கைத் திட்டத்தின் அச்சில் வார்த்து, 'அறிவு'என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையில் அறிமுகப்படுத்துகின்றது. நவீன உலகில் 'அறிவு', 'கல்வி' என்ற பெயரில் பிரபல்யப்படுத்தப்படுவதெல்லாம் உண்மையிலே மேற்கத்திய சிந்தனையின் அடிப்படையில் அமைந்த அறிவும் கல்வியுமாகும். இந்த அறிவையும் கல்வியையும் அதன் பிரசார சாதனங்களின் சக்தியினால் உலகெங்கும் பரப்பி, அதனை எல்லோருக்கும் பொதுவான, பொருத்தமான, உண்மையான அறிவு, கல்வி என்ற பிரமையை மக்களின் உள்ளங்களில் தோற்றுவிப்பதில் மேற்கத்திய நாகரிகம் வெற்றி கண்டுவிட்டது. எதிலும் சந்தேகம் கொள்வதுதான் அறிவு தேடுவதற்கான அடிப்படை விதி என்ற கோட்பாட்டை அறிமுகப்படுத்தியதன் மூலம் மனித சிந்தனையில் ஒரு குழப்பநிலையையும், புற உலகில் ஓர் அமைதியின்மையையும் இக்கோட்பாடு தோற்றுவித்துவிட்டது. இந்த அறிவுக் கோட்பாடானது, இறைவனையும் மறுமை வாழ்வையும் நம்பிக்கையையும் நிராகரித்தது. மனிதனுக்கும் அவனது உலகிற்கும் சிறப்பிடமளித்து மனிதன் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்டு, இந்த உலக வாழ்வே அவனது ஒரே இலட்சியமாக மாறிவிட்டது.

சந்தேகத்தின் அடிப்படையில் அறிவு தேடுதலை ஆரம்பித்த நவீன மனிதனின் தேடுதல் முயற்சி, தாகந் தீர்ப்பதற்கு கடலிலுள்ள உப்பு நீரைக் குடித்த மனிதனின் கதையாக முடிந்து விட்டது. எதுவுமே நிச்சயமில்லாமல், எதிலும் நம்பிக்கை யில்லாமல் எதிலும் சந்தேகத்தின் அடிப்படையில் தனது அறிவுப் பயணத்தை ஆரம்பித்த நவீன மனிதன், எப்பொழுதும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றான்.

மேற்கத்திய நாகரிகத்தைப் பொறுத்தளவில் 'மாற்றம்' 'அபிவிருத்தி' 'முன்னேற்றம்' என்பதெல்லாம் சந்தேகத்தாலும் அதனடியாகத் தோன்றிய மனப் பதட்டத்தாலும் தூண்டப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்க முடியாத வேட்கையினதும், எல்லையற்ற அவனது பயணத்தினதும் பிரதிபலிப்புகளாகும். இந்த எல்லையற்ற பயணமே நவீன மனிதனை இயந்திர நாகரிகத்திலும், நுகர்வுப் பொருளாதாரத்திலும், அணுவாயுதப் போட்டியிலும், ஆயுத உற்பத்தியிலும் இயற்கைச் சூழலின் அழிவினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பிரச்சினைகளிலும் சிக்கவைத்துவிட்டன. நவீன லோகாயதக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, உன்னத இலட்சியங்களை வரித்துக் கொள்ளாத நவீன கல்வியின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள நாகரிகமும் அதன் நிறுவனங்களும் தோற்றுவித்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நவீன கல்வி முறை முற்றிலும் தோல்வி கண்டுவிட்டது என்பதையே இது உணர்த்துகின்றது. நவீன கல்வியின் பண்பு, தன்மைகள், விளைவுகள் பற்றிய இந்தப் பின்னணியில் இஸ்லாமியக் கல்வித் தத்துவத்தை அணுகுவோம்.

கல்வியைப் பற்றிய இஸ்லாமிய தத்துவம், மனிதனைப் பற்றிய அதன் கோட்பாட்டோடு மிக நெருங்கிய, இறுக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது. இஸ்லாம் மனிதனைப் பற்றிய சம்பூரணமான, விரிவான கோட்பாட்டைச் சமர்ப்பித்து கல்விக்கு வரையறுக்கப்பட்ட இலட்சியத்தையும், குறிக்கோளையும் வகுத்தளிக்கிறது. இந்தக் கோட்பாடு இறைவனால் அருளப்பட்ட நித்தியமான மதிப்பீடுகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளதால், அது உறுதியானதாகவும் மாற்றமடையாததாகவும் விளங்குகின்றது. **கல்வியின் நோக்கம் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு மனித சிந்தனையில் தோன்றியதன்று; இறைவனால் அருளப்பட்டதாகும். இந்த அடிப்படையே, இஸ்லாமியக் கல்விக் கோட்பாட்டை, மேற்கத்திய நவீன கல்விக் கோட்பாட்டிலிருந்து வித்தியாசப் படுத்துகின்றது.** இஸ்லாமியக் கல்விக் கோட்பாடு இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டின் பின்னணியிலேயே ஆராயப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இந்த அறிவுக் கோட்பாடானது, இஸ்லாம் மனிதனைப் பற்றி கொண்டுள்ள சித்தாந்தத்தோடு மிக தொடர்புடையதாக விளங்குகின்றது.

## உடலும் ஆத்மாவும்

இஸ்லாத்தின் நோக்கில் மனிதன் ஒரே நேரத்தில் இரண்டு அம்சங்களைப் பொதிந்தவனாகக் காணப்படுகின்றான். ஒரே நேரத்தில் அவன் உடலும் ஆத்மாவும் உடையவனாக விளங்குகிறான்.

> "நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதரைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம்.
>
> பின்னர் அதனை நாம் இந்திரியமாக்கி, ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாக்கினோம். பின்னர் அவ்விரத்தக் கட்டியை மாமிசப் பிண்டமாகச் செய்தோம். பின்னர் அம்மாமிசப் பிண்டத்திலிருந்து எலும்பை உற்பத்தி செய்து, அவ்வெலும்புக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் அதனை (ப்பூரணமாக) மனித சிருஷ்டியாக அமைத்தோம். (இவ்வாறு சிருஷ்டித்த) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன்......
>
> '(23:12-14)

"நான் மனிதனை உருவாக்கி, அதில் என் (சிருஷ்டிக்கு வேண்டிய) ஆவியைப் புகுத்தினால் அவருக்கு (மரியாதை செலுத்தி) நீங்கள் சிரம் பணியுங்கள்." (15:29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை மிக உன்னதமான அமைப்பில் சிருஷ்டித்த இறைவன் மனிதனுக்கு எல்லாப் பொருட்களினதும் பெயர்(அஸ்மா)களைப் படித்துக் கொடுத்தான்.

**"பின்பு ஆதமுக்கு(ப் பூமியிலுள்ள) எல்லாப் (பொருட் களின்) பெயர்களையும் (அவற்றின் தன்மைகளையும்) கற்றுக் கொடுத்தான்.."** (2:31)

## மனிதனுக்கு வழங்கப்பட்ட அறிவு

இங்கு பெயர் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள 'அஸ்மா' என்ற பதம் அறிவையே குறித்து நிற்கின்றது. எல்லாப் பொருட்களினதும், தன்மை பற்றிய அறிவையே இப்பதம் பொதுவாகக் காட்டுகின்றது. ஆனால், இங்கு ஆதத்திற்கு, அதாவது முதல் மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்ட அறிவு இறைவனின் மூலத்தன்மை (தாத்) போன்ற விடயங்களையன்றி, பொருட்கள், அவற்றின் தன்மைகள், அவற்றிடையேயுள்ள தொடர்புகளையே குறிக்கின்றது. இந்த அறிவே பொருட்களின் தன்மைகள், காரணங்களை அறிந்து அவற்றைத் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தும் ஆற்றலை மனிதனுக்கு அளித்தது. அத்தோடு இறைவனின் ஏகத்துவம் பற்றிய அறிவும், அவனே மனிதனின் வணக்கத்துக்குரியவனாகவும் (இலாஹ்) அவனைப் போஷித்துப் பாதுகாப்பவனாகவும் (ரப்) விளங்கு கின்றான் என்ற அறிவும் மனிதனுக்கு வழங்கப்பட்டது.

**"(நபியே!) அல்லாஹ் சாட்சி கூறுகின்றான்: 'நிச்சயமாக அவனைத் தவிர வேறு நாயன் இல்லை.' அன்றி (அவ்வாறே) மலக்குகளும் (வேதஞானம் பெற்ற) கல்விமான்களும் நீதத்தை நிலை நிறுத்தி, அவனைத் தவிர வேறு நாயன் இல்லை: (அவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாவரையும்) மிகைத்தோன்: ஞானமுடையோன்' (என்று சாட்சி கூறுகின்றனர்.) (3:18)**

இறைவனைப் பற்றிய இந்த ஞானம் மனிதனில் அமைந்துள்ள இடம், அவனது ஆத்மா(நப்ஸ்)வும் உள்ளமும் (கல்ப்) ஆகும்.

இத்தகைய அறிவும் ஞானமும் அளிக்கப்பட்ட மனிதன் பூமியில் இறைவனின் பிரதிநிதியாகப் பணியாற்றும் பணிக்காக அனுப்பப்பட்டுள்ளான்.

**"(நபியே!) உமதிறைவன் மலக்குகளை நோக்கி 'நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக அமைக்கப் போகிறேன்' எனக் கூறிய சமயத்தில்..." (2:30)**

இதனால்தான் மிகவும் பாரமும் சுமையும் மிக்க ஒரு பொறுப்பு (அமானம்) அவன்மீது சுமத்தப்பட்டுள்ளது.

**"நிச்சயமாக '(நம்முடைய) பொறுப்பைச் சுமந்து கொள்வீர்களா?' என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் முதலியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனைப் பற்றிப் பயந்து, அதனைச் சுமந்து கொள்ளாது விலகி விட்டன. அத்தகையதைத் தான் மனிதன் சுமந்து கொண்டான். (ஆகவே) நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டான்." (33:72)**

இறைவனின் விருப்பம், நோக்கம், திருப்திக்கு இயைந்த வகையில் அவனது பிரதிநிதியாக இருந்து மனிதன் ஆட்சி புரிவதையே 'அமானத்' என்ற பதம் குறிக்கின்றது. இந்த ஆட்சி, அறிவியல் அடிப்படையில் இயற்கையின் மீது மனிதன் செலுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தைக் குறிக்கவில்லை. மனிதன் தன்னையும், தனது உணர்வுகளையும் கூட கட்டுப்படுத்தி, நிர்வகித்து, ஆட்சி புரிவதைக் குறிக்கின்றது.

## அறிவு பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு

மனிதனைச் சிருஷ்டித்து அவனுக்கு அனைத்துப் பொருட்கள் பற்றிய அறிவையும் அளித்து, அவன் மீது பெரும் பொறுப்பையும் சுமத்திய இறைவன், தனது படைப்பினங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலையும் அதிகாரத்தையும் மனிதனுக்கு வழங்கினான்.

**"அன்றி, (அவ்வாறே) வானங்களிலும் பூமியிலுமுள்ள யாவையுமே அவன் தன்னுடைய அருளால் உங்களு(டைய நன்மை)க்கு (உழைக்கும்படி)க் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறான். சிந்தித்து ஆராயும் ஜனங்களுக்கு, நிச்சயமாக இதில் (பல) படிப்பினைகள் இருக்கின்றன."** (45:13)

இந்தப் பணியை மனிதன் வெற்றிகரமாக நிறைவேற்றவே அறிவும் ஞானமும் அவனுக்குத் துணை புரிகின்றன.

**"விசுவாசிகளுக்கு, வானங்களிலும் பூமியிலும் நிச்சயமாக (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன. உங்களைச் சிருஷ்டித்திருப்பதிலும் (பூமியில் பல) ஜீவராசிகளை(ப் பல பாகங்களிலும்) அவன் பரப்பி வைத்திருப்பதிலும், (விசுவாசத்தில்) உறுதியான ஜனங்களுக்கு(ப் பல) அத்தாட்சிகள் இருக்கின்றன. இரவு, பகல் மாறி மாறி வரும்படி, அவன் செய்திருப்பதிலும் வானத்திலிருந்து அருள் மாரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்லாஹ் இறக்கி வைத்து, (வறண்டு) இறந்து போன பூமியை அதனைக் கொண்டு உயிர்ப்பிப்பதிலும், (பல திசைகளுக்கும்) காற்றுகளைத் திருப்பித் திருப்பி விடுவதிலும் அறிவுடைய ஜனங்களுக்கு(ப் பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.** (45:3–5)

எனவே இஸ்லாமிய நோக்கில் அறிவியலுக்கும் மதத்திற்குமிடையில், மேற்குலகில் நிலவுவது போன்று எத்தகைய மோதலும் நிலவ முடியாது. ஏனெனில், விஞ்ஞானமும் மதமும் ஒன்றையொன்று அணித்தாக, மனிதனின் இயற்கையிலேயே அமைந்துள்ளன. இஸ்லாம் உருவாக்க முனையும் மனிதனில் இந்த இரண்டு அம்சங்களோடும் தொடர்புடைய அறிவு எத்தகைய முரண்பாடோ, மோதலோ இன்றி ஒரு சமபலமான நிலையில் தொழிற்படும். ஏனெனில், ஒன்று அவன் இறைவனுக்கு அடிபணிந்து வாழத் துணைபுரிய, மற்றது இறைவனின் சிருஷ்டிகளின் தன்மைகள், குண இயல்புகள், பிரபஞ்சத்தில் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிவைப் பெறத் துணை புரிகின்றது. எனவே, அறிவியல் அறிவினதும் ஆத்மீக அறிவினதும் ஒருங்கிணைந்த இந்த செயற்பாட்டின் விளைவாக இறைநம்பிக்கையும் இறையச்சமும் நிறையப் பெற்ற மனிதர்கள் உருவாகுவார்கள். இதனையே அல்-குர்ஆன் பின்வரும் வகையில் குறிப்பிடுகின்றது.

**“நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்குப் பயப்படுவதெல்லாம் (அறிவுடைய) கல்விமான்கள்தாம்.”** (35:28)

எனவே, இஸ்லாமியக் கல்வியின் இலட்சியத்தை விளங்குவதற்கு அறிவு பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்ற தெளிவு எமக்கு மிக அவசியமாகும். இஸ்லாத்தைப் பொறுத்தளவில் இறைத்தூதே எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினதும் அடிப்படையாகும். எல்லா வகையான அறிவினதும் மூலம் இறைவனாவான்.

## இரு வகையான அறிவு

அறிவு என்பது இஸ்லாமிய நோக்கில் இரண்டு வகையாக உள்ளது. ஒன்று மனித ஆத்மாவுக்கு உணவாகவும் உயிராகவும் அமைய, அடுத்த வகையான அறிவு மனிதனது உலகியல் வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் துணை புரிகின்றது. முதலாவது வகையான அறிவு இறைவனால், இறைதூது மூலமாக மனிதனுக்கு வழங்கப்படுகின்றது. அல்-குர்ஆனும் ஸுன்னாவும் இத்தகைய அறிவின் மூலாதாரங்களாகும். இரண்டாவது வகையான அறிவு மனிதனின் அவதானம், பரிசீலனை, பகுத்தறிவு, ஆராய்ச்சி ஆகிய தொழிற்பாடுகள் மூலமாகப் பெறப்படுகின்றது. முன்னையது இறைவனால் மனிதனுக்கு நபிமார்கள் மூலமாக 'வஹி' யின் துணை கொண்டு வழங்கப்படுகின்றது. பின்னையது சிந்தனை, பகுத்தறிவு, ஆராய்ச்சி என்பவற்றைப் பயன்படுத்தி மனிதனால் பெறப்படுகின்றது.

## மேற்கத்திய கல்வி முறையும் இஸ்லாமியக் கல்வியும்

எல்லா வகையான அறிவினதும், சத்தியத் தன்மையும் யதார்த்த நிலையும் இறைதூதின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படல் வேண்டும். மேற்கத்திய கல்வி முறையானது மனிதனின் உடலினதும், உள்ளம் சார்ந்த அறிவினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. பொதுவாகக் கூறின், மேற்கத்திய கல்வியின் நோக்கம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பிரஜையை உருவாக்குவதாகும். ஆனால், இஸ்லாமியக் கல்வி ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டுள்ளது. ஒரு நல்ல மனிதன் உருவாகும் போது, ஒரு நல்ல பிரஜை இயற்கையாகவே உருவாக்கப்படுகின்றான். எனவே, இஸ்லாமியக் கல்விக் கோட்பாடு, மேற்கத்திய கல்விக் கோட்பாடுகளிலிருந்து, அடிப்படையில் வித்தியாசப்படுகின்றது. இஸ்லாமியக் கல்வி மனிதனின் உளரீதியான அம்சங்களில் மட்டும் கவனம் செலுத்தி, அவனது ஆத்மீக உணர்வுகளைப் புறக்கணிக்க வில்லை. அது ஒரே நேரத்தில் மனிதனின் ஆத்மீக உணர்வுகளைப் பண்படுத்துவதையும் உடல், உள்ளம் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு தொழிற்படுகிறது. அது மனித ஆளுமையின் கூட்டு மொத்தமான முழு வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வெறுமனே மூளையில் தகவல்களைத் திணிப்பதோ, மனிதனின் தசைநார்களில் முறுக்கேற்றி அவனது உடலை வளர்ப்பதோ, இலக்கியக் கலை மூலம் அவனது அழகியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதோ இஸ்லாமியக் கல்வியின் நோக்கமன்று. மனிதனின் பண்பாட்டு, ஆத்மீக வளர்ச்சியே இஸ்லாமியக் கல்வியின் அடிப்படை நோக்கமாகும். இந்த அடிப்படை இலட்சியத்திற்கு ஊறுவிளைவிக்கும் எத்தகைய கல்வி முயற்சியும், இலக்கிய போதனையாயினும் கலைத்துறை சார்ந்த முயற்சியாயினும் இஸ்லாமியக் கல்வியின் ஓர் அங்கமாக ஆக முடியாது. கலைக்கும் இலக்கியத்திற்கும் கூட ஓர் ஆத்மீக கனபரிமாணத்தை அளித்து, கல்வியின் ஓர் அம்சமாக இணைப்பதே இஸ்லாமியக் கல்வியாகும்.

இஸ்லாத்தைப் பொறுத்தளவில் கல்வியின் உண்மையான நோக்கம் நம்பிக்கையும் (ஈமான்) அறிவும் (இல்ம்) ஒருங்கமைந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை ஒன்றையொன்று பரஸ்பரம் போஷித்து நிலைபெறச் செய்தலாகும். மனிதன் அதனை அடைவதற்கு முயற்சி செய்வது அவசியம் எனக் கருதத் தக்க ஓர் ஆத்மீகக் குறிக்கோளும் இலட்சியமுமற்ற கல்வியானது மனித சமூகத்திற்கு எத்தகைய நன்மையையும் அளிக்கும் என இஸ்லாம் கருதவில்லை. இறை நம்பிக்கையிலிருந்தும் இறை விசுவாசத்திலிருந்தும் துண்டிக்கப் பட்ட கல்வியானது ஒருதலைப் பட்சமான கல்வி எனக் கூறுவதைவிட **நவீன அறியாமை** என அதனை வர்ணித்தல் பொருத்தமாகும். இஸ்லாமிய நோக்கில் இறைவனில் நம்பிக்கை இழந்த ஒரு மனிதனின் அறிவு எவ்வகையிலும் ஆழமான அறிவாக அமைய முடியாது. அத்தகைய மனிதன் பல்வேறு கலைகளுடனும் நூல்களுடனும் தொடர்பு கொண்டு எத்துணை அறிவைப் பெற்றிருப்பினும் அந்த அறிவு கூறுபோடப்பட்ட (Fragmented) மேலோட்டமான அறிவாக இருக்குமேயன்றி, கூட்டுமொத்தமான (Total Integrated) அறிவாக இருத்தல் முடியாது. எனவே, இஸ்லாமியக் கல்வியின் நோக்கம் நற்பண்புகள் அமைந்த, இறையச்சம் நிறைந்த, ஷரீஆவின் அடிப்படையில் தனது உலக வாழ்வை அமைத்துக் கொண்டு, அதனைத் தனது விசுவாசக் கோட்பாட்டிற்கு இணங்க நெறிப்படுத்தி நன்மைகள் புரிந்து வாழும் நற்பண்புடைய மனிதனை உருவாக்குவதாகும்.

இஸ்லாத்தில் 'வணக்கம்' பற்றிய கோட்பாட்டின் பின்னணியில் இஸ்லாமியக் கல்விக் கோட்பாட்டை நாம் அணுகினால், இஸ்லாமியக் கல்வித் தத்துவத்தின் சிறப்பி யல்புகளை நாம் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இஸ்லாத்தில் 'வணக்கம்' என்ற பதம் மிக விரிவான கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. அது உடலாற் புரியப்படும் சில கிரியைகளை மட்டுமன்றி, நம்பிக்கை, சிந்தனை, உணர்வு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் ஆகிய அத்தனை அம்சங்களையும் உள்ளடக்குகின்றது.

"(எனக்கு வழிபட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்க வில்லை." (52:56)

## வணக்கம் என்ற வகையில் கல்வி

இந்த நோக்கில் பார்க்கும் பொழுது பூமியில் நாகரிகத்தை கட்டியெழுப்புவதும், பூமியின் கருவறையுள் புதைந்துள்ள செல்வங்கள், மூலவளங்கள், சக்திகளை மனித சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தலும் சடப் பொருட்களின் தன்மைகள் பற்றிய அறிவைப் பெற்று, அவற்றை வறுமை, நோய், அறியாமை போன்ற சக்திகளிலிருந்து மனித சமுதாயம் மீட்சி காணப் பயன்படுத்தலும், வணக்கமாகவும், அல்லாஹ்வை அவனது அடியான் நெருங்கத் துணை புரியும் செயல்களாகவும் இஸ்லாம் கருதுகின்றது. இஸ்லாத்திலே வணக்கம் பற்றிய இந்த விரிவான நோக்கின் நிலைக்களனில் கல்வி பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டை நாம் அணுகினால் அது இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கக் காணலாம்.

முதலில், கல்வியானது இறைவனின் ஏகத்துவத்தைப் பூரணமாக உணர்ந்து, அவன் மீது அல்லாஹ் விதியாக்கியுள்ள அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றி, ஷரீஆவின் கட்டளைகளைப் பேணி, இறைவனின் ஆணைகளைச் செயற்படுத்தி வாழ மனிதனுக்குத் துணை புரிதல் வேண்டும்.

இரண்டாவதாக, பிரபஞ்சத்தில் காணப்படும் அல்லாஹ்வின் விதிமுறைகளையும் சட்டங்களையும் விளங்கி, பிரபஞ்சத்தையும் பூமியையும் இயற்கையின் ஒவ்வொரு படைப்பினத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து, அல்லாஹ் சிருஷ்டித்துள்ள அனைத்தையும் அவனது திருப்தியைப் பெறும் வகையில் மனிதன் பயன்படுத்துவதற்குக் கல்வியானது அவனுக்குத் துணை புரிதல் வேண்டும். இங்கு தான் இஸ்லாமிய ஷரீஆவோடு தொடர்புடைய கலைகள், மருத்துவம், கணிதம், வானவியல், உளவியல், சமூகவியல் ஆகிய கலைகள் ஒரே நேர்க்கோட்டில் சந்திக்கின்றன. ஏனெனில், இஸ்லாமியக் கோட்பாடுகள், மதிப்பீடுகள், இஸ்லாமிய அணுகல் முறை ஆகியவற்றின் கட்டுப்கோப்பிற்குள் இக்கலைகள் இயங்கினால் அவை இஸ்லாமியக் கலைகளே.

கல்வியைத் தனிமனிதக் கல்வி (Personal), சமூகக் கல்வி (Social Education), சுயகல்வி (Self Education), வெளிவாரி நிலையங்கள் மூலம் (External Agencies) பெறப்படும் கல்வி என பல்வேறு வகையாகப் பாகுபாடு செய்தல் உண்மையில் சில போது தவிர்க்க முடியாததாக அமைந்தாலும் கல்வியின் முழுமைத்துவத்தையும் முழுமையான இலட்சியத்தையும் பாதிக்கும் வகையில் அது அமைதல் கூடாது. கல்வி என்பது முழு வாழ்க்கையையும் உள்ளடக்கி, மனித நாகரிகம், பண்பாடு ஆகிய அனைத்தையும் தன்னுள் இணைத்துக் கொள்ளும் ஆற்றல் படைத்ததாகும். தனிமனிதனையும், அவன் அங்கம் வகிக்கும் சமூகத்தையும் அது வளர்ச்சியடையச் செய்கின்றது.

## இஸ்லாமியக் கல்வியின் இலட்சியம்

மனிதனில் மத நம்பிக்கையையும் உணர்வையும் வளர்த்தலே கல்வியின் அடிப்படை நோக்கமாக அமைதல் வேண்டும். கல்வி, மனிதனில் இயற்கையாக அமைந்துள்ள 'தெய்வீக உணர்வு' எனும் வெளிச்சத்தைத் தூண்டி விட்டு, அது மேலும் ஒளிபெறச் செய்தல் வேண்டும். மனித சிருஷ்டியின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் பாதையை அது காட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். படைப்பினங்களில் மனிதனின் நிலையைத் தெளிவாக உணர்த்தி, அவனது சடவாத சக்திகளை மட்டு மன்றி, ஒழுக்க, ஆத்மீக ஆற்றல்களையும் புலப்படுத்தக் கல்வி துணை செய்தல் வேண்டும். இஸ்லாம் அத்தகைய கல்வியையே இலட்சியமாகக் கொண்டுள்ளது. சுருங்கக் கூறின், இஸ்லாத் தின் திருத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மனித சமுதாயத்திற்கு எந்தப் பணியினை ஆற்றினார்களோ அதே பணியை இஸ்லாமியக் கல்வி ஆற்றல் வேண்டும்.

"எழுத்தறிவில்லாத (அரபி) ஜனங்களுக்காக அவர்களிலேயே ஒரு தூதரை(த் தேர்ந்தெடுத்து) அவன் அனுப்பி வைத்தான். அவர்கள் இதற்கு முன்னர், பகிரங்கமான வழிகேட்டிலிருந்த போதிலும், அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்." (62:2)

மனிதனை இருளிலிருந்து நேர்வழி என்னும் ஒளியின் பக்கம் அழைத்துச் செல்லும் புனிதப் பணிக்காக ரஸூல் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இந்தப் பணியையே இஸ்லாமியக் கல்வியும் ஆற்றுதல் வேண்டும். இந்த அடிப்படையில் அமைந்த இஸ்லாமியக் கல்வியை, லோகாயதம், அறிவியல், மார்க்ஸிஸம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள நவீன கல்வியோடு எவ்வகையிலும் ஒப்பிட முடியாது. இஸ்லாமியக் கல்வித் தத்துவத்தில் "ஹிக்மா" என்னும் ஞானம் சிறப்பிடம் பெறுகின்றது.

"(அல்லாஹ்), தான் விரும்பியவர்களுக்கே (கல்வி) ஞானத்தைக் கொடுக்கின்றான். ஆதலால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எவர்(கல்வி) ஞானம் கொடுக்கப்பெறுகின்றாரோ அவர், நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்றுவிடுவார். ஆயினும், (இந்த ஞானக் கல்வியைக் கொண்டு) அறிவாளிகளைத் தவிர (மற்றெவரும்) உணர்ச்சி பெற மாட்டார்கள்."** (2:269)

குர்ஆனின் நோக்கில் "ஹிக்மா" என்னும் அறிவு ஞானமானது இறை தூதான வஹியின் வெளிச்சத்தில் "ஹகீம்" (அனைத்தும் அறிந்தவன்) என்ற தன்மையைப் பொதிந்த இறைவனைப் பற்றிய அறிவிற்கு இட்டுச் செல்கின்றது.

## முரண்பட்ட கருத்துக்கள்

நவீன கல்விக் கோட்பாடு 'ஹிக்மா' என்னும் ஞானத்திற்கு எத்தகைய இடமும் அளிக்கவில்லை. நவீன கல்வித் தத்துவத்தின் பண்பு எதுவெனில், மனித இயற்கையோடு தொடர்புடைய சமூக, சடவாத, தனிமனிதன் சார்ந்த அல்லது மனிதனின் உடல், உள்ளம் சார்ந்த அம்சங்களில் ஏதாவதொன்றை எடுத்து, அதன் அடிப்படையில் ஒரு கல்விக் கோட்பாட்டைத் தோற்றுவித்தலாகும். நவீன உலகில் கல்வியின் நோக்கம், இலட்சியம் பற்றித் தெளிவின்மையும், கருத்து மயக்கமும் காணப்படுகின்றது. சில கல்விமான்கள் கல்விக்கு ஓர் இலட்சியமும் நோக்கமும் அவசியமா என்று கூடக் கேள்வி எழுப்புகின்றனர். R. S. Peters என்பவர் தனது Authority, Responsibility and Education என்ற நூலில் "Must Educators have an aim"? (கல்வியைப் புகட்டுவோருக்கு ஒரு நோக்கம், இலட்சியம் அவசியமா?) என்ற தலைப்பில் இதனை ஆராய்ந்து, 'கல்விக்கு ஒரு குறிக்கோள், நோக்கம் அவசியமன்று' என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். இன்னும் சிலர் கல்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடும் ஏனைய கலைகளைப் போன்று எந்தக் கொள்கையையும் மதிப்பீடுகளையும் சாராததாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளனர். நவீன உலகில் குறிப்பாக மேற்கத்திய சமூகத்தில் மனிதனின் வாழ்வின் நோக்கம், மனித சிருஷ்டியின் இலட்சியம் பற்றிய தெளிவின்மை நிலவுவதால் கல்வியின் நோக்கத்தைப் பொறுத்தளவிலும் தெளிவின்மையும் மயக்கமும், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தத்துவங்களும் காணப்படுகின்றன.

## பகுத்தறிவின் எல்லை

நவீன கல்வித் தத்துவத்தின் இன்னொரு முக்கிய அம்சம், மனிதனின் பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அவனது உள்ளம் புறக்கணிக்கப்படுவதாகும். நவீன கல்வியின் இந்த சிந்தனைப் பாங்கானது கல்வித் துறையில் ஒரு மயக்க நிலையைத் தோற்றுவித்துள்ளது. ஏனெனில், சம்பூர்ணமான ஆளுமையின் அடிப்படையில் நாம் நோக்கினால் அவன் வெறுமனே பகுத்தறிவை மட்டும் பெற்ற ஒரு படைப்பாகக் காட்சி நல்கவில்லை. அவனது வாழ்வோடு தொடர்புடைய அன்பு, காதல், கலை, மரணம் ஆகியவற்றைப் பகுத்தறிவு ரீதியில் விளக்கும் ஆற்றலும் எவருக்கும் இல்லை. மனித வாழ்வே பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதமாகும். அனைத்துக்கும் மேலாக, எங்கள் குழந்தைகளுக்குக் கல்வியைப் புகட்டும் பொழுது எங்களது ஆற்றல், சக்தி முழுவதையும் அவர்களது வாழ்வின் சில அம்சங்களில் மட்டும் செலுத்தி, ஏனைய அம்சங்களைப் புறக்கணிக்க எத்தகைய உரிமையும் எங்களுக்கு இல்லை. குறிப்பாக, மனிதனின் மத்திய தளமான, கல்வியின் யதார்த்தத்தை உணரக் கூடிய மூலமான மனித இதயத்தை(கல்ப்) கல்வித்துறையில் புறக்கணிப்பதானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வில் அறிவினது எல்லையைத் தாண்டிய ஒரு விரிந்த உலகினைப் புறக்கணித்து, அவனை புலன்களின் அனுபவத்தினால் பெறப்படும் அறிவென்னும் குறுகிய சிறைச்சாலையில் விலங்கிட்டு அடிமைப்படுத்துவதாகும். மனிதனை அவனது இயற்கைத் தன்மைக்கும் (பித்ரா) அறிவிற்கும் (அக்ல்) பொருத்தமற்ற ஒரு வட்டத்துள் மட்டுப்படுத்துவதாகும்.

## 'இதயம்'

மனிதனின் உள்ளம் (கல்ப்), மனிதனின் சாதாரண பகுத்தறிவு நிலையைத் தாண்டிச் செல்லும் அதன் ஆற்றல், உண்மையினதும் யதார்த்தத்தினதும் சத்தியத்தினதும் வெளிச்சத்தைத் தரிசிக்க அது பெற்றிருக்கும் சக்தி ஆகியவற்றை நவீன விஞ்ஞானியாலோ, நவீன உளவியல் அறிஞர்களினாலோ புரிந்து கொள்ளல் அசாத்தியமாகும். ஏனெனில் நவீன அறிவியல் புலன்களுக்கு உட்பட்ட அறிவோடு மட்டுப்படுத்தப்பட்டே தொழிற்படுகின்றது. நவீன உளவியல் ஆய்வினைப் பொறுத்தளவில் என்பது-இதயம் என்பது சில உடல்ரீதியான தொழிற்பாடுகளையுடைய ஓர் உறுப்பாகும். எனவே, இங்கு இஸ்லாமியப் பாரம்பரிய நோக்கில் இதயம் எனக் கருதப்பட்டது எது என்ற விளக்கம் அவசியமாகின்றது. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்கள்:

*"நாங்கள் 'இதயம்' (கல்ப்) என்ற பதத்தில் மனிதனின் யதார்த்தத் தன்மையையே குறிப்பிடுகின்றோம். இது சிலபோது 'ரூஹ்' (ஆத்மா) எனவும் சிலபோது 'நப்ஸ்' (உள்ளம்) எனவும் அழைக்கப்படுகின்றது. இப் பதத்தால் மனித உடலின் இடதுபக்கத்தில் அமைந்துள்ள தசைக்கட்டியை நாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதவில்லை. ஏனெனில், அந்த உறுப்பு பெறுமதியற்றதாகும். அது மிருகங்களில் - ஏன், இறந்தவர்களில் கூட காணப்படுகின்றது. அதனைக் கண்ணால் பார்க்கவும் முடியும். கண்ணால் பார்க்கக் கூடிய அனைத்தும் இவ்வுலகைச் சார்ந்தவையே (ஆலமுஷ் ஷஹாதா). இதயத்தின் யதார்த்தம் மறுவுலகைச் சார்ந்தது. அது இவ்வுலகிற்கு ஒரு பரதேசியாகவே வந்துள்ளது. உடலில் கண்ணுக்குப் புலப்படும் வகையில் காணப்படும் தசை அதன் வாகனமாகும். உடலின் உறுப்புக்கள் அனைத்தும் அதன் ராணுவமாகும். ஆனால், இதயமோ உடல் முழுவதையும் ஆட்சி புரியும் அரசனாக விளங்குகின்றது. இறைவனை உணர்தலும் அவனது அழகை அனுபவித்தலும் அதன் தொழிற்பாடுகளாகும்." (இமாம் கஸ்ஸாலி-கீமியாஏ ஸஆதா)

எனவே, வாழ்க்கையின் நித்திய உண்மைகளான வாழ்வு, மரணம், பிரபஞ்சத்தினதும் மனித வாழ்வினதும் அர்த்தம், இலட்சியம் ஆகியவற்றிற்கு இடமளிக்காத எந்தக் கல்வி முறையும் கல்வி முயற்சிகளில் ஒருமைப்பாட்டையும் ஒழுங்கையும் தோற்றுவிக்க முடியாது.

நாம் மேலே விளக்கிய மேற்கத்திய லோகாயதக் கல்வித் தத்துவத்தின் பின்னணியில் இஸ்லாமியக் கல்வித் தத்துவத்தை நோக்கின் அதன் சிறப்பியல்புகளை நாம் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியும். கல்வியின் நோக்கம் குழந்தையின் அல்லது மாணவனின் உள்ளத்தில் உணர்வுகளையும் தகவல்களையும் திணிப்பதன்றி, அவனைத் தூய்மையும் நேர்மையும் நிறைந்த ஒரு வாழ்விற்கு ஆயத்தப்படுத்தலாகும் என்பதே இஸ்லாமியக் கல்வித் தத்துவமாகும் என முஸ்லிம் கல்வியறிஞர்கள் அனைவரும் ஏகோபித்து ஒப்பியுள்ளனர். (Al-Ibrashi, Education of Islam,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

p.11) இஸ்லாமிய ஒழுக்கவியலின் விழுமிய கோட்பாடுகளின் அடிப்படையில், மாணவனின் குண ஒழுக்கங்களை உருவாக்குவதில் பூரண கவனம் செலுத்துவதே இஸ்லாமியக் கல்வியின் உயர் இலட்சியமாகும்.

சில கல்விக் கோட்பாடுகள் தனி மனிதனின் ஆற்றல்களை வளர்ப்பதனையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளன. புராதன கிரேக்க சமூகத்தின் Sophistகள் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டனர். ஆனால், வேறு சில கல்விக் கோட்பாடுகள் சமூகத்தின் நன்மையையே முக்கிய நோக்கமாகக் கொண்டு தனி மனிதனின் தேவை, உரிமைகளைப் புறக்கணிக்கும் வகையிலும் தனிமனிதனின் ஆளுமையை சமூகத்தினூடே மங்கி மறையச் செய்யும் வகையிலும் அமைந்துள்ளன. இஸ்லாம் இவையிரண்டிற்குமிடையில் ஒரு மத்திய வழியைக் கடைப் பிடிக்கின்றது. இஸ்லாமியக் கல்விக் கோட்பாடு தனிமனிதனின் நலவுரிமைகள், சமுதாயத்தின் தேவைகள் ஆகிய இரண்டையும் ஒன்றுக்கொன்று முரணில்லாத வகையில் பூர்த்தி செய்கின்றது.

## மக்ஸ் வெபரின் பாகுபாட்டு முறை

தனிமனிதனின் தேவைகள், சமூகத்தின் நலவுரிமைகள்-அபிலாஷைகள் ஆகிய இரண்டிற்குமிடையில் இஸ்லாம் கடைப்பிடிக்கும் இந்தச் சமபலமானது இஸ்லாமியக் கல்வியின் எல்லாத்துறைகளிலும், குறிப்பாக அதன் நோக்கங்கள், இலட்சியங்களில் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றது. இதனைத் தெளிவாக விளங்குவதற்கு Max Weber கல்வியின் வகைகளைப் பாகுபாடு செய்யும் முறை பற்றிய விளக்கம் எமக்கு மிகவும் பலனளிக்கும். மக்ஸ் வெபர் கல்வியை மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார். முதலாவது வகையை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Charismatic Education என அழைக்கின்றார். மனிதனது வாழ்வில் அல்லது சமூகத்தில் மதம் மிக உயர்ந்த நிலையை அடையும் காலப் பிரிவிலேயே இவ்வகையான கல்வி முறை ஆதிக்கம் செலுத்தும். அது மனிதனின் மத உணர்வையும் புலன்களுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களைப் பெறுவதற்கான மனப்பக்குவத்தையும் தூண்டிவிடும். இத்தகைய கல்வியின் முக்கிய நோக்கம் சில ஆற்றல்களை வளர்ப்பது அல்லது திறமைகளை அளித்தலன்றி, உள்ளத்தில் மறைந்துள்ள சில உணர்வுகளைத் தூண்டிவிடுவதாகும். ஸூபிகளின் "தர்பிய்யா" என்னும் பயிற்சி முறையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். தனிமனிதனின் உள்ளார்ந்த வளர்ச்சியையே இது அடிப்படை நோக்கமாக கொண்டுள்ளது.

இதைவிட வித்தியாசமான இரண்டாவது வகையான கல்விமுறை "Education for Culture" பண்பாட்டு வளர்ச்சிக்கு வகைசெய்யும் கல்வியாகும். பாரம்பரியமாக வழங்கப்பட்டு வரும் சில சமூக மதிப்பீடுகளின் அடிப்படையில் ஒருவனுக்கு அறிவுப் போதனை வழங்கினால் அவன் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைப் பெற்ற சமூகப் பிரஜையாக உருவாகுவான் என்ற சித்தாந் தத்தின் அடிப்படையில் இக் கல்விக்கோட்பாடு உருவாக்கப் பட்டுள்ளது. கல்வியின் தன்மையையன்றி அந்தக் கல்வி உருவாக்கப்படுவதால் சமூகத்தினர் பெறப்போகும் சமூகப் பண்புகளையே அது நோக்கமாகக் கொண்டுள்ளது. இங்கு தனி மனிதனிலும் சமூகமே சிறப்பிடம் பெறுகின்றது.

மூன்றாவது Specialist Education என அழைக்கப்படும் நிபுணத்துவக் கல்வியாகும். அது குறிப்பிட்ட அறிவை அல்லது ஆற்றலை (Skill) வழங்குவதையே நோக்கமாகக் கொண் டுள்ளது. நவீன கைத்தொழில் சார்ந்த, சமூகத்திற்கு அவசியமான தொழில்களில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குதல் இக்கல்வியின் குறிக்கோளாகும். நவீன தொழிற் கல்லூரிகளில், இயந்திர ரீதியாக, மனிதனின் ஆளுமை, பண்பாட்டு வளர்ச்சி பற்றிய அக்கறையின்றி, வெறுமனே வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் இவ்வகையைச் சேர்ந்த னவாகும்.

இஸ்லாம் இம்மூன்று வகையான கல்விகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் உளப் பண்பாட்டுக்குச் சிறப்பிடமளித்து, அதனைச் சமூக விடயங்களிலும் தொழில் முயற்சிகளிலும் பிரதிபலிக்கச் செய்யத் தக்க ஒரு கல்வித் தத்துவத்தை கொண்டுள்ளது.

## பாரம்பரிய இஸ்லாமியக் கல்வி முறை

பாரம்பரிய இஸ்லாமியக் கல்வியானது சமுதாயத்திலிருந்து வேறுபட்ட ஒரு தொழிற்பாடாக அமையவில்லை. அது சமூகத்தின் ஏனைய தொழிற்பாடுகளோடும் நிறுவனங் களோடும் இணைந்து செயற்பட்டதுடன் அவற்றினால் வலுவூட்டப்படுவதாகவும் அமைந்தது. எனவே, இத்தகைய கல்வி முறையில், முஸ்லிம் சமூகத்தின் மத்திய நிலையமான மஸ்ஜித் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றதில் எத்தகைய ஆச்சரியமும் இல்லை. இந்தக் கல்வி முறையில் ஆசிரியனோ அல்லது மாணவனோ சமூகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் செயல்படவில்லை. நாளாந்த வாழ்க்கையின் ஏனைய விவகாரங்களையும் கல்வியோடு இணைத்ததாக அவர்கள் வாழ்வு அமைந்திருந்தது. ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டதால் பல்வேறு பாடங்கள், விடயங்களைப் படிக்கும் அதே நேரத்தில் ஒழுக்க, ஆத்மீக, பண்பாட்டுப் பயிற்சியையும் ஆசிரியர் மூலம் மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றான்.

இஸ்லாமியப் பாரம்பரியக் கல்வி முறையில் ஒரு மாணவனின் சாதனையின் தரம், ஒரு மனிதன் என்ற வகையில் அவனது முழு ஆளுமையும் பெற்றிருக்கும் வளர்ச்சியை அடிப்படையாக வைத்தே கணிக்கப்பட்டது. அவனது இறை பக்தி, ஒழுக்க நடத்தை என்பன ஏனைய துறைகளைப் போன்றே, அல்லது அவற்றைவிட முக்கியமானதாகக் கருதப்பட்டது.

இஸ்லாமியக் கல்வி முறையின் மையமாக அல்-குர்ஆன் விளங்கியது. இஸ்லாமியக் கல்வியின் ஆரம்பத்திலிருந்தே அல்-குர்ஆனைக் கற்கும் பணி மிக முக்கிய இடத்தைப்பெற்றது (இப்னு கல்தூன் முகத்தமா 397-398). முஸ்லிம் குழந்தையின் கல்வி குர்ஆனை ஓதுவது, மனனம் செய்வதுடன் ஆரம்பமாகியது. இஸ்லாமிய மரபு வழிக் கல்வியின் (Formal Education) ஆரம்பப் படித்தரமாக 'மக்தப்' அல்லது 'குத்தாப்' விளங்கியது. மக்தப் என்பது ஆரம்பப் பாடசாலைக்குச் சமமானதாகும். மத்ரஸா என்பது இடைநிலையிலும், மஸ்ஜித் அல்லது ஜாமிஆ உயர் நிலையிலும் இயங்கியது. பல்கலைக்கழகங்களுக்கும் மஸ்ஜித்களுக்குமிடையே காணப்பட்ட இணைப்பு முறைக்கு அல்-அஸ்ஹர் மிகச் சிறந்த உதாரணமாகும். சமூகத்தின் ஓர் அங்கமாகப் பள்ளியோடு இணைந்த பல்கலைக்கழகம் விளங்கியதால் கல்வியைப் பெறுவதற்கு அதன் வாயில் அனைவருக்கும் திறந்திருந்தது.

மாணவர்கள் சித்தியடைதல் பரீட்சையின் அடிப்படையில் நடைபெறவில்லை. மாணவனின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் ஆசிரியர் மதிப்பீடு செய்து, மாணவரின் அடுத்த படித்தரத்தைத் தீர்மானிப்பார். கல்விப் போதனையில் மாணவரும் ஆசிரியரும் கூட்டாகப் பங்கு கொள்வர். மாணவர்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களைச் சொல்வதெழுதுதல் அடிப்படையில் படித்துக் கொடுப்பதை விட ஆசிரியர் கருத்துக்களை மாணவரோடு விவாதித்து விளக்குவதே பாடபோதனை முறையாக இருந்தது. இந்த வகையில் மாணவனின் அறிவாற்றலும், ஆளுமையும் வளர்ச்சியடைய வகை ஏற்பட்டது.

ஆசிரியர் சமூகத்திலும் கல்வித் துறையிலும் வகித்த பங்கு காரணமாக, வெறுமனே அறிவு புகட்டுபவராகவும் அறிவு பெருக வழிகாட்டுபவராகவும் மட்டும் அவர் விளங்கவில்லை. நன்னடத் தைக்கும் ஒழுக்க வாழ்விற்கும் ஓர் உதாரணமாகவும் அவர் விளங்கினார். கல்வி போதித்தல் வெறுமனே ஒரு தொழிலாக அன்றி சமூகத்தில் சம்பூர்ணமாகவும் நிறைவாகவும் ஆற்ற வேண்டிய ஒரு பணியாகவும் அமைந்திருந்தது. எனவே, எல்லா வகையிலும் பாடசாலை அல்லது கல்விக்கூடம் சமூகத்தின் பிரதிபிம்பமாக விளங்கியது.

இஸ்லாத்தின் ஆரம்பகாலப் பிரிவில் கல்வி போதித்தல் ஒரு சன்மார்க்கக் கடமையாகக் கருதப்பட்டது. ஆனால், கல்வி நிறுவனங்கள் தோன்றி வளர ஆரம்பித்ததும் ஆசிரியர்கள் வேதனம் பெற வகை செய்யப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்களது கடமைகள், உரிமைகள் என்பன வரையறுக்கப்பட்டன (Tibawi-p.41). மத்ரஸாக்கள், மஸ்ஜித்களுக்காக ஆட்சி யாளர்கள், செல்வந்தர்கள் நன்கொடையாக அளித்துள்ள சொத்துக்களின் வருமானத்திலிருந்து ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கப்பட்டது. எனவே, ஓர் அறிஞர் எங்கு சென்றாலும் அவருக்கு வாழ்க்கை நடாத்துவதற்கான வாய்ப்பு இருந்தது. அக்காலத்தில் ஓர் அறிஞர் முஸ்லிம் உலகின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு எத்தகைய சிரமமுமின்றி பிரயாணம் செய்வது மரபாக இருந்தது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் செய்கையில் வழியில் உள்ள கல்வி நிறுவனங்களில் விரிவுரை நிகழ்த்தியோ அல்லது மாணவனாக இருந்தோ ஏதோ ஒரு வகையில் வேதனம் பெறும் வாய்ப்பு அவருக்கிருந்தது. ஓர் ஆசிரியர், அவர் கல்வி போதிக்கும் அதே நிறுவனத்தில் ஒரே நேரத்தில் ஆசிரியராகவும் மாணவராகவும் விளங்கும் வாய்ப்பும் இருந்தது. **"தொட்டிலிலிருந்து மண்ணறை வரை அறிவைத் தேடுங்கள்"** என்ற ஹதீஸின் அடிப்படை, இந்த மரபு தோன்றக் காரணமாக அமைந்தது எனலாம்.

அரசாங்க நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் வெறும் சான்றிதழ் ஒருவருக்கு கல்வி போதிக்கும் தகைமையை வழங்கவில்லை. ஒருவரது அயராமுயற்சியினாலும், உழைப்பி னாலும், திறமையினாலுமே அதனை அடைய வேண்டியிருந்தது. ஓர் அறிஞர், அவரால் அறிவு புகட்டப்பட்ட மாணவர் தனது கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என்ற முடிவிற்கு வந்தால், அவர் துறைபோகக் கற்ற கலையை அல்லது நூலைப் பிறருக்குப் போதிக்கும் அனுமதியை அவருக்கு வழங்குவார். இந்த அனுமதி 'இஜாஸா' என அழைக்கப்பட்டது. மேற்குலகில் Licantiate என வழங்கப்படும் சான்றிதழ் மரபு "இஜாஸா" என்ற சொல்லினடியாகத் தோன்றியது. அந்த அனுமதியின் பெறுமதி அதனை வழங்கும் ஆசியரின், அறிஞரின் மதிப்பிலேயே தங்கியிருந்தது. "இஜாஸா" என்பது இறுதியான தகைமையாக அமையவில்லை. அதனைப் பெற்ற ஆசிரியரும், அவரது மாணவர்களுக்குத் தகுதியான ஓர் ஆசிரியர் என நிரூபிக்க வேண்டியிருந்தது. அதனைத் தொடர்ந்தே ஒரு குறிப்பிட்ட கலையைப் போதிக்கத் தகுதிவாய்ந்தவராக அவர் சமூகத்தவரால் கணிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்புரை

இஸ்லாமியக் கல்வித் தத்துவம் பற்றிய இந்த ஆய்வானது இக்கல்வித் தத்துவத்தின் சிறப்பியல்புகளையும் அது அடிப்படையிலேயே மேற்கத்திய கல்வித் தத்துவத்திலிருந்து வேறுபட்டிருப்பதையும் குறித்துக் காட்டுகின்றது. இந்த ஆய்வு இஸ்லாமிய கல்வித்தத்துவம் பற்றிய பின்வரும் முடிவுகளைத் தருகின்றது.

1. இஸ்லாமியக் கல்வியானது சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் தொழிற்பட்டது. இஸ்லாமியக் கல்வி நிறுவனங்கள் சமூகத்தினடியாகத் தோன்றி சமூகத்தின் தேவைகளை, அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இயற்கையாகவே வளர்ச்சியடைந்து ஓர் அமைப்பைப் பெற்றன.

2. இஸ்லாமியக் கல்வி நிறுவனங்கள் அவற்றின் கல்வித் திட்டத்தில் ஒழுக்க, மத, பண்பாட்டுப் பயிற்சிக்கு முக்கிய இடமளித்தன.

3. இஸ்லாமிய பாரம்பரியக் கல்வி முறையில் பொதுவான பரீட்சை முறை காணப்படவில்லை. மாணவன் தான் விரும்பிய அறிவுத் தரத்தை அடையும் வகையில் அறிவு வளர்ச்சியைப் பெற்றான். அவனது வளர்ச்சியானது ஆசிரியரால் மிக நுட்பமாக அவதானிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

4. பாரம்பரிய இஸ்லாமியக் கல்வியானது மாணவனுக்கு அவனது விருப்பமான துறையைத் தேர்ந்தெடுத்து எத்தகைய தடையுமின்றி அத்துறையில் அறிவு வளர்ச்சியைப் பெறும் வாய்ப்பை அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முஸ்லிம் கல்வி நிறுவனங்கள் முஸ்லிம் சமூகத்தின் வலிமையையும் உயர் தன்மையையும் பிரதிபலித்தன.

6. இஸ்லாமியக் கல்வியானது ஆசிரியருக்கும் மாணவனுக்குமிடையில் நிலவிய நெருங்கிய தொடர்பின் அடிப்படையில் அமைந்திருந்தது. ஆசிரியர், தொழிலுக்கு வழிகாட்டியாக மட்டுமன்றி, ஆத்மீக வழிகாட்டியாகவும் விளங்கினார்.

7. முஸ்லிம் கல்வி நிறுவனங்கள் சமூகத்தின் மதிப்பீடுகளைப் பேணும் பணியைப் புரிந்து, சமூகப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் அமைப்புக்களாக விளங்கின. அவை சமூகத்தின் மாற்றமும் நெகிழ்ச்சியும் அவசியப்பட்டபோது எத்தகைய சிரமமுமின்றி இம்மாற்றங்களுக்கு இயைந்து கொடுக்கும் தன்மையையும் பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய ஒழுக்கவியல் கோட்பாடு

ஒவ்வொரு சமூகத்திற்கும் அதன் நம்பிக்கைக் கோட்பாடு, அதன் இலட்சியவாதம், வாழ்க்கை நெறி, சமூக அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகிய ஓர் ஒழுக்கக் கோட்பாடு உண்டு. ஏனெனில் ஒழுக்கக் கோட்பாடுகள் வெறுமனே சூனியத்திலிருந்து தோன்றுவதில்லை. அவை சமூகத்திலிருந்தே உருவாகின்றன. எனவே, ஒவ்வொரு சமூகத்தின் ஒழுக்கக் கோட்பாடும், அதன் கொள்கை நெறி, இலட்சியவாதம், வாழ்வியல் என்பவற்றிற்கேற்ப வித்தியாசப்படும்.

## ஒழுக்கம் பற்றி அரிடிஸ்டோட்டில்

மனித இன வரலாற்றில் ஒவ்வொரு காலப்பிரிவிலும் தத்துவ ஞானிகள், சிந்தனையாளர்கள் அவர்களது சிந்தனை, பகுத்தறிவு ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு ஒழுக்கக் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். கிரேக்கத் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் "மனிதன் மகிழ்ச்சியுடனும் களிப்புடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழத் துணைபுரிவதே ஒழுக்கம்" எனக் கருதுகிறார். அவருடைய கருத்துப்படி மகிழ்ச்சியை அடையத் துணை செய்யும் சாதனமே ஒழுக்கமாகும். கிறிஸ்தவ ஒழுக்கவிய லாளர்கள் (Christian Moralists) இக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒழுக்கம் என்பது ஒன்றை அடையத் துணைபுரிவதைக் கணிப்பாகக் கொண்டு அதனை மதிப்பீடு செய்வது தவறென்றும், ஒழுக்கத்தை அதன் பயன்பாடுகளையும், விளைவுகளையும் நோக்காது ஒழுக்கத்திற்காகவே மதித்தல் வேண்டுமெனவும் அவர்கள் கூறுகின்றனர்.[1]

## ஒழுக்கவியலும் மேற்கத்திய அறிஞர்களும்

ஒழுக்கவியல் வரலாற்றில் ஸ்பினோஸா (Spinoza) என்னும் அறிஞர் முக்கிய இடம் பெறுகின்றார். நன்மை, தீமை பற்றிய சார்பியலான கோட்பாட்டை அவர் சமர்ப்பித்தார். அதாவது, செல்வமோ, புகழோ, புலன் இன்பங்களோ மனிதனுக்கு இணங்கிய வகையில் அவனுக்குச் சாதகமாக அமைந்தால் அவை நன்மையானவையென்றும், மனிதனுக்குப் பாதகமாக அமைந்தால் அவை தீமையானவையென்றும் குறிப்பிட்டார். ஜெரேமி பென்தாம் (Jeremy Bentotam), ஜோன் ஸ்டுவார்ட் மீல் (John Stuart Mill) போன்றோர் பயனுடைமை(Utility)யின் அடிப்படையில் அமைந்த ஒழுக்கவியலைத் தோற்றுவித்தனர். அதாவது, இவர்களுடைய கருத்துப்படி சமூகத்தில் பெரும்பான்மையினருக்கு பெரிய அளவிலான மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அளிப்பவை எவையோ அவை நன்மையானவை. லோகே (Locke) என்பார் இத்துறையில் தெரிவிக்கும் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவரைப் பொறுத்தளவில் நன்மையும் தீமையும் மகிழ்ச்சியோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தோடும் தொடர்புடையவை. அதாவது. நன்மையென்பது மனிதனின் மகிழ்ச்சியை அதிகரித்து அவனது துன்பம், கவலை நோவினை ஆகியவற்றைக் குறைப்பதாகும்.[2]

கான்ட் என்ற அறிஞர் அவரது "Metaphysics of Morals" என்னும் நூலில் விளக்கிய ஒழுக்கக் கோட்பாடு கணிசமான வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. நன்மை அல்லது ஒழுக்கத்தை அதன் வட்டத்திலிருந்து விடுவித்து புறக் காரணிகளை அதன் நோக்கமாகவும், குறிக்கோளாகவும் அளிக்கின்ற மேற்குறிப்பிட்ட ஒழுக்கக் கோட்பாடுகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் மதக் கோட்பாடுகள், பௌதிகத் தத்துவங்களிலிருந்து விடுபட்ட ஒழுக்கக் கோட்பாடொன்றை நிறுவ முனைந்தார். "எல்லா ஒழுக்கக் கோட்பாடுகளின் மூலமும் அடிப்படையும் பகுத்தறிவே" என்பது அவரது கருத்தாகும். நீட்சே (Neitsche) என்பார் மனிதனின் அதிகார பலத்தை வளர்க்க எது துணை புரிகின்றதோ அதுவே ஒழுக்கமாகும் என்ற கோட்பாட்டைத் தோற்றுவித்தார். மார்க்ஸீயக் கோட்பாடு ஒழுக்கவியலைப் பொருளியல் முயற்சியோடு தொடர்புபடுத்தி விளக்கியது. ஒழுக்கக் கோட்பாடு என்பது காலமாற்றத்திற்கு உட்படாத நித்திய தன்மையைக் கொண்டது என்ற கருத்தை கால்மார்க்ஸ் நிராகரித்தார். மார்க்ஸிய சித்தாந்தவாதியான ஏன்ஜல்ஸ் தனது Anti Duhring என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "எல்லாக் காலத்துக்கும் இணைந்து செல்லக் கூடிய, நித்தியமான பண்புகளைக் கொண்ட சமூகங்களின் மாற்றங்கள், வரலாற்றின் வளர்ச்சிப் படிகளைத் தாண்டிச் செல்கின்ற ஒழுக்கக் கோட்பாடுகள் உண்டு என்ற கருத்தை நாங்கள் பூரணமாக நிராகரிக்கின்றோம்." இந்த வகையில் மார்க்ஸிஸக் கோட்பாட்டின்படி ஒழுக்கவியலும் சமூக மாற்றங்களுக்கேற்ப மாற்றமடையக் கூடியதாகும்.[3]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன கிரேக்கர் காலம் முதல் நவீன ஐரோப்பியர் காலம் வரையிலான ஒழுக்கவியல் பற்றிய கருத்துக்களின் இப் பொதுப் பின்னணியானது, மனிதனின் பகுத்தறிவினதும் சிந்தனையினதும் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட எந்தவொரு ஒழுக்கவியல் கோட்பாடும் வாழ்வில் நித்தியக் கோட்பாடாகச் செயற்பட்டு, முழு மனித இனத்திற்கும் பொருத்தமானதொரு ஒழுக்கவியல் கோட்பாட்டை உருவாக்க முடியாது என்பதையே உணர்த்துகின்றது. ஏனெனில் மனிதனது நடத்தையும் இயக்கமும் தொழிற்பாடும் எவ்வளவு சிக்கலானவை எனில் அவற்றை முறைமையான கட்டுக்கோப்புக்குள் அமைத்து நெறிப்படுத்த மதம், ஒழுக்கம், சட்டம் ஆகிய மூன்றும் இணைந்து தொழிற்படல் அவசியம்.[4]

## ஒழுக்கவியல் பற்றி இஸ்லாம்

எனவே, மனிதனின் உணர்வுகளாலும் ஆசைகளாலும் தூண்டப்பட்டு, மனிதனின் சிந்தனையிலும் பகுத்தறிவிலும் உருவாகி, மனிதனின் உடல் சார்ந்த புறத் தேவைகளை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இந்த ஒழுக்கக் கோட்பாடுகளின் பின்னணியில் இறைதூதின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, மனிதனின் உடல், உள்ளம், ஆத்மா ஆகியவற்றின் தேவைகளை ஏககாலத்தில் பூர்த்தி செய்து, அவனது இம்மை, மறுமை ஆகிய இரண்டினதும் வெற்றிக்கு அடிகோலும் இஸ்லாமிய சமூகவியலின் பொது அம்சங்களே இங்கு விளக்கப்படுகின்றன.

இஸ்லாத்தில் ஒழுக்கவியல் என்பது மனிதனின் சமூக, அரசியல் வாழ்வினடியாகத் தோன்றிய நிகழ்ச்சிகளை விளக்கும் தத்துவ அனுமானங்கள், பகுத்தறிவு சார்ந்த விளக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றின் விளைவாகத் தோன்றிய கோட்பாடன்று. சுருங்கக் கூறின், இஸ்லாத்தில் ஒழுக்கவியல் இறைதூதின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளது மட்டுமன்றி சர்வதேசியத் தன்மை வாய்ந்ததும் காலவோட்டத்தினால் மாற்றமுடியாத நித்திய தன்மைகளைக் கொண்டதுமாகும். ஒழுக்கம், மனிதனின் செயல் சரியானதா அல்லது தவறானதா? நல்லதா அல்லது கெட்டதா என்ற வினாவோடு தொடர்புடையது. மனிதன் ஆத்மீக, தார்மீக உணர்வுகளுடன் பிறந்த உயர் சிருஷ்டியாவான். வாழ்க்கையில் உண்ணுதல், உறங்குதல், இன்பம் சுகித்தல் ஆகிய தொழிற்பாடுகளையன்றி வாழ்க்கைக்கு உயர்ந்த உன்னதமான மதிப்பீடுகளை வரித்துக் கொள்ளும் ஆற்றலற்ற மிருகங்களிலிருந்து வேறுபட்ட அவன், எண்ணற்ற ஒழுக்க, தார்மீகத் தூண்டுதல்களுடன் பிறந்துள்ளான்.

இஸ்லாமிய ஒழுக்கவியலானது, மனிதன், பிரபஞ்சம், வாழ்வு ஆகிய மூன்றுக்குமிடையேயுள்ள பரஸ்பரத் தொடர்புகளை இஸ்லாம் எந்த நோக்கில் அணுகி விளக்க முனைகின்றதோ, அந்த நோக்கிடையாகத் தோன்றுவதாகும். அல்லாஹ் இந்த உலகை வீணாகச் சிருஷ்டிக்கவில்லை என்பதும் ஒரு மகத்தான இலட்சியத்துடனேயே இவ்வுலகம் சிருஷ்டிக்கப் பட்டுள்ளது; அதுவொரு தார்மீக, ஆன்மிக இலட்சியம் என்பதும் இஸ்லாத்தின் முக்கிய கோட்பாடுகளுள் ஒன்றாகும்.

> **"வானங்களையும், பூமியையும் அல்லாஹ் தக்க காரணத்தின் மீதே சிருஷ்டித்திருக்கின்றான். ஆகவே, (அவைகளிலுள்ள) எல்லா ஆத்மாக்களுக்கும் அவை தேடிக்கொண்ட வினைக்குத் தக்க கூலியே கொடுக்கப்படும். அவை (அணுவளவும்) அநியாயம் செய்யப்பட மாட்டா."**[5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம் - அதன் அளவுகோல் இறைசட்டமே

அல்-குர்ஆனின் கருத்துப்படி நன்னடத்தையையும் நல்லொழுக்கத்தையும் மதிப்பீடு செய்யும் தகவு இறை சட்டமாகும். நன்மையும் தீமையும் இவ்விறை சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட முடியும். இறை சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நன்மை, தீமை பற்றிய வரையறை நித்தியமானதும், காலமாற்றத்திற்கு உட்படா ததுமாகும். எனவே, இஸ்லாத்தின் ஒழுக்கக் கோட்பாடும் தார்மீக மதிப்பீடும் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, அதில் தனது பிரதிநிதியாக மனிதனை அமைத்துள்ள இறைவனின் வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது இவ்வுலகில் மனிதனின் வாழ்வு ஒரு சோதனையாகவும், அதன் நோக்கம் மனிதனின் ஒழுக்கப் பயிற்சியாகவும் அமைவதைக் காணலாம்.

> **"......உங்களில் நற்கருமங்கள் செய்வோர் யார் என்று உங்களைப் பரிசோதிக்கும் பொருட்டு (உங்களையும், இவற்றையும் அவன் படைத்தான். நபியே! நீர் மனிதர்களை நோக்கி) நீங்கள் இறந்த பின்னர் நிச்சயமாக (உயிர்கொடுத்து) எழுப்பப்படுவீர்கள்" என்று கூறினால், அதற்கு (அவர்களிலுள்ள) நிராகரிப்போர் 'இது பகிரங்கமான சூனியமேயன்றி வேறில்லை,' என்று கூறுகின்றனர்."[6]**

இஸ்லாத்தில் நன்மை, தீமை பற்றிய விளக்கமும், வரை யறையும் இறை தூதின் அடிப்படையில் இறை சட்டமாக அமைந்துள்ளன. ஒரு முஸ்லிமின் சிந்தனையும் செயலும் இறைவனின் கட்டளைகளுக்கேற்பவும், அதற்கிணங்கிய வகையிலும் அமையும் பொழுது அது நன்மையான செயலாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முரணாக அமைந்தால் அவனது சிந்தனையும் செயலும் தீமையானதாகவும் கருதப்படும்.

இந்த இஸ்லாமிய ஒழுக்கக் கோட்பாட்டின் அடிப்படையினைப் பின்வரும் ஹதீஸ் அழகாக விளக்குகின்றது. *"அல்லாஹ் சில விடயங்களைக் கட்டளையிட்டுள்ளான்; அவற்றை மீறாதீர்கள். அவன் சில எல்லைக் கோடுகளை வகுத்துள்ளான்; அவற்றைத் தாண்டிவிடாதீர்கள். அவன் சில விடயங்கள் பற்றி, எதுவும் கூறாமல் மௌனமாக இருந்துள்ளான்; இது உங்கள் பால் கருணை கொண்டேயாகும். எனவே, இவற்றைப் பற்றிக் கேட்காதீர்கள்."*[7]

எனவே, இஸ்லாத்தின் ஒழுக்க விதிகளும், ஒழுக்கச் செயல்களும் இறை தூதின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. நன்மையும், தீமையும் இறைவனாலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இறைதூதின் துணையின்றி, மனிதனின் பகுத்தறிவு மட்டும் நன்னடத்தை நல்லொழுக்கம் பற்றிய மதிப்பீடுகளையும் தகவுகளையும் வகுக்கச் சக்தியற்றதாகும்.

இஸ்லாத்தின் இந்த ஒழுக்கவியல் கோட்பாட்டை பேராசிரியர் அன்டர்ஸன் (Anderson) பின்வருமாறு விளக்குகின்றார் :

"ஒரு முஸ்லிமைப் பொறுத்தளவில், மனிதனின் ஒவ்வொரு செயலிலும் ஒழுக்கப் பண்பு பொதிந்துள்ளது. இது 'ஹுஸ்ன்' என அழைக்கப்படும் அழகானதாகவும், பொருத்தமானதாகவும் அமையலாம். அல்லது 'கபீஹ்' என அழைக்கப்படும் அவலட்சணமானதாகவும் அமையலாம். ஆனால், இந்த ஒழுக்கப் பண்பு மனிதனின் பகுத்தறிவின் அவதானத்துக்கும் பரிசீலனைக்கும் உட்படாததாகும். இத்துறையில் மனிதன் பரிபூரணமாக இறைதூதிலும் இறை வழிகாட்டலிலும் தங்கியிருக்க வேண்டியுள்ளது."[8]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் சிருஷ்டியான மனிதன் பற்றி அல்குர்ஆன்

மனிதன் இயற்கையிலேயே நல்லொழுக்க உணர்வு படைத்தவன் என்பதே இஸ்லாமியக் கோட்பாடாகும். மனிதன் பூமியில் பிறந்து, மண்ணில் வாழ்ந்தாலும், அவன் தூய்மையான, பாவக்கறை படியாத, பவித்திரமான உணர்வுகளுடன் பிறந்த, வானத்துப் பிறவியாவான்.

"அவன்தான் உங்களைக் களிமண்ணால் படைத்து, (உங்களுக்குரிய) வாழ்நாளைக்(குறிப்பிட்டுக்) கற்பனை செய்தவன். அவனிடத்தில் (உங்கள் விசாரணைக்காகவும்) ஒரு குறிப்பிட்ட காலமுண்டு. எனினும் நீங்கள் (அவனுடைய தெய்வீகத் தன்மையில்) சந்தேகிக்கின்றீர்கள்".[9]

"நிச்சயமாக நாம் உங்களைப் படைக்க(க் கருதி) உங்களை (அதாவது உங்கள் மூலப் பிதாவாகிய ஆதமை) உருவகித்தோம். பின்னர் நாம் மலக்குகளை நோக்கி 'ஆதமுக்குச் சிரம் பணியுங்கள்' எனக் கூறினோம். இப்லீஸைத் தவிர (மற்ற மலக்குகள் யாவரும் அவருக்கு) சிரம் பணிந்தார்கள்; அவன் சிரம் பணிந்தவர்களில் இருக்கவில்லை".[10] .

மனிதன் மிக உயர்ந்த, உன்னதமான ஆளுமையுடன் பிறந்துள்ளான்.

"ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம். கரையில் (வாகனங்கள் மீதும்) கடலில் (கப்பல்கள் மீதும்) நாம் தாம் அவர்களைச் சுமந்து செல்(லும்படி செய்)கின்றோம். நல்ல ஆகாரங்களை, நாமே அவர்களுக்கு அளிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சிருஷ்டித்த (மற்ற ஜீவராசிகளில்) நாம் அவர்களை மிக மிக மேன்மையாக்கி வைத்திருக்கிறோம்".[11]

அத்தோடு மனிதனுக்கு ஒழுக்கத் தீர்மானங்களை எடுப்பதற்கான அனைத்து ஆற்றலும், நன்மைக்கும் தீமைகளுக்குமிடையில் வரும் விரும்பியதைத் தேர்ந்தெடுக்கும் செயல் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

"நிச்சயமாக நாம் தாம் மனிதனை சிருஷ்டித்தோம். அவனை நாம் சோதிக்கும் பொருட்டே, செவியுடையோனாகவும் பார்வையுடையோனாகவும் அவனை ஆக்கினோம். பின்னர், நிச்சயமாக அவனுக்கு நேரான வழியையும் அறிவித்தோம். எனினும், (அதனைப் பின்பற்றி நமக்கு) நன்றி செலுத்துவோருமிருக்கின்றனர்; அதனை நிராகரித்து விடுவோருமிருக்கின்றனர்"[12]

".....எனினும் உங்களுக்கு அருளியதில் (நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்று) உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கின்றான்). ஆகவே, நன்மைகளின் பக்கம் விரைந்து செல்லுங்கள். அல்லாஹ்வின் பக்கம் தான் நீங்கள் யாவரும் செல்லவேண்டியிருக்கின்றது. நீங்கள் எதில் (அபிப்பிராய பேதப்பட்டுத்) தர்க்கித்துக் கொண்டிருந்தீர்களோ, அதனை அவன் உங்களுக்கு நன்கறிவித்துவிடுவான்."[13]

## உலகம் ஒரு சோதனைக் களம்

எனவே, இறை வழிகாட்டுதலால் நெறிப்படுத்தப்பட்ட மனிதன் அவனது செயல் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, தனது ஒழுக்க ஆத்மீக வளர்ச்சிக்குத் துணை புரிந்து, இம்மையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமையிலும் தனது வெற்றியை உறுதிப்படுத்தும் மதிப்பீடுகள், கொள்கைகள், எண்ணங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வாழ்க்கையில் அமைத்துக் கொள்ளும்படி எதிர்பார்க்கப் படுகின்றான். எனவே இஸ்லாம், வாழ்க்கையைப் பேராசை, பெருமை, இறைநிராகரிப்பு மற்றும் செல்வம், சொத்து, பெண்கள் ஆகியவற்றின் பாலுள்ள தீவிர ஆசை, ஆகியவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ளும் நிரந்தரப் போராட்டக் களமாக நோக்குகின்றது.

மனிதனின் பேராசைத் தன்மை பற்றி அருள்மறை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> **"நன்மையைக் கோரி மனிதன் பிரார்த்திப்பதைப் போலவே (சில சமயங்களில் அறியாமையினால்) தீமையைக் கோரியும் பிரார்த்திக்கின்றான். (ஏனெனில்) மனிதன் (இயற்கையாகவே பொறுமை யிழந்த) அவசரக்காரனாக இருக்கின்றான்."[14]**

அவனது நன்றியற்ற தன்மைபற்றி அது இவ்வாறு உரைக்கின்றது :

> **"நம்முடைய அருளை மனிதன் அனுபவிக்கும்படி நாம் செய்து, பின்னர் அதனை அவனிடமிருந்து நாம் நீக்கிவிட்டால், நிச்சயமாக அவன் நம்பிக்கையிழந்து, பெரும் நன்றி கெட்டவனாகின்றான். அவனுக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கி அவன் இன்பம் அனுபவிக்கும்படி நாம் செய்தால் அதற்கவன், 'நிச்சயமாக என்னை விட்டுத் துன்பங்கள் யாவும் தொலைந்துவிட்டன. (இனி திரும்ப வரா)' என்று கூறுகிறான். ஏனென்றால், நிச்சயமாக மனிதன் (அதி சீக்கிரத்தில்) மகிழ்ச்சியடையக் கூடியவனாகவும், பெருமையடிப்போனாகவும் இருக்கின்றான்."[15]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம், சொத்து, பெண்கள் பால் அவனது தீவிரப் பற்றை அது பின்வரும் வகையில் வர்ணிக்கின்றது.

**"பெண்கள், மக்கள், பொன் வெள்ளிகளின் பெருங் குவியல்கள், உயர்ந்த குதிரைகள் (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகள், வேளாண்மை ஆகியவற்றின் மீது ஆழ்ந்த பற்றுக் கொள்வது, மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. எனினும் இவை (யாவும் நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) இன்பங்களே! அல்லாஹ்விடத்திலோ (நிலையான) அழகிய தங்குமிடமுண்டு."**[16]

எனவே, விசுவாசிகளான மு·மின்கள் அவர்களது சிந்தனை, செயல் ஆகியன குறித்து மிக்க ஆழ்ந்த அவதானத்துடன் செயல்பட வேண்டுமென இஸ்லாம் போதிக்கின்றது. எனவே, இஸ்லாம் புற வணக்கங்கள், கிரியைகளுக்கு அளிக்கும் அதே அளவான அல்லது அதனை விடக் கூடிய முக்கியத்துவத்தை உளப் பரிசுத்தத்துக்கும், ஆத்மீகத் தூய்மைக்கும் அளிக்கின்றது.

## ஒழுக்கக் கோட்பாடுகள் – ஒரு விமர்சன நோக்கு

இஸ்லாத்தின் ஒழுக்கக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களை ஏனைய ஒழுக்கக் கோட்பாடுகளோடு நாம் ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் மிகச் சிறந்த முறையில் விளங்கிக் கொள்ள முடியும். உண்மையில் பார்க்குமிடத்து மிகப் பலமும், உறுதியும் வாய்ந்த உள இயல் தொடர்பான அடித்தளமின்றி (Psychological Foundation) ஒரு சீரான ஒழுக்கக் கோட்பாடு அல்லது ஒழுக்கத் தத்துவம் உருவாக முடியாது. சீரான ஒழுக்கக் கோட்பாடு உருவாக உறுதியும் உரமும் மிக்க உள இயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளம் அவசியம் என்ற கருத்தை வலியுறுத்திய ஒரு முஸ் லிம் அறிஞரின் கூற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

"இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டைக் கொண்டிருந்த, அதாவது கடும் தன்னடக்கத்தை வலியுறுத்திய பண்டைய கிரேக்கத் தத்துவவாதிகளான ஸ்டொய்க்குகள் (Stoics), துறவுக் கோட்பாட்டை வலியுறுத்திய துறவு நிலை சார்ந்தோர் (Asecetics) ஆகியோரின் ஒழுக்கக் கோட்பாடுகள் தோல்வி யடைய மூலகாரணம், அவை மனித உளவியல் பற்றி தவறான கருத்துக்களைக் கொண்டிருந்ததாகும். உதாரணமாக, மனி தன் அடிப்படையிலேயே பகுத்தறிவுடைய படைப்பினமென்றும், அவனில் எத்தகைய மிருகப் பண்பும் காணப்படவில்லை என் றும் கருதிய அவர்களது கோட்பாட்டைக் குறிப்பிடலாம்.

அதற்கு எதிராக அமைந்திருந்த சிற்றின்பக் கோட்பாடான 'எபிகூரியன்ஸ்' (Epicurions) ஒழுக்கக் கோட்பாடு தோல்வி காண முக்கிய காரணம், அவர்கள் மனிதனின் மிருகப் பண்பை மட்டும் ஏற்றுக் கொண்டு அவனது பகுத்தறிவுத் தன்மையை நிராகரித்ததாகும்."[17]

வாழ்க்கையில் மனிதன் கீழ் நிலை அடையாது அவனைக் காப்பாற்றி அவனது மீட்சிக்காக உழைக்கும் ஒவ்வொரு மதமும், அவனது மீட்சிக்கு நம்பிக்கையும் விசுவாசமும் அவசியம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. ஆனால், வெறும் நம்பிக்கையும் விசுவாசமும் மட்டுமே இதற்குப் போதுமான சாதனங்கள் என இஸ்லாம் கருதவில்லை. நம்பிக்கையோடு நற்செயல்களும், நன்மை புரிவதும் அதற்கு அவசியமானவை என இஸ்லாம் கருதுகின்றது.

**"(அவனுடைய துர்நடத்தையின் காரணமாகப்) பின்னர், அவனைத் தாழ்ந்தோனிலும் தாழ்ந்தோனாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஆக்கிவிடுகின்றோம். ஆயினும், எவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்து வருகினறார்களோ அவர்களைத் தவிர. (அவர்கள் மேலான தன்மையில் இருப்பதுடன்) அவர்களுக்கு (என்றென்றும்) தடைபடாத (நற்)கூலியுண்டு."[18]

## ஒழுக்கத்தின் பிரத்தியட்ச வெளிப்பாடு நற்செயல்களே

இஸ்லாத்தின் நோக்கில் இறை விசுவாசம், மனிதனின் ஒழுக்க வாழ்வுக்கு உரமூட்டி சக்தியளிக்கின்றது. ஆனால், இந்த விசுவாசம் நற்செயல்களால் தொடரப்படுவது அவசியமாகும்.

"எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களோ அவர்களை, நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்."[19]

ஆணாயினும், பெண்ணாயினும் விசுவாசங்கொண்டு நற்கருமங்களை எவர்கள் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். அன்றி மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததை விட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்."[20]

இஸ்லாமிய ஒழுக்கமானது இறை நம்பிக்கை, மறுமை வாழ்வு ஆகியவற்றிலிருந்து ஊற்றெடுத்து, 'அ.ஃ.மாலுஸ்-ஸாலிஹாத்' எனும் நற்செயலாக, செயலாற்றுப் பாங்குள்ள தன்மையில், நடைமுறையில் வெளிப்படுகின்றது. இச்செயல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் தனிப்பட்ட பக்தியைச் சார்ந்த தொழுகை, நோன்பு, இறை சிந்தனை, இறை தியானம் உட்பட சமூகத் தொடர்புகள், ஆட்சிப் பரிபாலனம், சர்வதேசிய தொடர்புகள் ஆகிய அத்தனையையும் உள்ளடக்குகின்றன. இஸ்லாமிய ஒழுக்க வியல், அடிப்படையில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கு கின்றது.

- மனிதனுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள தொடர் புகள்.
- மனிதனுக்கும், சமூகத்தில் ஏனைய மனிதர்களுக்குமி டையேயுள்ள தொடர்புகள்.
- மனிதனுக்கும் அவனது இயற்கைச் சுற்றாடலுக்கு மிடையேயுள்ள தொடர்புகள்.

மிக விரிந்த துறைகளை உள்ளடக்கும் இந்த மூன்று பெரும் பிரிவுகளையும் இரு முக்கிய பிரிவுகளில் உள்ளடக் கலாம்.

அ. தனி மனிதர்களின் உரிமைகள் (ஹுகூகுல் இபாதத்)

ஆ. இறைவனின் உரிமைகள்-சமூகத்தின் உரிமைகள் (ஹுகூகுல்லாஹ்)

மனிதனுக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பு நம்பிக்கை, அன்பு, அடிபணிதல், வழிபடல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மனிதனுக்கும் சமூகத்தில் ஏனைய சக மனிதர்களுக்குமிடையிலான தொடர்பு, பெற்றார்கள், உறவினர்கள், அயலவர்கள் மீது அன்பு செலுத்துதல், அடுத்தவர்களின் உரிமைகளை மதித்துப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கமும் சமூக வாழ்வும்

இஸ்லாமிய ஒழுக்கவியல் கோட்பாட்டோடு தொடர்புடைய இந்த அம்சங்கள் ஒரு முக்கிய அடிப்படை உண்மையை உணர்த்துகின்றன. இஸ்லாத்தைப் பொறுத்தளவில் ஒழுக்கவியல் என்பது சமூக வாழ்வோடு தொடர்புடையது என்பதே அது. ஏனெனில், மனிதன் சமூக வாழ்விலிருந்து விடுபட்டு ஒதுங்கி தனிமையில் ஏகாந்தமாக வாழ வேண்டிய தேவை இல்லை. ஒழுக்கம் என்பது சமூக உறவுகளோடு தொடர்புபடுத்தி மிக விரிந்த நோக்கில் அணுகப்படும் பொழுது, சமூகத்தின் மொத்த நன்மை கருதி, மனித இனத்தின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு இந்த சமூக உறவுகளை ஒழுங்காகவும் சீராகவும் அமைத்துக் கொள்வதாகும்.

குடும்பம் என்பது சமூகத்தின் மூலத்தொகுதியாகும். உண்மையில் கூறப்போனால், குடும்பம் என்பதே ஒரு சிறு சமூக அமைப்பாகும். கற்பைப் பாதுகாத்து ஒழுக்கத்தைப் பேணல், மனிதனின் உடல் உணர்வுகளையும் ஆசைகளையும் சட்டத்துக்கு இயைந்த வகையில் தீர்த்துக் கொள்ள வகை செய்தல், இனவிருத்தியைத் தூண்டுதல் போன்ற முறையான குறிக்கோள்களோடு இஸ்லாம் திருமணத்தை விதித்துள்ளது.

> **"ஒரே மனிதரிலிருந்து உங்களைப் படைத்தவன் அவன்தான்; அவருடன் (சுகமாகக்) கூடி வசிப்பதற்காக அவருடைய மனைவியை அவரிலிருந்தே உற்பத்தி செய்தான். அவளை, அவர் (தன் தேகத்தைக் கொண்டு) மூடிக் கொண்டபோது, அவள் (சூல் கொண்டு) இலேசான சுமை சுமந்தாள்; பின்னர் அதனை(ச் சுமந்து) கொண்டு திரிந்தாள். அவள் சுமை பளுவாகவே, 'நீ எங்களுக்கு நல்லதொரு சந்ததியை அளித்தால், நிச்சயமாக நாங்கள் (உனக்கு) நன்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செலுத்திக் கொண்டிருப்போம்' என்று அவ்விருவரும் தங்கள் இறைவனாகிய அல்லாஹ்விடம் பிரார்த் தித்துக் கொண்டிருந்தார்கள்."[21]**

ஆணினதும் பெண்ணினதும் கூட்டுறவால் குடும்பம் என்னும் அமைப்பு உருவாகின்றது. இஸ்லாம் கணவன், மனைவி ஆகிய இருபாலாரின் பரஸ்பரக் கடமைகளையும் உரிமைகளை யும் வரையறுத்தும், பெற்றோர்கள் குழந்தை களுக்கிடையிலான உறவு முறையினை விளக்கியும் ஓர் ஒழுக்கக் கோட்பாட்டைச் சமர்ப்பித்துள்ளது.

**"'தலாக்' கூறப்பட்ட பெண்கள், தங்களுக்கு மூன்று (மாத)விடாய்கள் வரும் காலம் வரை எதிர் பார்த்திருக்கவும். அவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதி கொண்டவர்களாக இருந்தால் - அல்லாஹ் அவர்களுடைய கர்ப்பப்பைகளில் (சிசுவைப்) படைத்திருப்பதை மறைப்பது அவர்களுக்கு ஆகுமானதல்ல. தவிர, ('ரஜயீ' யான தலாக் கூறப்பட்ட) பெண்களின் கணவர்கள் பின்னும் சேர்ந்து வாழக் கருதி, (தவணைக்குள்) சமாதானத்தை விரும்பினால், அவர்களை (மனைவிகளாக)த் திருப்பிக் கொள்ள கணவர்கள் மிகவும் உரிமையுடையவர்கள். (ஆகவே, மறுமணமின்றியே மனைவியாக்கிக் கொள்ளலாம், ஆண்களுக்கு) முறைப்படி பெண்கள் மீது உள்ள உரிமைகள் போன்றே, (ஆண்கள் மீது) பெண்களுக்கும் உண்டு. ஆயினும், ஆண்களுக்குப் பெண்கள் மீது ஓர் உயர்வு உண்டு. அல்லாஹ் வல்லோனும், நுண்ணறிவுடையோனுமாக இருக் கின்றான்."[22]**

**"தமது தாய் தந்தை(க்கு நன்றி செய்வது) பற்றி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய தாய், துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள். (அவன் பிறந்த) பிறகும், இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். (ஆகவே, மனிதனே!) நீ எனக்கும், உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்தி வா. (முடிவில் நீ,) என்னிடமே வந்து சேரவேண்டியிருக்கிறது."[23]

"மனிதன் தன் பெற்றோருக்கு நன்றி செய்யும்படி, நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் கஷ்டத்துடனேயே (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்திருந்து கஷ்டத்துடனேயே அவனைப் பிரசவிக்கின்றாள். அவள் கர்ப்பமானதிலிருந்து, இவன் பால்குடி மறக்கும் வரையில் முப்பது மாதங்கள் (மிக்க கஷ்டத்துடன் செல்லுகின்றன.) இவன் வாலிபமாகி நாற்பது வயதை அடைந்தால், என் இறைவனே! நீ என்மீதும், என் தாய் தந்தையர் மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, உன்னுடைய திருப்தியை அடையக் கூடிய நற்கருமங்களைச் செய்யும்படி(யான நல்லறிவை) நீ எனக்குத் தந்தருள்வாயாக. (எனக்கு உதவியாக இருக்கும்படி) எனக்காக என்னுடைய சந்ததியை நீ சீர்திருத்தி வை. நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். அன்றி நான் (உனக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களில் உள்ளேன்" என்று கூறுவான்"[24]

இவ்வாறு இஸ்லாம் அதன் ஒழுக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில் அதன் அங்கத்தவர்களுக்கிடையே மிகச் சீரான உறவு முறை நிலவுகின்ற குடும்பத் தொகுதிகளை உருவாக்க விழைகின்றது. இஸ்லாமிய சமூக அமைப்பென்பது உண்மையில் இத்தகைய குடும்பத் தொகுதிகளின் தர்க்கரீதியான கூட்டு மொத்த வளர்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் சமூகத்தின் ஒழுக்க வளர்ச்சியில் மிக அக்கறை செலுத்துகின்றது. அதன் அங்கத்தவர்களிடையே சீரான உறவுமுறை நிலவுவதை அது வலியுறுத்துகின்றது. சமூக உறவு முறைக்கான ஒழுங்குகளை இஸ்லாம் போதிப்பதுடன், பரஸ்பர மரியாதை, அன்பு, சகிப்புத்தன்மை ஆகியவற்றையும் வலியுறுத்துகின்றது.

இஸ்லாம் சமூகத்தின் ஒழுக்க வளர்ச்சியில் மிகத் தீவிர கவனம் செலுத்துவதுடன் சமூகத்தின் அங்கத்தவர்களாகிய தனி மனிதர்களிடையே சுமூகமான நல்லுறவு நிலைக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துகின்றது. சமூகத்தில் பரஸ்பர உறவுமுறையின் ஒழுக்க அடிப்படைகளை அது போதிப்பதோடு பரஸ்பர மரியாதை, அன்பு, சகிப்புத்தன்மை ஆகியவற்றையும் வலியுறுத்துகின்றது. அது மனிதனை சந்தேகம், அவநம்பிக்கை, புறம் பேசுதல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்துகொள்ளும்படி பணிக்கின்றது.

> **"விசுவாசிகளே! ( நபி பேசும் பொழுது,) நபியினுடைய சப்தத்துக்கு மேல் உங்களுடைய சப்தத்தை உயர்த்தாதீர்கள். அன்றி, உங்களுக்குள் ஒருவர் மற்றொருவருடன் உரக்கப் பேசுவதைப்போல், அவரிடம் (சப்தத்தை உயர்த்தி) நீங்கள் உரக்கப் பேசாதீர்கள். ஏனெனில், உங்களுடைய (நன்மை யான) செயல்கௌல்லாம் பயனற்றுவிடக் கூடும். (அதனை) நீங்கள் உணர்ந்து கொள்ள முடியாது. [25]"**

> **"விசுவாசிகளே அனேகமாக சந்தேகங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில விஷயங்களில் சந்தேகிப்பது பாவமாக இருக்கின்றது. (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றெவரையும் பற்றிப் புறம் பேச வேண்டாம். உங்களில் எவனும் தன்னுடைய இறந்த சகோதர னின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள் வெறுப்பீர்களே! (புறம்பேசுவதும் அவ்வாறே. இவ்விஷயங்களில்) நீங்கள் அல்லாஹ் வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (பாவத் திலிருந்து) விலகுவோரை அங்கீகரிப்போனாகவும் கிருபை செய்வோனாகவும் இருக்கின்றான்.[26]"

"விசுவாசிகளே! உங்களுக்குள் நீங்கள் இரகசியம் பேசினால் பாவம் செய்வதற்காகவும், வரம்பு மீறுவதற்காகவும், (நம்முடைய ) தூதருக்கு மாறு செய்வதற்காகவும் இரகசியம் பேசாதீர்கள். ஆயினும், நன்மை செய்வதற்காகவும், பரிசுத்தத் தன்மைக் காகவும் இரகசியம் பேசலாம். (யாவையும் அறிந்த) அல்லாஹ்வை அஞ்சுங்கள்: அவனிடமே நீங்கள் ஒன்று சேர்க்கப்படுவீர்கள்.[27]"

"விசுவாசிகளே! (நீங்கள் யாதொரு சபையிலி ருக்கும்பொழுது. எவராலும்) உங்களை நோக்கிச் சபைகளில் அகன்று (இடங்) கொடுங்கள் என்று கூறப்பட்டால் (அவ்வாறே) நீங்கள் அகன்று கொடுங் கள். அல்லாஹ் உங்களுக்கு விசாலமாக்கி வைப்பான். தவிர, (சபையில் யாதொரு காரணத்தைப் பற்றி உங்களை நோக்கி,) எழுந்து (சென்று) விடுங்கள் என்று கூறப்பட்டால், அவ்வாறே நீங்கள் எழுந்து (சென்று) விடுங்கள். (இவ்வாறு செய்யும்) உங்களில் உள்ள விசுவாசிகளுக்கும் கல்விஞானமுடையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான். அல் லாஹ் நீங்கள் செய்பவைகளை நன்கு அறிவான்.[28]"

## நீதித்துறைக்கும் ஒழுக்கத்துக்கும் தொடர்புண்டா?

இஸ்லாமிய ஒழுக்கவியலானது நீதி பற்றிய அதன் கோட்பாட்டோடு மிக நெருங்கிய தொடர்புடையது மட்டுமன்றி அல்குர்ஆன் கூட அண்டத்திலும், பிரபஞ்சத்திலும் காணப்படும் ஒழுங்கமைதியையும் சமநிலையையும் பற்றிக் குறிப்பிடுகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்தளவில் நீதி என்பது மனிதன் சடப்பொருள்கள், நிகழ்வுகள், சம்பவங்கள் ஆகியவற்றை அவற்றிற்கே உரிய உண்மையான வெளிச்சத்தில் நோக்கி, மதிப்பீடு செய்து, அதன் அடிப்படையில் அவற்றோடு தொடர்பு கொள்வதாகும்.

நீதி பற்றிய இந்த விரிவான கோட்பாட்டின் அடிப்படையில் இஸ்லாமிய ஒழுக்கவியலானது அதன் செயல்பாட்டுக் களத்தை இறைவனின் படைப்பினங்களில் ஒவ்வோர் அம்சத்தையும் உள்ளடக்கும் வகையில், அதன் மிருக, தாவர உலகைக்கூட உட்பொதிக்கும் வகையில் விரிவுபடுத்தியுள்ளது. இது தொடர்பாக நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸ் ஈண்டு குறிப்பிடத் தக்கது:

*"இறைவனின் எல்லாப் படைப்பினங்களும் அவனது குடும்பமாகும். அவனது படைப்பினங்கள்பால் அன்பு கொண்டவரே அவனால் நேசிக்கப்படுபவராவர்."*

இஸ்லாமிய நோக்கில் மனிதன் இறைவனின் பிரதிநிதியாக விளங்குகிறான். இந்தப் பிரதிநிதித்துவத்தின் செயல்பாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் தனது சக மனிதர்களுக்கு மட்டுமன்றி, இறைவனின் குடும்பத்தைச் சேர்ந்த பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் நன்மை செய்வதை அடிப்படையாக வைத்துக் கணிக்கப்படும். இஸ்லாத்தைப் பொறுத்தளவில் இயற்கையானது இறைவனின் நோக்கை வெளிப்படுத்துகின்றது. எனவே, மனிதன் எப்படி மனித சமூகத்தில் குழப்பத்தையும் அமைதியின்மையையும் தோற்றுவிக்கக்கூடாது என எதிர்பார்க்கப்படுகிறானோ அதே போன்று இயற்கையின் எழிலார்ந்த ஒழுங்கமைதியையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலையச் செய்யக்கூடாது எனப் பணிக்கப்படுகின்றான்.

## மேற்கின் ஒழுக்கக் கோட்பாடும் அதன் பாரதூரமான விளைவுகளும்

சடவாதக் கோட்பாட்டின் அடிப்படையிலமைந்த இயற்கை பற்றிய மேற்கத்திய கோட்பாடானது இஸ்லாத்தின் இயற்கை பற்றிய இந்தக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானதாகும். இஸ்லாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதை நேசிக்கும் அதேவேளை மேற்கானது இயற்கையை எதிர்த்துப் போராடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஐரோப்பிய மறுமலர்ச்சியின் காலம் முதற்கொண்டே, குறிப்பாகக் கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பம் முதற்கொண்டே மேற்கத்திய உலகமானது இயற்கையை அடிமைப்படுத்தி, பயன்படுத்தி, ஈற்றில் அழிப்பதற்காக உள்ள ஓர் எதிரி எனக் கருதி, அதனோடு எதிர்த்துப் போராடுவதை நோக்காகக் கொண்டு இயற்கையை அணுகும் மனப்பான்மையை தன்னுள் வளர்த்துக் கொண்டது. எனவே, மனிதன் இவ்வாறு தனது இயற்கைச் சூழலிலிருந்து துண்டிக்கப்பட்டதானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை அழித்துச் சூறையாடும் நிலைக்கு அவனை இட்டுச் சென்றுள்ளது. இதுவே இன்று உலகு எதிர்நோக்கும் மிகப் பாரதூரமான பிரச்சினைகளுள் ஒன்றான இயற்கைச் சுற்றாடலின் அழிவு பற்றிய பிரச்சினையைத் தோற்றுவித் துள்ளது. "எமது வாழ்வு தங்கியுள்ள நவீன தொழில்நுட்பத்தின் தாக்குதலுக்கு ஆளாகி பயங்கர அழிவின் சவாலை எதிர்நோக்கியுள்ள இயற்கைச் சுற்றாடலைப் பாதுகாத்தல் வேண்டும் என்ற கோஷம் இன்று மிகவும் உரத்த குரலில் பரவலாக எழுப்பப்படுகின்றது. உயிர்ப்பொருளல்லாதவற்றின தும், ஏனைய இயற்கை வளங்களினதும் பாதுகாப்பானது அவற்றை வீணாக்காது துஷ்பிரயோகம் செய்யாது எமது வாழ்விற்கு ஆதாரமாக அமையும் இறைவனின் படைப்பி னங்களாக மதக் கண்ணோட்டத்தில் அவற்றை நோக்குவதிலேயே தங்கியுள்ளது."[29]

## அபிவிருத்தி – ஓர் இஸ்லாமிய நோக்கு

எனவே, அபிவிருத்தி பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம் மேற்கின் கண்ணோட்டத்திலிருந்து முற்றிலும் வித்தியா சமானது. அறிவெல்லை கடந்த, பகுத்தறிவின் வரம்புக்கு அப்பாற்பட்ட மதிப்பீடுகளை மனித வாழ்விலிருந்து அகற்றும் எத்தகைய அபிவிருத்தியும் இஸ்லாமிய நோக்கிற்கு இணங்கியதாக அமையாது. இஸ்லாம் பொருளாதார அபிவிருத்தி, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியற்றைக்கூட ஒழுக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில் நெறிப்படுத்தவே விளைகிறது.

அபிவிருத்தி பற்றிய இந்த இஸ்லாமிய நோக்கானது, இஸ்லாமிய ஆட்சி பற்றிய கருத்துக்கு எம்மை இட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றது. இஸ்லாமிய நோக்கில் ஓர் ஆட்சியின் கடமை இரு வகைப்படும். ஒன்று உணவு, உடை, வசிப்பிடம் ஆகிய அடிப்படைச் சாதனங்களை வழங்கி, மனிதன் உயிர்வாழப் பொருத்தமான வசதிகளையும், சூழ்நிலைகளையும் ஏற்படுத்துவதாகும். இரண்டாவது, மனிதனுக்குக் கல்வி, ஒழுக்கப் பயிற்சி ஆகியவற்றை வழங்கி, அவனது இலட்சிய வாழ்வுக்குப் பொருத்தமான சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தலாகும். எனவே, ஓர் ஆட்சியானது இந்த இரண்டில் முதலாவது தேவையைப் பூர்த்தி செய்ய முனையும் பொழுது, இரண்டாவது தேவையான இலட்சிய வாழ்வு பாதிக்கப்பட்டால், இஸ்லாம் அதனை அங்கீகரிக்காது. மனிதனின் ஒழுக்க, தார்மீக விளைவுகளைப் புறக்கணித்து, அவனின் பொருளாதார வளர்ச்சியையே ஒரே நோக்கமாகக் கொண்டுள்ள மேற்கின் அபிவிருத்தி பற்றிய கோட்பாடும் அதன் அபிவிருத்தித் திட்டங்களும் இன்றைய நிகழ்கால உலகில் மிகப் பாரதூர மான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

> **"பூமியில் ஊர்ந்து திரியக்கூடியவைகளும், தம்முடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக் கூடியவைகளும் உங்களைப் போன்ற (ஜீவனுள்ள) சிருஷ்டிகளேயன்றி வேறில்லை. (இவைகளில்) ஒன்றையுமே (நம்முடைய பதிவுப்) புத்தகத்தில் (லௌஹுல் மஹ்ஃபூலில்) குறிப்பிடாது நாம் விட்டு விடவில்லை. பின்னர் (ஒரு நாளில்) இவைகளும் தங்கள் இறைவனிடம் கொண்டு வரப்படும்."**

இறைவனின் படைப்பினங்களில் அனைத்தையும் உள்ளடக்கும் இஸ்லாமிய ஒழுக்கவியலின் இந்த உலகளாவிய தன்மையானது இன்றைய உலகச் சமுதாயம் எதிர்நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் பெரும்பங் கினை வகிக்க முடியும். இத்துறையில் மிகப் பாரதூரமான அழிவிற்கு இன்றைய உலகைப் பாதித்துவரும் பிரச்சினைக ளில் ஒன்றான இயற்கைச் சுற்றாடலின் அழிவு பற்றிய பிரச்சினையை உதாரணத்துக்கு நாம் எடுத்துக் கொள்ளலாம்.

மனிதன் ஒழுக்கத்தில் சீர்பெற்று விளங்க தன்னைச் சூழவுள்ள இயற்கையுடன் சீரான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தைப் பொறுத்தளவில் உலகம் என்பது வெறும் பிரமையோ, மாயத்தோற்றமோ (Illusion) அல்லது கனவுப் பொருளோ அன்று. அது யதார்த்தமானதாகும். அது மனிதன் ஒழுக்க முயற்சிகளோடு ஒன்றுபட்டு இணைந்து தொழிற்படும் வகையிலேயே சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் இயற்கையையும், அதன் அழகையும் அல்லாஹ்வின் மாட்சிமையைப் பிரதிபலிக்கும் பொருட் களாகவே குறிப்பிடுகின்றது. இறைவனின் உள்ளமைக்கு (Existence) மிக நெருங்கிய காட்சியாகவே முஸ்லிம்கள் இயற்கையை நோக்குகின்றனர். எனவே இஸ்லாமிய ஒழுக்கவியலென்பது மனிதனுக்கும் இறைவனுக்கும் சக மனிதர்களுக்குமிடையேயுள்ள தொடர்பைப் பற்றி மட்டுமன்றி மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றியும் கரிசனை கொண்டுள்ளது.

"மனிதனையும் இயற்கையையும் பிரித்து நோக்க மறுப்பதன் மூலம் இஸ்லாம் பிரபஞ்சத்தைப் பற்றிய முழுமையான ஒருமைப்பாடுடைய நோக்கைச் சமர்ப்பித்து இயற்கையினதும், அண்டத்தினதும் ஒழுங்கான சீரமைப்பிலும், இயக்கத்திலும் இறைவனின் மாட்சிமையையும் மகோன்னத தத்துவத்தையும், பேரருளையும் அது காணுகிறது.[30]"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித இனத்தைச் சீர்குலைக்க இராட்சத அபிவிருத்தித் திட்டங்கள்

நகராக்கும் (Urbanisation), இயந்திரமயமாக்கும் (Mechanization) அபிவிருத்தித் திட்டங்கள், மரியம் ஜமீலாவின் வார்த்தைகளில் கூறுவதாயின் 'எந்த இடத்தோடும், மக்களோடும் ஏன், நெருங்கிய உறவினர்களோடும் கூட நிலையான உறவற்ற "நவீன நாடோடி மனிதனை" (Modern Nomade) உருவாக்கியுள்ளன. இயந்திர நாகரிகம் தோற்றுவித்துள்ள இயக்கமும், இடப்பெயர்ச்சியும் காரணமாகக் குடும்ப அமைப்பு சீர்குலைக்கப்பட்டு, துண்டிக்கப்பட்டு, மனித உறவுகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.[31]"

மேற்கின் ஒருதலைப்பட்ச பொருளாதார அபிவிருத்தி, தோற்றுவித்துள்ள சுற்றாடல் அசுத்தம், இயற்கை வளங்களின் அழிவு ஆகிய பிரச்சினைகளின் பாரதூரமான விளைவுகளை மேற்குலகம் இன்று உணர்ந்துள்ளது. இந்த உணர்வின் விளைவாக இத்துறையில் ஆழமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சியின் அறுவடையாக மேற்கில் எழுதப்பட்டுள்ள D. Meadows என்பாரின் The limit to Growth; மேலும் Meserovic, Pestal ஆகிய இருவரும் எழுதிய Mankind at Turning Point; மேலும் Sehumaohar எழுதிய Small is Beautiful போன்ற நூல்கள் நுகர்வுப் பொருளாதாரத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள அபிவிருத்திக் கொள்கையின் அபாயகரமான விளைவுகளை உணர்த்துகின்றன. எனவே, இன்று மனித சமுதாயத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்றக் கூடிய, நிலையான தெய்வீகத் தூதின் அடிப்படையில் மனித சமுதாயத்துக்கு வழங்கப்பட்ட இஸ்லாத்தின் ஒழுக்கத் தார்மீகக் கோட்பாடுகளை-இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வுப் பொருளாதாரத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள அபிவிருத்திக் கோட்பாட்டில் காணப்படாத ஆத்மீகக் கட்டுக் கோப்பை அதற்கு வழங்குவதன் மூலமே மனித சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். ஆட்டங்காணும் இச் சட வாத நாகரிகத்துக்கு இந்த ஆத்மீகக் கட்டுக்கோப்பை முஸ்லிம்களாகிய நாம் வழங்கத் தவறினால், மனித சமுதாயத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளில் தவறியவர்களாவோம்.

**விரிவான விளக்கத்துக்குப் பார்க்க:**


1. Bertund Russel, History of Western Philosophy p.201
2. Ibid Pp. 235
3. Mazharuddeen Siddiki, Marxism or Islam P. 75
4. Hammudah Abd Al-Ati, The Family Structure in Islam P. 18
5. ஸூரா அல் ஜாஸியா, வசனம் 22
6. ஸூரா ஹூது, வசனம் 7
7. ஸூரா இ.ஃலாமுல் முவக்கிஈன், இப்னு கையூம், பக்.71, 72
8. Anderson, Slave Law in the Modern World P. 3, quoted by Dr. Muslihud Deen Morality, its concept and role in Islamic order P. 44.
9. ஸூரா அல்அன்ஆம், வசனம் 2
10. ஸூரா அ.ஃராப், வசனம் 11
11. ஸூரா பனுஇஸ்ராயீல். வசனம். 70
12. ஸூரா அத்தஹ்ர், வசனம். 2-3
13. அல்மாயிதா, வசனம் 48
14. ஸூரா பனூஇஸ்ராயீல், வசனம் 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஸூரா ஹூத், வசனம் 9-10
16. ஸூரா ஆலஇம்ரான், வசனம் 13
17. Muhammed Umarud Deen the Ethical Philosophy of Al-Ghazali P.71
18. ஸூரா அத்தீன், வசனம் 5-6
19. ஸூரா அல்அன்கபூத், வசனம் 69
20. ஸூரா அந்நஹ்ல், வசனம் 97
21. ஸூரா அல்அஃராப், வசனம் 189
22. ஸூரா அல்பகரா, வசனம் 228
23. ஸூரா லுக்மான், வசனம் 14
24. ஸூரா அல் அஹ்ஸாப், வசனம் 15
25. ஸூரா அல்ஹுஜ்ராத், வசனம் 2
26. ஸூரா அல்ஹுஜ்ராத், வசனம் 12
27. ஸூரா அல்முஜாதலா, வசனம் 9
28. ஸூரா அல்முஜாதலா, வசனம் 11
29. Seyyed Husayn Nasr the Encounter of Man and Nature, P.94
30. S.H. Nasr, Plight of Modern Man, P. 75
31. Maryam Jameelah, Islam and Western Society, P.173




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய வரலாற்றுத் தத்துவம்

வரலாறு, பாரம்பரியம் பற்றிய உணர்வானது மனிதனின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ஓர் இயற்கைப் பண்பாகும். இந்த உணர்வானது தனி மனிதனுக்கு மட்டுமன்றி, இனங்களுக்கும் நாடுகளுக்கும் அவசியமாகும். ஏனெனில், இந்த வரலாற்றுப் பாரம்பரியத்திலிருந்தே ஓர் இனம் எழுச்சிக்கான ஓர் உத்வேகத்தைப் பெற்றுக் கொள்வது மட்டுமன்றி, அதன் வரலாற்றுப் பாரம்பரியத்தில் காலூன்றி, கடந்த கால அனுபவங்களின் வெளிச்சத்தில் நம்பிக்கையோடும், தைரியத்தோடும் எதிர்காலத்தை நோக்கவும் அதற்குச் சாத்தியமாகின்றது. ஓர் இனத்தை எதிர்காலத்தை நோக்கி நெறிப்படுத்துவதில் வரலாறு வகிக்கும் பங்கை அல்லாமா இக்பால் பின்வரும் வகையில் அழகுற விளக்குகின்றார்கள்: "வாழ்வானது அதன் கடந்த காலச் சுமையை முதுகில் சுமந்தவாறே முன்னோக்கிச் செல்கின்றது. ஓர் இனமும் தனது கடந்த காலத்தை முற்றிலும் புறக்கணித்துவிட முடியாது. ஏனெனில், அவர்களது கடந்த காலமே அவர்களது வரலாற்றை உருவாக்கியுள்ளது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சிந்தனையின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியானது எங்களுக்கு ஓர் உண்மையை உணர்த்துகின்றது. அதாவது, மனிதன் எப்பொழுதும் இப்பிரபஞ்சத்தையும், மனித வாழ்வையும், மனிதனின் ஆளுமையையும் விளங்கிக் கொள்ளும் வகையில், இவற்றினை இயக்குவிக்கும் சட்டங்களையும், நியதிகளையும் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளான் என்பதே இந்த உண்மையாகும். மனிதனின் இந்த முயற்சியானது, வரலாற்றை இயக்குவிக்கும் சக்திகள் பற்றிப் பல்வேறு கோட்பாடுகளையும், சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தோற்றுவித்தது.

பழங்காலக் கிரேக்கர்கள் இப்பிரபஞ்சத்தை ஏற்கனவே முழு வளர்ச்சியையும் (Finite) கண்ட ஒரு பொருளாக மதித்ததால், அவர்களைப் பொறுத்தளவில் வரலாற்றிற்கு ஆரம்பமோ, ஒரு முடிவோ, அன்றி இலட்சியமோ இருக்கவில்லை. இப்பிரபஞ்சத்தில் அனைத்து நிகழ்ச்சிகளும் சுற்றிச் சுற்றி ஒரே வட்டத்திலேயே மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன என்ற கோட்பாட்டை அவர்கள் கொண்டிருந்ததால் பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்ற கிரேக்க சிந்தனையாளர்கள் வரலாற்றுத் தத்துவம் அல்லது வரலாற்று விமர்சனம் என்று கூறத்தக்க எதனையும் உலகிற்களிக்க வில்லை.

## வரலாற்றின் இலட்சியம்

எனவே, வரலாற்றை ஓர் இயக்கமாக அல்லது முன்னேறிச் செல்லும் ஒரு சக்தியாக விளக்குவதற்கு, வரலாற்றுக்கு ஒரு குறிக்கோள், இலட்சியம் இருத்தல் வேண்டும். ஏனெனில், இத்தகையதொரு இலட்சியம், குறிக்கோளின்றி முன்னேறிச் செல்லும் ஓர் இயக்கமாக வரலாற்றை நாம் கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மனித வாழ்வின் பண்பு, நோக்கம், இலட்சியம் பற்றிய தெளிவின்றி வரலாற்றை நாம் தெளிவாகப் புரிவது சாத்தியமன்று.

இந்து, பௌத்தக் கோட்பாடுகள் 'கர்மவினை' (Karma) பற்றிய தத்துவத்தின் அடிப்படையில் வரலாற்றுக்கு ஒழுக்க ரீதியான, தார்மீக ரீதியான முக்கியத்துவத்தை வழங்குகின்றன. இந்துக்களைப் பொறுத்தளவில் 'சம்சார சாகரத்தை'க் கடந்து மோட்ச (Moksha) நிலையை அடைவதும், புத்தர்களைப் பொறுத்தவரையில், பிறப்புத் துன்பம் நீங்கி நிர்வாண நிலை அடைதலும் வாழ்வின் இலட்சியங்களாக மதிக்கப்படுகின்றன. இந்த இலட்சியத்தின் அடிப்படையிலேயே அவர்களது வரலாற்றுத் தத்துவம் அமைகின்றது. கிறிஸ்துவ மதத்தைப் பொறுத்தளவில், மனிதன் பாவச் சுமையிலிருந்து இரட்சிப்புப் (Salvation) பெறலே வாழ்வின் இலட்சியமாக அமைவதால், கிறிஸ்துவ வரலாற்றுத் தத்துவம் இவ்விலட்சியத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளது.

நவீன ஐரோப்பிய சிந்தனையாளர்களுள் ஸ்பெங்க்லர், ஹேகல், கார்ல் மார்க்ஸ் ஆகியோர் வரலாற்றுத் தத்துவம் பற்றிய கோட்பாட்டிற்குக் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளனர். ஸ்பெங்லர் சமூகத்தை ஓர் உயிர்ப் பொருளின் தன்மைகளைக் கொண்ட அமைப்பிற்கு ஒப்பிட்டு, அதன் அடிப்படையில் சமுதாயங்களின் தோற்றம், வீழ்ச்சி பற்றிய தனது கோட்பாட்டை நிறுவினார். அவரைப் பொறுத்தளவில் வரலாற்றில் ஒரு சமூகத்தின் தோற்றமும் வீழ்ச்சியும் ஒரேயொரு தடவைதான் சாத்தியமாகும். வரலாற்றில் ஒரு தடவை தோன்றி தனது பங்களிப்பினை அளித்து சில வரலாற்று நியதிகளால் முதிர்ச்சியடைந்து, நலிவடைந்து வீழ்ச்சியடைந்த ஒரு சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தலையெடுத்தல் அசாத்தியமாகும். ஏனெனில், உலகில் ஓர் உயிர்ப்பொருளின் தோற்றம் ஒரேயொரு தடவைதான் நிகழ்வதுபோல, ஒரு சமுதாயத்தின் தோற்றமும் ஒரே ஒரு தடவைதான் சாத்தியமாகும்.

ஹெகல் என்னும் மேற்கத்திய சிந்தனையாளரின் வரலாற்றுத் தத்துவமும் மிக ஆழ்ந்த செல்வாக்கை ஏற்படுத்தியது. ஏனெனில், இவரது Dialectics என்னும் தத்துவக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே கார்ல் மார்க்ஸ் தனது வரலாற்றுத் தத்துவத்தை நிறுவினார்.

## இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மனிதனின் நிலை

வரலாறு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்வதற்கு பிரபஞ்சம் (Universe), மனிதன் (Man), அவனது வாழ்வு (Life) ஆகியவை பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்களையும், கொள்கையினையும் அறிதல் அவசியமாகும். ஏனெனில், எந்தவொரு வரலாற்றுச் சூழ்நிலையினதும் அல்லது வரலாற்று அனுபவத்தினதும் கருப் பொருட்களாகவே இம்மூன்றும் விளங்குகின்றன.

இஸ்லாத்தைப் பொறுத்தளவில் இப்பிரபஞ்சமும், அதில் காணப்படும் ஒழுங்கும், கட்டுப்பாடும் அதனைப் படைத்து நிர்வகிக்கும் ஒரு சிருஷ்டிகர்த்தா இருக்கின்றான் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. எனவே, இணையற்ற சர்வ வல்லமையும் கொண்ட, அனைத்து அதிகாரங்களையும் பொதிந்த இச்சிருஷ்டிகர்த்தா மீது விசுவாசங் கொள்ளல் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். இஸ்லாத்தைப் பொறுத்தளவில் விரிந்து, பரந்த, வியத்தகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தைகள் பொதிந்த இப்பிரபஞ்சமானது, சுயமாகவே திடீரெனத் தோன்றியதன்று. ஆனால், அது அல்லாஹ்வினால் சிருஷ்டிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு அவனது அதிகாரத்திற்குட்பட்டுச் செயற்படுகின்றது. இப்பிரபஞ்சத்தையும், அதிலுள்ள ஏனைய படைப்பினங்களையும் இறைவன் சிருஷ்டித்த பொழுது, அவை இவ்வாறு தான் இயங்க வேண்டும் என ஒரு விதியையும், சட்டத்தையும் ஏற்படுத்தினான். இப்பிரபஞ்சமும், அதில் காணப்படும் படைப்பினங்களும் இதற்கியைய அவனது சட்டங்களுக்குப் பரிபூரணமாகக் கட்டுப்பட்டு ஒழுக நிர்ப்பந்திக்கப்பட்டன. அச்சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் சுதந்திரமோ அல்லது நிராகரிக்கும் சுதந்திரமோ அவற்றிற்கு வழங்கப்படவில்லை.

ஆனால், இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில், மனிதன் அடிப்படையில் ஏனைய சிருஷ்டிகளிலிருந்து வித்தியாசப்படுகின்றான். ஏனெனில், அவன் வெறுமனே சில அணுக்களின் கூட்டுச் சேர்க்கையோ அல்லது பசி, பாலுணர்ச்சி ஆகியவற்றினால் தூண்டப்பட்டுச் செயல்புரியும் ஒரு இரசாயனப் பரிசோதனை நிலையமோ அன்று. அவன் சிருஷ்டிப் பொருட்களிலெல்லாம் சிரேஷ்டமானவன். படைப்பினங்களிலெல்லாம் சிறப்புடையவன். திருக்குர்ஆன் 'கலீபதுல்லாஹ்'– அல்லாஹ்வின் பிரதிநிதி– என்ற உயர்ந்த நிலையை அவனுக்கு வழங்கியுள்ளது. ஏனைய படைப்பினங்களுக்கு இறைவனது கட்டளைகளை தாம் விரும்பினால் நிராகரிக்கும் சுதந்திரத்தை வழங்கவில்லை. ஆனால், இப்பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிப் பொருட்களில் இறைவனின் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஒழுகும் சுதந்திரமும் விரும்பினால் அவற்றை நிராகரிக்கும் உரிமையும் மனிதனுக்கு மாத்திரமே அளிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தைப் பொறுத்தளவில் மனிதன் இயற்கையாகவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவுடன் ஒழுக்க ஆன்மீக சக்திகளும் பொதிந்தவனாவான். எனவே, அவனது வாழ்வைச் சிறந்த முறையில் வாழ்வதற்கும், அவனது வெற்றிக்கும் இறை வழிகாட்டுதல் அவனுக்கு அவசியமாகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்தளவில் மனிதனின் இயற்கைத் தன்மையை அடிப்படையாக வைத்து நோக்கும் பொழுது இந்த இறை வழிகாட்டுதல் தர்க்க ரீதியாக அவனுக்கு அவசியமாகின்றது.

## இறைவனின் அருட்கொடைகள்

இப்பிரபஞ்சத்தையும், அதில் மனிதனின் நிலையையும் உற்று நோக்கின் பகுத்தறிவு படைத்த எந்தவொரு மனிதனாலும் மறுக்க முடியாத ஓர் உண்மை புலப்படும். அதாவது, இவ்வுலகைப் படைத்த இறைவன் மனிதனின் உடல், உள்ளம், உலக வாழ்வு ஆகியவற்றோடு தொடர்புள்ள அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளான் என்பதே அதுவாகும். மனிதனுக்கு இறைவன் அருளிச் செய்திருக்கும் இந்த மகத்தான அருட்கொடைகளைப் பற்றித் திருக்குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிடுகின்றது.

> **“(இவையன்றி,) நீங்கள் கேட்டவைகளையெல்லாம், அவன் உங்களுக்கு அளித்தான். ஆகவே, அல்லாஹ்வுடைய அருட்கொடைகளை நீங்கள் கணக்கிடும் பட்சத்தில், அதனை உங்களால் எண்ண முடியாது! (இவ்வாறெல்லாமிருந்தும்) நிச்சயமாக மனிதன் வரம்பு மீறுகிறவனாகவும் (இவற்றை நிராகரிக்கும்) மிக்க நன்றி கெட்டவனாகவும் இருக்கிறான்.”**
>
> (அல்குர்ஆன் 14:34)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன்தான் பூமியை உங்களுக்குத் தொட்டிலாக ஆக்கி, அதில் நீங்கள் (விரும்பிய இடத்திற்குச்) செல்லும் பொருட்டு வழிகளையும் அமைத்தான். அவன்தான் மேகத்திலிருந்து மழையை அளவோடு இறக்கி வைக்கின்றான். (இவ்வாறு செய்கின்ற அல்லாஹ்வாகிய) நாம் தாம், பின்னர் அதனைக் கொண்டு, இறந்து போன பூமியை உயிர்ப்பித் திருக்கிறோம். இவ்வாறே நீங்களும் (இறந்த பின்னர் சமாதியிலிருந்து உயிர் கொடுத்து) வெளிப்படுத் தப்படுவீர்கள். அவன்தான் சகலவற்றையும், (ஆணும் பெண்ணும் கலந்த) ஜதை ஜதையாகச் சிருஷ்டித்தான். அன்றி கப்பல்களையும், நீங்கள் ஏறிச் செல்லக் கூடிய கால்நடைகளையும் உங்களுக்காக அமைத்தான். அவைகளின் முதுகுகளின் மீது நீங்கள் (ஏறி) அமர்ந்து கொள்வதற்காக. அதன் மீது நீங்கள் (திருப்தியாக) அமர்ந்து கொண்டால், உங்கள் இறைவன் புரிந்த இவ்வருளை நினைத்து, (இதற்காக நீங்கள் அவனை ஸ்தோத்திரம் செய்து,) 'இதன் மீது (ஏறச்) சக்தி யற்றவர்களாக இருந்த எங்களுக்கு, இதனை வசப்படுத்தித் தந்தவன் மிக்க பரிசுத்தமானவன்' என்றும், 'நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்வோம்' என்றும் கூறுவீர்களாக!"

(அல்-குர்ஆன் 43:10-14)

"(நபியே! பின்னும்) நீர் ஓதும்: உமது இறைவன் மாபெரும் கொடையாளி; அவன்தான் எழுது கோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றி (அதன் மூலம்) மனிதன் அறியாதவை களையெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக் கின்றான்."

(அல்-குர்ஆன் 96:3–5)

## சிருஷ்டியின் இலட்சியம்

இறைவன் மனிதனுக்கு அருளியிருக்கும், இப்பல்வேறு அருட்கொடைகளைப் பற்றிச் சிந்தித்து, ஆராயும்படி பணிக்கும் திருக்குர்ஆன் இச்சிந்தனையும், ஆராய்ச்சியும் இப்பிரபஞ்சத்தினதும், மனிதனினதும் சிருஷ்டியில் ஓர் உன்னதமான நோக்கமும், இலட்சியமும் உண்டு என்ற உண்மைக்கு அவனை இட்டுச் செல்லும் எனக் குறிப்படுகின்றது.

"அவன் வானங்களையும் பூமியையும் படைத் திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதை (ஏற்றிக்) கொண்டு சமுத்திரத்தில் செல்லும் கப்பலிலும், (வரண்டு) இறந்த பூமியை, உயிர்ப்பி(த்துச் செழிப்பாக்கி வை)க்க வானத்திலிருந்து அல்லாஹ் பொழிவிக்கச் செய்யும் மழையிலும், எல்லாவிதமான கால்நடைகளையும் பூமியில் பரவவிட்டிருப்பதிலும், காற்றுகளை(ப் பல கோணங்களில் திருப்பி)த் திருப்பி விடுவதிலும், வானத்திற்கும் பூமிக்குமிடையில் கட்டுப்படுத்தப் பெற்றிருக்கும் கருமேகத்திலும், (மனிதர்களுக்குள்ள பிரயோஜனங்களை ஆராய்ந்து) சிந்திக்கும் மக்களுக்கு (அவனுடைய அருளையும் அன்பையும் அறிவிக்கக் கூடிய அநேக) சான்றுகள் நிச்சயமாக இருக்கின்றன."

(அல்-குர்ஆன் 2:164)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானங்கள் பூமியின் படைப்பிலும், இரவு பகலின் மாற்றத்திலும், அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அறிவுடைய) இத்தகையோர், (தங்கள்) நிலையிலும், இருப்பிலும், தங்கள் படுக்கையிலும் அல்லாஹ்வையே நினைத்து, வானங்கள் பூமியின் படைப்பைப் பற்றிச் சிந்தித்து, 'எங்கள் இறைவனே! நீ இவற்றை வீணுக்காகப் படைக்கவில்லை. நீ மிகத் தூயவன், (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களை நீ இரட்சிப்பாயாக! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ எவர்களை (நரக) நெருப்பில் புகுத்தினாயோ அவர்களை, நிச்சயமாக இழிவுபடுத்தி விட்டாய். (அத்தகைய) அக்கிரமக் காரர்களுக்கு உதவி செய்வோர் (ஒருவரும்) இல்லை."

(அல்-குர்ஆன் 4:190-192)

## இறை வழிகாட்டலும் செயல் சுதந்திரமும்

எனவே, இஸ்லாத்தைப் பொறுத்தளவில் மனித வாழ்வின் அடிப்படை நோக்கம் இறைவனின் கட்டளைகளுக்கு இணைய வாழ்ந்து, அவனது சட்டங்களுக்குப் பரிபூரணமாக அடிபணிவதாகும். பிரபஞ்சத்தின் ஏனைய சிருஷ்டிகள் இயங்க வேண்டிய விதியையும், அவற்றின் பணியையும் வகுத்தளித்த இறைவன், மனிதனின் வாழ்விற்கான விதியையும், சட்டங்களையும் தனது திருத்தூதர் மூலமாக அருளினான். மனித வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும், இவ்விறைத்தூதர்கள் மனிதர்களுக்கு வழிகாட்டும் பொருட்டுத் தோன்றியுள்ளார்கள். இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்கள், முதல் இறைத் தூதராகவும் விளங்கினார்கள். எனவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை இறைவன் பூமியில் சிருஷ்டித்தவுடன் அவனுக்கு வழிகாட்டுதலையும், சட்டங்களையும் அருளினான். எனவே, இவ்வாறு மனிதனது கடமைகளும், பணிகளும் அவனுக்கு உணர்த்தப்பட்டதோடு மனிதனது வரலாறு ஆரம்பமாகின்றது. இக்கடமைகளைச் செய்யத் தவறிய சூழ்நிலையோடு அவனது வரலாறு தொடர்கின்றது.

எனவே, இஸ்லாமியக் கண்ணோட்டத்தின்படி மனிதனைச் சிருஷ்டித்த இறைவன் அவனுக்குப் பல்வேறு சக்திகளையும், ஆற்றல்களையும் வழங்கி, இறைதூதர்கள் மூலமாக அவனது வழிகாட்டுதலையும் அருளச் செய்து, இவ்வாற்றல்களையும், சக்திகளையும், வழிகாட்டுதலையும் அவன் விரும்பிய வகையில் பயன்படுத்தும் சுதந்திரத்தையும் வழங்கியுள்ளான்.

இஸ்லாத்தைப் பொறுத்தளவில் மனிதனுக்கு இறைவன் வழங்கியுள்ள இச் செயற் சுதந்திரம் அவனுக்கு மிகப் பெரிய பொறுப்புக்களை அளிக்கின்றது. திருக்குர்ஆனின் கருத்துப்படி, படைப்பினங்களில் மனிதன் மட்டுமே இந்தப் பொறுப்பைச் சுமக்க முன் வந்தான். மனிதன் எவ்வாறு இந்த மாபெரும் போராட்டத்தில் துணிந்து இறங்க முன்வந்தான் என்பதை அல்குர்ஆன் அழகுறப் பின்வருமாறு விளக்குகின்றது.

> **"நிச்சயமாக '(நம்முடைய) பொறுப்பைச் சுமந்து கொள்வீர்களா?' என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் முதலியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனைப் பற்றிப் பயந்து, அதனைச் சுமந்து கொள்ளாது விலகி விட்டன. அத்தகையதைத்தான் மனிதன் சுமந்து கொண்டான். (ஆகவே) நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டான்."**
>
> (அல்-குர்ஆன் 33:72)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, திருக்குர்ஆனின் கண்ணோட்டத்தில் வரலாறு என்பது இறைவன் மனிதனுக்கு விதித்துள்ள தார்மீகச் சட்டங்கள், ஒழுக்க நெறிகளின் செயற்பாட்டு முறையினையும், அதனோடு தொடர்புடைய விளைவுகளையும் விளக்கும் சம்பவங்களையும் குறித்து நிற்கின்றது. எனவே, நாம் ஏற்கெனவே விளக்கியவாறு இஸ்லாத்தின் சித்தாந்தப்படி முழுப் பிரபஞ்சமும் ஒரு நித்திய சட்டத்தாலும், நியதியாலும் பிணைக்கப்பட்டுள்ளது. சில ஒழுக்க நெறிகளையும், தார்மீகப் பண்புகளையும் வளர்த்துக் கொள்வதன் மூலமே சில இனங்கள் எழுச்சி பெறுகின்றன. இந்த ஒழுக்க நெறியும், அறநெறியின் அடிப்படையில் அமைந்த வாழ்வும் பிறழ்கின்ற பொழுது அவை வீழ்ச்சியடைகின்றன. பொதுவான இனங்களினதும், நாகரிகங்களினதும் வீழ்ச்சிக்கான காரணங்களாகச் சுட்டப் படும் அரசியல் குழப்பங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவைகள் படிப்படியான ஆத்மீக, தார்மீக வீழ்ச்சியின் பிரத்தியட்ச வெளிப்பாடுகளேயாகும்.

## இறை நியதி

திருக்குர்ஆனின் கருத்துப்படி இப்பிரபஞ்சம் முழுவதும் ஒரு பொதுவான சட்டத்திற்கும், நியதிக்கும் கட்டுப்பட்டே இயங்குகின்றது என்பதை ஏற்கனவே விளக்கினோம். அனைத்துப் படைப்பினங்களையும் பிணைக்கும் இந்நியதியை அல்–குர்ஆன் 'தக்தீர்' என அழைக்கின்றது.

**“வானங்கள், பூமி ஆகிய இவ்விரண்டும் (தம் நிலையிலிருந்து) விலகி விடாதபடி தடுத்துக் கொண்டிருப்பவன் நிச்சயமாக அல்லாஹ் தான். (தம் எல்லையிலிருந்து) அவ்விரண்டும் சாய முற்பட்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் அவை சாயாதபடி தடுக்கக் கூடியவன் அவனைத் தவிர வேறொருவனுமில்லை. நிச்சயமாக அவன் பொறுமையுடையோனும் மன்னிப்புடையோனுமாக இருக்கிறான்."

(அல்–குர்ஆன் 35:41)

"தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் (ஓர் அத்தாட்சியாகும்.) இது (யாவையும்) நன்கறிந்தோனும், மிகைத்தோனுமால் அமைக்கப் பட்டது. (உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்சங் கம்பைப் போல் (பிறையாக) ஆகும் வரையில், சந்திரனுக்கு நாம் பல பட்சங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம். சூரியன் சந்திரனை அணுக முடியாது; இரவு பகலை முந்த முடியாது. (இவ்வாறே கிரகங்களும் நட்சத்திரங்களும்) ஒவ்வொன்றும் (தன்னுடைய) வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றது."

(அல்–குர்ஆன் 36:38–40)

இயற்கையின் படைப்பினங்களை இயக்குவிக்கும் பொழுது 'தக்தீர்' என அழைக்கப்படும் இந்த இறைவனின் நியதியானது மனித சமுதாயத்தில் செயல்படும் பொழுது 'ஸுன்னதுல்லாஹ்' என அழைக்கப்படுகின்றது.

"மனிதர்களிடம் நேரான வழி வந்ததன் பின்னர், அவர்கள் அதனை விசுவாசித்துத் தங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோருவதைத் தடை செய்வதெல்லாம், முன்சென்றவர்களுக்கு நிகழ்ந்த (தைப் போன்ற) சம்பவம் இவர்களுக்கும் நிகழ வேண்டும் என்பது தான்; அல்லது இவர்கள் (கண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் (நம்முடைய) வேதனை வர வேண்டும் என்பதுந்தான்."

(அல்-குர்ஆன்:18:55)

"அவர்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவர் எவரும் வருவாராயின், நிச்சயமாகத் தாங்கள் மற்றெல்லா வகுப்பாரையும் விட நேரான பாதையில் சென்றுவிடுவோம் என்று (அரபிகளாகிய) அவர்கள் அல்லாஹ்வின் மீது மிக்க உறுதியான சத்தியம் செய்தார்கள். எனினும், அவர்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவர் வந்த சமயத்தில், அவர்களுக்கு அது வெறுப்பைத் தவிர (வேறெதனையும்) அதிகப் படுத்தவில்லை. (அன்றி, அவர்கள்) கர்வங்கொண்டு பூமியில் தீய காரியங்களைச் செய்யவும் சூழ்ச்சி செய்தார்கள். தீய சூழ்ச்சி, அச் சூழ்ச்சிக்காரரைத் தவிர (மற்றெவரையும்) சூழ்ந்து கொள்ளாது. (அழிந்து போன) முன்சென்றோரின் வழியைத் தவிர (வேறு எவ்வழியிலும் செல்ல) இவர்கள் எதிர்பார்க் கின்றனரா? அல்லாஹ் ஏற்படுத்திய வழியில் யாதொரு வேற்றுமையையும் நீர் காண மாட்டீர்; (அவ்வாறே) அல்லாஹ் ஏற்படுத்திய வழியில் மாற்றத்தையும் நீர் காண மாட்டீர்."

(அல்-குர்ஆன் 35:42-43)

இவ்வாறு 'ஸுன்னதுல்லாஹ்' என்ற நிலையான தெய்வீகக் கோட்பாடும், நியதியும் மனித சிருஷ்டியின் ஆரம்ப காலந்தொட்டே மனித இன வரலாற்றில் செயல்பட்டு வந்திருக்கின்றது. மேலும் கடந்த கால வரலாற்றில் ஒவ்வோர் இனமும், மக்கள் கூட்டமும் இந்நியதியினால் பிணைக்கப் பட்டிருந்த பாண்மையினையும் திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு முன்னரும் (இத்தகைய) பல வழிமுறைகள் சென்றிருக்கின்றன. ஆகவே, நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து (இறைவனுடைய வசனங்களைப்) பொய்யாக்கியோரின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைப் பாருங்கள்."

(அல்-குர்ஆன் 3:137)

'வழிமுறைகள்' என இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள 'ஸுனன்' என்ற சொல்லானது, 'ஸுன்னா' என்பதன் பன்மையாகும். இதன் பொருள் 'நடைமுறை', 'ஒழுகும் விதி' என்பதாகும். புகழ்பெற்ற திருமறை விரிவுரையாளர்களில் ஒருவரான இமாம் பைளாவியின் கருத்துப்படி, இத் திருவசனத்தில், 'ஸுனன்' என்பது அவனது சட்டங்களைப் பேணி வாழும் நல்லோரையும், அதனைப் புறக்கணித்து வாழும் பொல்லாரையும் இறைவன் நடத்தும் முறையையே குறித்து நிற்கின்றது.

## இறை சட்டத்தின் செயல்பாடு

இந்த 'ஸுனன்' என்னும் இறை நியதியின் அடிப்படையில் இவ்வுலகில் ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு குறிப்பிட்ட கால வரையறை வழங்கப்படுகின்றது.

"ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் (அவர்கள் வாழவும், அழியவும்) ஒரு காலமுண்டு. அவர்களுடைய காலம் வரும் பட்சத்தில் ஒரு வினாடி பிந்தவும் மாட்டார்கள்; முந்தவும் மாட்டார்கள்."

(அல்-குர்ஆன் 7:34)

அல்லாமா இக்பால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருமறை வசனம் ஒரு மாபெரும் வரலாற்றுக் கோட்பாட்டை விளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவதாகக் குறிப்பிட்டு, இத்திருவசனமானது உடற்கூற்றுச் சாத்திர வல்லுநர் மிருகங்களின் உடலைக் கூறுபடுத்தி ஆராய்வது போன்று, மனித சமுதாயத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி ஆகியன பற்றிய யதார்த்தத்தை அறிய மனித சமுதாயங்களினது வரலாற்றினையும் கூறுபடுத்தி ஆராய முடியும் என்ற உண்மையை விளக்குவதாகக் கூறுகின்றார்.

ஒவ்வொரு சமுதாயத்தவருக்கும் ஒரு குறிப்பிட்ட கால எல்லையை வரையறுக்கும் அதே நேரத்தில், இறைவனின் பேரருட் கருணையானது, ஒரு சமுதாயத்தில் இறைவனின் சட்டம் செயல்படும் காலவரையறையை மிகப் பரவலாக்குகின்றது. அதாவது ஒரு சமுதாயம் இறை கட்டளைகளைப் புறக்கணிக்க ஆரம்பித்தவுடன் இறைவனின் தண்டனை அவர்களை அடையாது, அவர்களுக்குத் தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும் வகையில் இறைவனின் சட்டத்தின் செயல்பாடு தாமதமாகியே நிகழ்கின்றது. எனவே, ஒரு சமுதாயத்தில் தீமைகளும், கொடுமைகளும், இறை கட்டளைக்கு மாறான செயல்களும் நிறைந்திருந்தாலும் இறைவனின் தண்டனை அவர்களை உடனே அடைந்துவிடாது என்ற உண்மையினைப் பின்வரும் திருவசனம் விளக்குகின்றது.

> **"மனிதர்களை, அவர்கள் தேடிக் கொண்ட (தீ) வினைக்காக (உடனுக்குடன்) அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால், பூமியில் யாதொரு (மனித) ஜீவனையும் விட்டுவைக்க மாட்டான்; ஆயினும், அவர்களைக் குறிப்பிடப்பட்ட தவணை வரையிலும் விட்டுவைக்கின்றான். அவர்களுடைய தவணை வரும் பட்சத்தில்– (உடனே அவர்களைப் பிடித்துக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொள்வான்.) நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்கியவனாகவே இருக்கின்றான்."**

(அல்-குர்ஆன் 36:45)

எனவே, இனங்களினதும், சமுதாயங்களினதும் எழுச்சி, வீழ்ச்சி பற்றிய திருக்குர்ஆனின் கண்ணோட்டப்படி அவை சமுதாய, அரசியல், பொருளியல், காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை. இவை துணைக் காரணிகளாக அமைந்தாலும் அடிப்படைக் காரணிகளன்று. திருக்குர்ஆனின் பரிபாஷையில் 'ஸுன்னதுல்லாஹ்' என அழைக்கப்படும் இறை சித்தமும், இறைநியதியுமே சமுதாயத்தையும், சமுதாய மாற்றத்தையும் தோற்றுவிக்கின்றது.

## இஸ்லாமிய வரலாறும் முஸ்லிம் அறிஞர்களும்

இக்கருத்துப்படி உண்மையில் இஸ்லாமிய வரலாறானது, இந்த இஸ்லாமிய வரலாற்றுத் தத்துவத்தின் அடிப்படையில் நோக்கப்பட்டும், விளக்கப்பட்டும், விமர்சிக்கப்பட்டும் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இஸ்லாமிய வரலாற்றின் ஏற்ற இறக்கங்களை உரிய முறையில் புரிய முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக, முஸ்லிம் அறிஞர்கள், இத்துறையில் மிகக் குறைவாகவே ஆர்வம் செலுத்தியுள்ளனர். இக்பால் கருதுவதைப் போன்று, வரலாற்றுப் பேரறிஞர் இப்னு கல்தூன் அவரது வரலாற்றுத் தத்துவத்தை விளக்கும் 'முகத்திமா' என்னும் நூலை எழுதத் தூண்டுகோலாக இருந்த காரணிகளுள் ஒன்று, திருக்குர்ஆனிலிருந்து அவர் பெற்றுக் கொண்ட தூண்டுதலே என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், இப்னு கல்தூன் கூட திருக்குர்ஆனின் வரலாற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தின் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றை நோக்கி, விளக்கி, விமர்சிக்க முயற்சி செய்யவில்லை. இயற்கை, வாழ்வு, சமூகம் ஆகியன பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் ஒரு வரலாற்றுத் தத்துவத்தைச் சமர்ப்பிப்பதே அவரது பணியாக அமைந்தது.

ஆரம்பகால முஸ்லிம் வரலாற்றறிஞர்கள், கால ஒழுங்கின் படி வெறுமனே வரலாற்று நிகழ்ச்சிகளையும், சரித்திர சம்பவங்களையும் பதிந்துவைத்தனரே தவிர அவற்றை விளக்கி விமர்சிக்க முற்படவில்லை. ஆரம்பகால முஸ்லிம் அறிஞர்களின் பொது வரலாற்று நூல்களைப் பொறுத்தளவிலும், வாழ்க்கைச் சரிதை நூல்களைப் பொறுத்தளவிலும் இதுவே நாம் காணும் உண்மையாகும்.

எமது சமகால முஸ்லிம் சிந்தனையாளர்களுள் ஒருவரான மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் தமது **'காததுல் பிக்ர் வ த஼வதில் இஸ்லாமி'** (இஸ்லாமிய சிந்தனையினதும், இஸ்லாமிய அழைப்பினதும் தலைவர்கள்) என்ற பெருநூலில் இஸ்லாமிய வரலாற்றுச் சரித்திரச் சம்பவங்களின் கோவையாகவும், வரலாற்று நிகழ்ச்சிகளின் வரிசைக்கிரமமான தொகுப்பாகவும் நோக்காமல் இஸ்லாத்தின் உயிர்ச் சக்தியினதும், இறைநியதியினதும் வெளிப்பாடாக நோக்கி விளக்கி, இக்குறையை நிவர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டார்கள். அது பற்றி அவர் தமது இந்நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

"துரதிர்ஷ்டவசமாக இஸ்லாமிய வரலாற்று நூல்களில் அரசர்களையும், ஆட்சியாளர்களையும் மையமாக வைத்து நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சியின் தொகுப்பையும், அல்லது தலைசிறந்த அறிஞர்களின் வெறுமனே வாழ்க்கை வரலாறுகளையும் மட்டுமே நாம் காண முடிகின்றது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய உலகில் தங்களது ஆழ்ந்த செல்வாக்கைப் பதித்துச் சென்ற முஸ்லிம் அறிஞர்களின் அறிவு ரீதியான, ஆத்மீக ரீதியான சாதனைகள் பற்றியோ இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள் பற்றியோ முஸ்லிம் சமுதாயத்தின் அறிவுத் துறை வரலாறு பற்றிய குறிப்புகளையோ நாம் காண முடியவில்லை.

இஸ்லாமிய வரலாறு பற்றித் தோன்றிய நூல்களில் காணப்படும் மிக முக்கியமான குறைபாடு யாதெனில், இந்நூல்களில் முஸ்லிம்களது வரலாற்றை இஸ்லாமிய வரலாற்றிலிருந்து வேறுபடுத்தி அறிவதற்கான முயற்சிகள் காணப்படாமையாகும். மௌலானா அபுல் அஃலா மௌதூதி அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது போல முஸ்லிம்களது வரலாற்றிற்கும் இஸ்லாமிய வரலாற்றிற்குமிடையேயுள்ள வித்தியாசத்தையும், வேறுபாட்டையும் பிரித்தறிய முனைந்த முதல் முஸ்லிம் சிந்தனையாளர் மகான் ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவீ ஆவார். மௌலானா மௌதூதி அவர்களின் வார்த்தைகளிற் சொல்வதானால், "ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள், தங்களது ஆராய்ச்சிகளை முஸ்லிம் சமுதாயத்தின் இலட்சியவாத அத்திவாரத்தை மிகப் பாரதூரமாகப் பாதிக்கும் வகையில், விஞ்ஞானம், நாகரிகம், அரசியல், சிந்தனை ஆகிய துறைகளைப் பொறுத்தளவில், முஸ்லிம்களது உள்ளத்தில் ஆதிக்கம் செலுத்திய இஸ்லாத்திற்கு முரணான நோக்குகளையும், சிந்தனைப் போக்கையும் ஆழ்ந்து நோக்கி விமர்சித்தார்கள்."

## ஸெய்யித் குத்பின் பங்களிப்பு

அண்மைக்காலப் பிரிவில் இலட்சியவாத அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றை நோக்கும் முயற்சிக்கு குறிப்பிடத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பைச் செய்தவர் பேரறிஞர் ஸெய்யித் குத்ப் அவர்களாவர். அவர்கள் இத்துறையில் மிகச் சிறந்த பணியைப் புரிந்துள்ளார்கள். இஸ்லாமிய வரலாறு பற்றி ஒரு தனிப்பட்ட நூலை அவர்கள் எழுதாவிட்டாலும், இஸ்லாமிய வரலாறு பற்றிய அவரது கண்ணோட்டம், தத்துவக் கோட்பாடு, அணுகுதல் பற்றிய அவரது நூலான 'அல் அதாலதுல் இஜ்திமாஇய்யா பில் இஸ்லாம்' என்னும் நூலின் மூலம் நாம் ஓரளவு அறிய முடிகின்றது. வரலாற்றை இயக்குவிக்கும் சக்தியாக 'இறைசித்தம்' அல்லது 'தெய்வீக விருப்பம்' விளங்குவதாக குத்ப் கூறுகின்றார். அவரது 'இறைசித்தம்' பற்றிய கோட்பாட்டைப் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் அவர் விளக்குகின்றார்.

> **"ஏதாவது ஓர் ஊரை (அவ்வூர்க்காரரின் தீய செயலின் காரணமாக) நாம் அழித்துவிடக் கருதினால், அதில் சுகமாக வாழ்வோரை நாம் ஏவுகிறோம். அவர்கள் அதில் விஷமம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். பின்னர் அவர்கள் மீது நம்முடைய வாக்கு ஏற்பட்டு, அவ்வூரை நாம் அடியோடு அழித்து விடுகிறோம்."**
>
> (அல்-குர்ஆன் 17:16)

ஸெய்யித் குத்பைப் பொறுத்தவரை இத்திருவசனத்திலுள்ள 'விருப்பம்' என்ற சொல், பொதுவாகக் கொள்ளப்படும் கருத்தில் இறைவனின் சித்தத்திற்குப் பதிலாக காரண காரியம் பற்றிய (Law of cause and effect) சட்டத்தையே இங்கு குறிப்பிடு கின்றது. எனவே, இத்திருமறை வசனத்தின் நியதிப்படி, ஒரு சமூகத்தில் ஆடம்பர வாழ்விலும், வீண் கேளிக்கைகளிலும் திளைக்கும் மக்கள் இருக்கின்ற நிலையில், அவர்களது ஆடம்பர வாழ்வைத் தடுக்கும் பணியில் ஈடுபடாமல், அது பற்றிக் கவலையற்ற நிலையில் அச்சமூகம் இருப்பின் உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமூகத்தில் ஆடம்பரத்தில் திளைக்கும் மக்களுக்கு எத்தகைய தடையுமின்றி அதில் ஈடுபட வாய்ப்பளிக்கப்படுகின்றது. இவையனைத்தும் இறுதியில், முற்றிலும் அச்சமூகத்தின் அழிவிற்கும், வீழ்ச்சிக்கும் காரணங்களாக அமைந்து விடுகின்றன. இதுவே 'இறைசித்தம்' என்பதன் கருத்தாகும். காரணங்கள் காணப்படின், அதனைக் காரியங்கள் தொடரும் என்பதே முழுப் பிரபஞ்சத்திற்கும், அதில் காணப்படும் உயிர்ப் பொருட்களுக்கும் இறைவன் விதித்துள்ள நியதியாகும்.

## இஸ்லாத்தின் உயிர்ச்சக்தி

குத்பைப் பொறுத்தளவில் இஸ்லாமிய வரலாற்றை இயக்குவிக்கும் இன்னோர் அம்சம் 'இஸ்லாத்தின் உயிர்ச் சக்தி'யாகும். இந்த உயிர்ச் சக்தியே ஆரம்பகால முஸ்லிம்களைச் செயலாற்றத் தூண்டும் இயக்கச் சக்தியாக அமைந்தது. இஸ்லாமிய வரலாற்றைப் பாரபட்சமற்ற கண்ணோட்டத்தில் படிக்கும் எவரும் இந்த உயிர்ச் சக்தியை இனங்கண்டு கொள்ள முடியும் என குத்ப் குறிப்பிடுகின்றார். ஆனால் ஓர் உயர்ந்த தத்துவத்தையும், மனதில் தோன்றும் சில நுண்ணிய உணர்வுகளையும் வெளியிடுவது எவ்வளவு கடினமானதோ, அதே போல் இந்த உயிர்ச் சக்தியையும் இப்படித்தான் என வரையறுத்துக் கூறுவது சிரமமானது. ஆனால் சம்பவங்கள், நிகழ்ச்சிகள், பழக்க வழக்கங்கள் மூலமாக இதனை இனங்கண்டுகொள்ள முடியும் எனக் குத்ப் குறிப்பிடுகின்றார்.

இஸ்லாமிய வரலாறு முழுவதிலும் இந்த இஸ்லாத்தின் உயிர் சக்தியானது அதன் ஆழ்ந்த செல்வாக்கைப் பதித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியக் கோட்பாடும் கொள்கை நெறியும் அதன் நீண்ட வரலாற்றில் பல உருவங்களையும், தோற்றங்களையும் பெற்றுள்ளபோதிலும், எக்காலப் பிரிவிலும் அது வெறுமனே அர்த்தமற்ற சித்தாந்தமாகவோ, கோஷிக்கப்படும் சுலோகமாகவோ புராணக் கதைகளாகவோ மட்டும் விளங்கியதில்லை. அது என்றுமே தனிமனிதர்களின் வாழ் விலும் வரலாற்று நிகழ்ச்சிகள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களின் உருவிலும் பிரத்தியட்ச வெளிப்பாடாய் விளங்கியுள்ளது.

இஸ்லாத்தின் உயிர்ச் சக்தியின் அடிப்படையிலும், அதன் பிரத்தியட்சமான வெளிப்பாட்டின் அடிப்படையிலுமே இஸ்லாமிய வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் தோன்றிய மகோன்னத புருஷர்களின் மகத்தான சாதனைகளைத் தர்க்க ரீதியாக விளக்க முடியும் என்பது குத்பின் கருத்தாகும். குத்பைப் பொறுத்தவரை, இஸ்லாமிய வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் நாம் சந்திக்கும் வீரச் செயல்களும், வியக்கத்தக்க சாதனைகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்று ஆங்காங்கு பரவலாக நிகழ்ந்த, எத்தகைய நோக்கமும் குறிக்கோளுமற்று நிகழ்ந்த சம்பவங்களும் நிகழ்ச்சிகளு மன்று. இஸ்லாத்தின் உயிர்ச்சக்தியே அவர்களுக்கு இச்செயல்களுக்கான தூண்டுதலை வழங்கியது. ஏனெனில், இந்த உயிர்ச் சக்தியானது இஸ்லாத்தின் செல்வாக்கின் கீழ் பூரணமாக மாற்றம் பெற்று வாழ்வில் புதுத் திருப்பம் கண்டு பூரணமாகப் புத்துயிர் பெற்ற மனிதர்கள் மூலமாகவே வெளிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாத்தின் ஆரம்பகால வெற்றிகள்

ஸெய்யித் குத்ப், இஸ்லாத்தின் ஆரம்பகால வெற்றிகளை இஸ்லாத்தின் ஆன்மீக சக்தியின் வெளிச்சத்தில் விளக்குகின்றார். அவரின் கருத்துப்படி இவ்வெற்றியானது, எண்ணிக்கையின் அடிப்படையிலன்றி, அதன் பண்பு, தரம், நிலை ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிக்கப்படல் வேண்டும். ஆரம்பகால முஸ்லிம்கள் பாரசீக, ரோம, சாம்ராஜ்யங்களை வெற்றிகொண்டதானது, இந்தக் கண்ணோட்டத்திலேயே விளங்கப்பட்டு, விளக்கப்படவும் விமர்சிக்கப்படவும் வேண்டும். ஏனெனில், இஸ்லாத்தின் ஆன்மீக சக்தியின் பலம் மட்டும் இல்லாவிட்டால், முஸ்லிம்களால், இந்த சாம்ராஜ்யங்களின் பலம் மிக்க சக்திக்கு ஒருபொழுதும் ஈடுகொடுத்திருக்க முடியாது.

இஸ்லாத்தின் வெற்றியானது, அம்மனிதர்களில் பொதிந்திருந்த இஸ்லாத்தின் ஆன்மீக சக்தியின் வெற்றியாகும். இந்த உண்மையானது, அதன் முன் லோகாயத சக்திகள் ஈடுகொடுத்துச் சமாளிக்க முடியாத ஆன்மீகக் கோட்பாட்டிற்கு வலுவூட்டுகின்றது. ஏனெனில், லோகாயத சக்திகளால் இத்தகைய ஓர் ஆச்சரியமான, அற்புத வெற்றிக்கான காரணங்களை விளக்க முடியாது என குத்ப் குறிப்பிடுகின்றார். எனவே, குத்பைப் பொறுத்தளவில் அரபுச் சமுதாயத்தின் சிந்தனை, வாழ்வு, சமூகம் ஆகியவற்றில் நிகழ்ந்த இந்தப் பரிபூரண மாற்றத்தை எத்தகைய பொருளாதாரப் புரட்சியும் தோற்றுவித்திருக்க முடியாது. ஓர் ஆன்மீகத் தத்துவத்தினால் மட்டுமே இத்தகைய அற்புதமான மாற்றத்தைத் தோற்றுவித்திருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமையாக்களும் அப்பாஸிகளும்

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலப்பிரிவில் பிரதிபலித்த அமைதியற்ற நிலையைப் பற்றி விளக்கும் குத்ப், இந்த அமைதியற்ற நிலைக்குக் காரணம், இஸ்லாமிய வாழ்க்கை முறையில் இயற்கையாகவே காணப்படும் பலவீனமும், குறைபாடுமா, அல்லது இஸ்லாத்திற்கு வெளியில் இருந்து வந்த சக்திகளின் ஊடுருவல் காரணமாகத் தோன்றிய தீயசக்திகளா என்பதை நாம் கண்டறிதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். இக்காரணங்களை விளக்கிய பின்னர் இதற்கான அடிப்படைக் காரணம், இஸ்லாமிய கட்டுக்கோப்புக்குள் உமையா வம்சத்தில் சிலர் ஜாஹிலிய்யாப் பண்புகளைப் புகுத்த முயற்சி செய்தமையே என்ற முடிவுக்கு குத்ப் வருகின்றார். உமையாக் காலப்பிரிவில் இந்த ஜாஹிலிய்யாப் பண்பு முஸ்லிம் சமுதாயத்தில் ஊடுருவல் செய்த பான்மையினை குத்ப் விரிவாக விளக்குகின்றார். இந்த தர்க்கரீதியான விளக்கத்தின் மூலமாக, இஸ்லாமிய வரலாற்றின் பிற்காலப் பிரிவில் தோன்றிய சீர்கேடான சமூக நிலைக்குக் காரணம், இஸ்லாமிய கட்டுக் கோப்பில் காணப்படும் இயற்கையான பலவீனம் அன்றி, இஸ்லாத்தின் உயிர்ச்சக்தி பலவீனமடைந்ததும், இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் தலையெடுத்தமையுமாகும் என்ற முடிவிற்கு குத்ப் வருகின் றார். ஆனால், இந்த இஸ்லாத்திற்கெதிரான சக்திகளால் தூய்மையான புனித இஸ்லாத்தை வெற்றிகொள்ள முடிய வில்லை.

இஸ்லாத்தின் சக்தி, ஆற்றல், கண்ணியம் ஆகியவற்றின் பிரதிபலிப்புக்கு உதாரணமாக இஸ்லாத்தின் ஆன்மீக சக்தியைக் கருதாது, வெறுமனே இஸ்லாத்தின் ஆட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடும் மனப்போக்கை குத்ப் கண்டிக்கின்றார். உமையாக்களின் காலப்பிரிவில் இஸ்லாமிய ஆட்சியின் பரவல் மிகத் தீவிரமாக நிகழ்ந்ததை அவர் மறுக்கவில்லை. ஆனால், இஸ்லாத்தில் அதன் உயிர்த்தன்மை மறைந்த பிறகு ஆட்சிப்பரவலால் அடையும் நன்மைதான் என்ன என அவர் கேள்வியெழுப்புகின்றார். எனினும் இத்தகைய அறைகூவல்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் இஸ்லாமிய சமூகத்தை உயிர்நிலையாகக் கொண்டு இயங்கிய இஸ்லாத்தின் உயிர்ச்சக்தி தொடர்ந்து செயல்பட்டது. உமையாக்களின் ஆடம்பர வாழ்விற்கெதிராக அபூதர் அல்-கிபாரியின் எதிர்ப்புக்குரல் இந்த ஆன்மீகச் சக்தியின் வெளிப்பாடு என குத்ப் குறிப்பிடுகின்றார். லோகாயத மனப்பான்மையில், இஸ்லாமிய ஆட்சியின் நெறி முறைக்கெதிராக ஆட்சிபுரிந்த உமையா ஆட்சியாளரிடையே நாற்பெரும் கலீபாக்கள் வரிசையில் எண்ணிப் போற்றத்தக்க கலீபாவான உமர் இப்னு அப்துல் அஸீஸ் தோன்றியதும் இஸ்லாத்தின் ஆன்மீக சக்தியின் வெளிப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகும். மறைந்திருக்கும் ஆன்மீக சக்தியின் ஆற்றல் மட்டும் இயற்கையாகவே இஸ்லாத்தில் காணப்படாவிட்டால் உமையா ஆட்சியானது வரலாற்றின் பக்கங்களிலிருந்தே இஸ்லாத்தை அகற்றியிருக்கும் என அவர் கருதுகின்றார். எனவே, இஸ்லாத்தின் உயிர்ச்சக்தி தொடர்ந்து நிலைபெற்றது. உறுதி குலையாமல் பல்வேறு காலங்களில் பல்வேறு உருவங்களில் தோற்றம் நல்கியது.

அப்பாஸிய ஆட்சியிலும் இஸ்லாத்திற்கு விரோதமான சக்திகள் தொடர்ந்து நிலைபெற்றன. அப்பாஸியர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது அரசர்களாக அவர்கள் விளங்கினார்களேயன்றி, கலீபாக்களாக விளங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலப் பிரிவில் முஸ்லிம் உலகத்தின் தார்மீக நிலை சீர்குலைந்து மக்கள் சன்மார்க்கக் கடமைகள் எதிலும் தொடர்பற்றிருந்தனர். எனவே, அப்பாஸிய ஆட்சியாளர் உமையா ஆட்சியாளரிலும், இவ்வகையில் சிறப்பு மிக்கவர்களன்று. அவர்கள் அனைவரும் மொத்தமாகக் கொடுமையும், அநீதியும் நிறைந்த மன்னராட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

## இஸ்லாத்தின் உயிர்ச்சக்தியின் நீடிப்பு

ஆனால், இஸ்லாத்தின் ஆன்மீக சக்தி இதனையெல்லாம் வெற்றி கொண்டு தொடர்ந்து நிலைத்தது. பல்வேறு உருக்களிலும் தோற்றங்களிலும் வெளிப்பட்டது. இன்றுவரை முஸ்லிம் உலகிற்கு ஆக்கமும், ஊக்கமும், உறுதியும், நம்பிக்கையும் வழங்கும் உயிர்ச்சக்தியாக அது நிலைத்துள்ளது. இந்த இஸ்லாத்தின் உயிர்ச்சக்தியின் நித்தியமான தொழிற்பாட்டின் அடிப்படையிலேயே, ஸெய்யித் குத்ப் அவர்கள் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் இஸ்லாமிய நிறுவனங்களின் புனரமைப்பையும், மறுமலர்ச்சியையும் எதிர் நோக்குகின்றார்.

வரலாற்றில் பல்வேறு சோதனைகளை எதிர்கொண்டு, அவற்றை வெற்றிகரமாகச் சமாளித்து ஒரு சக்தியாக இஸ்லாம் நிலைத்துள்ளது. ஆயிரம் ஆண்டுகளாக நடந்த பெரு முயற்சியினாலும், உழைப்பினாலும் கட்டியெழுப்பப்பட்ட ரோம சாம்ராஜ்யம், ஹன்ஸ் (Huns) கொத்ஸ் (Goths) போன்றோரின் படையெடுப்பினால் ஒரு நூற்றாண்டுக்குள் சிதறுண்டு, சின்னாபின்னமாக்கப்பட்டு வீழ்ச்சியடைந்தது. எஞ்சியுள்ள ஒரு சில சின்னங்களைத் தவிர, ரோம சாம்ராஜ்யத்தின் வரலாற்றுச் சின்னங்கள் எதுவுமே இல்லை எனக் கூறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய முறையில் அது அழிக்கப்பட்டது. ஆனால், இஸ்லாமிய ஆட்சியானது ஏறக்குறைய அரை நூற்றாண்டு கால முயற்சியால்தான் கட்டியெழுப்பப்பட்டதெனினும், உள்நாட்டு எதிர்ப்பையும், பிறநாட்டுப் படையெடுப்புக்கள் பலவற்றையும் சமாளிக்கவேண்டிய நிலை அதற்கிருந்தும், அது இயன்றளவும் பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளது. நவீன மேற்கத்திய நாகரிகத்தின், லோகாயத, கலாசார ஆயுதங்களின் துணைகொண்டு அதற்கெதிராக நடாத்தப்பட்ட போராட்டத்திலும், இஸ்லாத்தின் உயிர்ச்சக்தி செயல்பட்டு அதனைக் காப்பாற்றியுள்ளது என குத்ப் கூறுகிறார்.

இஸ்லாமிய இலட்சியவாதத்தின் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றை ஆழ்ந்து நோக்கி விளங்கிய உளப்பண்பே அவரைப் பின்வருமாறு பிரகடனப்படுத்தத் தூண்டியது

**"இஸ்லாமிய உலகில், இஸ்லாமிய வாழ்வானது மீண்டும் புத்துயிர் பெற்று மறுமலர்ச்சியடையுமென நான் மனப்பூர்வமாக நம்புகின்றேன். இந்த நம்பிக்கை வெறுமனே மத நம்பிக்கையால் எனக்கு ஏற்பட்டதன்று. எதிர்காலத்தில் ஒரு தேசிய சக்தியாக அல்ல, உலக சக்தியாக இஸ்லாம் விளங்கும் என நான் பூரணமாக விசுவாசிக்கின்றேன். வீண் பிரமைகளில், கற்பனாவாதங்களில் தஞ்சமடையும் பண்பு என்னிடமில்லை. இந்த இஸ்லாமிய மறுமலர்ச்சி சாத்தியமானது மட்டுமல்ல மிக இலேசானதுமாகும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு

மனித நாகரிக வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டம் மொழியின் தோற்றத்தோடு ஆரம்பமாகிறது. மனிதனுக்குத் தனது உணர்வுகளையும் கருத்துக்களையும் வெளியிடத் துணைபுரியும் வகையில், அவனுக்குச் சொற்களையும், மொழியும் ஆற்றலையும், அந்தப் பேசும் ஆற்றலுக்குத் துணை புரியும் வகையில் நாவு, உதடுகள் போன்ற உறுப்புக்களை வழங்கியமையும் இறைவன் மனிதனுக்கு வழங்கிய மகத்தான அருட்கொடைகளாகக் குர்ஆன் கருதுகின்றது.

> **"(நபியே) அளவற்ற அருளாளன் தான் இந்தக் குர்ஆனை (உமக்கு)க் கற்றுக் கொடுத்தான். அவனே மனிதனைச் சிருஷ்டித்தான்; அவனே மனிதனுக்கு (விளக்கமாக)ப் பேசவும் கற்பித்தான்."** (55:1-4)

> **"(நாம் அவனுக்குப் பேசக்கூடிய) ஒரு நாவையும், இரு உதடுகளையும் (கொடுக்கவில்லையா)"** (90:9)

மொழியினடியாகவே இலக்கியம் தோன்றி வளர்ந்தது. மனித நாகரிகத்தின் ஆரம்ப காலப் பிரிவிலிருந்து வரலாற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கால கட்டங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் இலக்கியம் ஏதோ ஓர் உருவில் – கவிதையாகவோ – உரைநடையாகவோ தோன்றி வளர்ந்திருப்பதை நாம் காண முடிகின்றது. இலக்கியம் மனித உணர்வுகள், கருத்துகளின் வெளிப்பாட்டுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. மனிதனின் மகிழ்ச்சியையும், சோகத்தையும், களிப்பையும், கவலையையும், நம்பிக்கையையும், ஆசைகளையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் இலக்கியம் பிரதிபலித்தது. இலக்கியத்துக்கும் சமுதாயத்துக்கும் இடையேயுள்ள தொடர்பு இறுக்கமானது. அது சமுதாயத்தின் அடியாகத் தோன்றி, வளர்ந்து சமுதாய மாற்றங்களுக்கேற்ப வளைந்து கொடுத்து மாற்றமடைந்துள்ளது.

இலக்கியம் மனிதனின் உணர்வுகள், கருத்துகளின் வெளிப்பாடாக விளங்குவதால், அது எப்பொழுதும், ஒரு நம்பிக்கை, கொள்கை, கோட்பாட்டோடு இணைந்தே காணப்படும். மனித வரலாற்றில் அவ்வப்போது தோன்றி வளர்ந்த கொள்கைகள், இலட்சிய வாதங்களுக்கேற்ப இலக்கியம் பற்றிய பல்வேறு கொள்கைகள் தோன்றி வளர்ந்துள்ளன. பிரபஞ்சம், அதில் மனிதனின் நிலை, மனிதனின் வாழ்வு; இம்மூன்று அடிப்படை அம்சங்களை நோக்கும் முறையிலேயே பல்வேறு கொள்கைகள், இலட்சியவாதங்களுக்கிடையே வித்தியா சங்கள் தோன்றுகின்றன. இவ்வித்தியாசங்கள் இலக்கியம் பற்றிய கொள்கைகளிலும் வித்தியாசங்களைத் தோற் றுவிக்கின்றன. இலக்கியம் பற்றி, இருப்புவாதம் (Existentialism), இயற்கை வாதம் (Naturalism), யதார்த்தவாதம் (Realism), குறியீட்டுவாதம் (Symbolism) ஆகிய பல்வேறு கொள்கைகள் நிலவுவதை நாம் காண முடிகின்றது. எமது சமகால இலட்சியவாதங்களான முதலாளித்துவம், கம்யூனிஸம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சித்தாந்தங்களும் இலக்கியம் பற்றி அவற்றிற்கே உரிய கோட்பாடுகளைக் கொண்டுள்ளன. Pelkanow என்பார் எழுதிய "Art and Social Life" (கலையும் சமூக வாழ்வும்) என்னும் நூலில் கலை, இலக்கியம் பற்றிய கம்யூனிஸ சித்தாந்தம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.[2] எமது சமகால இலட்சியவாதங்கள் அனைத்தும் பொதுவாகவும், பொதுவுடைமைவாதம் சிறப்பாகவும், கொள்கைப் பிரசாரத்துக்காக இலக்கியத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதை நாம் காண முடிகின்றது. ஏனெனில், மக்களின் உணர்வுகளைத் தூண்டி, அவர்களது சிந்தனை, கருத்துக்களில் ஆதிக்கம் செலுத்தி, அவர்களது குணவொழுக்கங்கள், தன்மைகளை உருவாக்குவதில் இலக்கியம் மிகச் சக்தி வாய்ந்ததாகும். எனவேதான், பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளுள் ஒருவரான ஸ்டாலின் "இலக்கியவாதிகள் மனித சமுதாயத்தை நிர்மாணிக்கும் கட்டடக் கலைஞர்கள்" எனக் குறிப்பிட்டார். எவ்வாறு ஒரு கட்டடக் கலைஞன் கட்டடத்துக்கு ஓர் அமைப்பு, தோற்றம், ஒழுங்கு என்பவற்றை அளித்து, அதனை நிர்மாணிக்கின்றானோ, அதே போன்று இலக்கியவாதி அவனது கருத்துக்கள் மூலம் மனிதனின் சிந்தனை, உணர்வுகளை உருவாக்கி, மனிதன் என்ற கட்டடத்தை நிர்மாணிக்கின்றான் என்ற இந்தக் கருத்து, சமுதாயத்தில் இலக்கியம் வகிக்கும் சக்தியும் பலமும் வாய்ந்த நிலைக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

சமுதாய சிந்தனையை நெறிப்படுத்துவதில் மகத்தான சக்தியான இலக்கியம் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு என்ன? இஸ்லாம் இலக்கியத்தை எவ்வாறு நோக்குகின்றது? இஸ்லாத்துக்கென்று தனிப்பட்ட இலக்கியக் கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டா? அப்படியாயின் அதன் பண்புகள், சிறப்பம்சங்கள் என்ன? அது எவ்வகையில் மற்றக் கோட்பாடுகளிலிருந்து வித்தியாசப்படுகின்றது? போன்ற வினாக்களுக்கு விடைகண்டு, இஸ்லாமிய இலக்கியக் கோட்பாட்டை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முஸ்லிம்களால் ஆக்கப்படும் இலக்கியங்கள் அனைத்தும் – அது இஸ்லாத்துக்கு முரணான எந்தக் கருத்துக்களை உள்ளடக்கியிருந்தாலும் சரியே – அவை இஸ்லாமிய இலக்கியமெனக் கொள்ளப்படும் என்ற ஒரு கருத்து மயக்கம் நிலவும் இன்றைய காலகட்டத்தில் இந்தச் சிந்தனைத் தெளிவு அவசியமாகும். மேலும், எமக்கென ஓர் இலக்கியக் கொள்கையை வகுத்து, அதன் வழிநின்று படைத்து, சமூகத்தின் அறிவுத் தேவையோடு (Intellectual need) அழகுணர்வுத் தேவையை(Aesthetic need)யும் பூர்த்தி செய்ய இது மிகவும் அவசியமாகும்.

## கலை கலைக்காக அன்று

இஸ்லாமிய இலக்கியம், "கலை கலைக்காகவே" என்ற குறுகிய வரம்பிற்குட்பட்ட இலக்கியமன்று; அது ஒரு மகத்தான இலட்சியத்தை வரித்துக் கொண்ட இலக்கியமாகும். அது ஓர் உன்னதமான நோக்கமும், உயர்ந்த குறிக்கோளுமுடையதாகும். இஸ்லாமிய இலக்கியம் வெறும் இலக்கிய ரசனையையும், கலையின்பத்தையும் நோக்கமாகக் கொண்டதன்று. அது ஓர் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கான துணைச் சாதனமாகும். இறை நம்பிக்கை, மறுமை நம்பிக்கை ஆகியவற்றை மனிதனின் உள்ளத்தில் தோற்றுவித்து, உயர்ந்த உன்னதமான பண்புகளை அவனில் வளர்ப்பதே அதன் இலட்சியமாகும்.

இஸ்லாமிய இலக்கியம் சத்தியம், நன்மை, அழகு ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று அடிப்படைப் பண்புகளோடு தொடர்புடையதாகும். இஸ்லாமிய இலக்கியம் சத்தியத்தை, உண்மையை வெளிப் படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு நன்மையான வழியையே அது கடைப்பிடிக்கின்றது. சத்தியத்தை அல்லது நன்மையை நல்ல வழியைக் கையாண்டு புலப்படுத்த அழகுணர்வை அது துணையாகக் கொள்கின்றது. இந்த அடிப்படையில் நோக்கும்பொழுது இஸ்லாமிய இலக்கியம் 'சத்தியம்', 'நன்மை', 'அழகு' ஆகிய மூன்று அம்சங்களோடும் இணைந்து நிற்பதை நாம் காண முடிகின்றது.

ஒவ்வொரு பொருளையும் கணிப்பதற்கு இஸ்லாம் சிறப்பாக அதற்கேயுரித்தான மதிப்பீடுகளைக் கொண்டுள்ளது. இந்த மதிப்பீடுகளின் நோக்கில் நன்மையானவற்றை அது ஏற்றுக் கொண்டு தீமையானவற்றை நிராகரிக்கின்றது. சிலவற்றை அது முற்றிலும் நிராகரிக்காமல் இஸ்லாமியப் பண்புகளை அளித்து அவற்றைத் தன்னோடு இணைத்துக் கொள்கின்றது. எல்லா விடயங்களைப் பொறுத்தளவிலும் இஸ்லாம் கடைப்பிடிக்கும் இந்தக் கொள்கையையே இலக்கியத்தைப் பொறுத்தளவிலும் அது கடைப்பிடிக்கின்றது.

பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியன பற்றி விரிவான, அதற்கேயுரிய கோட்பாட்டை இஸ்லாம் கொண்டுள்ளது. இந்தக் கோட்பாடு இஸ்லாமிய இலட்சியவாதத்தின் அடித்தளத்தில் எழுப்பப்பட்டதாகும். எனவே, இந்த இலட்சியத்தின் அடிப்படையில் பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியன பற்றிய கோட்பாட்டின் மூலத்திலிருந்து உருவாகிய இலக்கியமே இஸ்லாமிய இலக்கியமாகும். இந்தப் பொதுவான விளக்கத்தின் பின்னணியில் இஸ்லாமிய இலக்கியத்துக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறலாம் :

'பிரபஞ்சம்', 'இயற்கை', 'வாழ்வு', 'மனிதன்' ஆகியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் நோக்கும் தன்மைக்கேற்ப, அவற்றை அழகியல் நோக்கில் அணுகி விளக்குவதே இஸ்லாமிய இலக்கியமாகும். பேராசிரியர் முஹம்மத் குத்ப் அவர்கள் 'அதபுல் இஸ்லாமி'யை அதாவது இஸ்லாமிய இலக்கியத்தை 'அதபுல் ஈமான்' (நம்பிக்கையின் இலக்கியம்) எனவும், 'அதபுல் அகீதா' (நம்பிக்கைக் கோட்பாட்டின் இலக்கியம்) எனவும் வர்ணிக் கின்றார்.[3] ஏனெனில், இஸ்லாமிய இலக்கியம் (அதபுல் இஸ்லாமி) ஈமானிலிருந்தும், அதனடியாகத் தோன்றும் அகீதா விலிருந்துமே ஊற்றெடுக்கின்றது. எனவே, ஈமானிலிருந்தும் அகீதாவிலிருந்தும் ஊற்றெடுக்காத அல்லது அவையிரண் டிற்கும் முரணான வகையில் தோன்றுகின்ற இலக்கியம் இஸ்லாமிய இலக்கியமன்று, என்ற கருத்து இதிலிருந்து பெறப்படுகின்றது.

## சத்தியத்தின் குரல்

இஸ்லாமிய இலக்கியம் உண்மை அல்லது யதார்த்தத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டதாகும். அது சத்தியத்தை அல்லது யதார்த்தத்தைத் தாண்டுவதில்லை. கவைக்குதவா கற்பனை களுக்கு அங்கு இடமில்லை. இலக்கியத்தின் அழகுலகில் சஞ்சரித்தாலும், கற்பனையின் வான்வெளியில் சிறகடித்துப் பறந்தாலும் இஸ்லாமிய இலக்கியவாதி நிஜவுலகை மறப்பதில்லை; சத்தியத்தோடுள்ள உறவைத் துண்டித்துக் கொள்வதில்லை. கலாநிதி நஜீப் கைலானி அவர்கள் முஸ்லிம் இலக்கியவாதியைப் (அதீபுல் முஸ்லிம்) பின்வருமாறு வர்ணிக்கின்றார்: "அவனது இரண்டு கால்களும் பூமியில் ஆழப் பதிந்திருக்கும்; அவனது இலட்சியங்கள் கார்த்திகை விண்மீன் குழுவைத் தொடும்."[4]

இஸ்லாமிய இலக்கியம் சத்தியத்தோடு தொடர்புடையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறும்பொழுது உள்ளதை உள்ளவாறு அப்படியே அது முழுக்க முழுக்கப் பிரதிபலிக்க வேண்டுமென்றோ, அதில் உணர்ச்சி, கற்பனை ஆகியவற்றுக்கு இடமே இல்லை என்றோ கருத்தன்று. ஏனெனில், இலக்கியம் உணர்ச்சியோடும், கற்பனையோடும் தொடர்புடையது. உணர்ச்சியும் கற்பனையும் இன்றி இலக்கியமே இல்லை. இஸ்லாமிய இலக்கியம் அடிப்படையில், உணர்வும் கற்பனையும் இணைந்த இலக்கியமாகவும், இரண்டாவதாக அது இஸ்லாத்தோடு இணைந்ததாகவும் இருத்தல் வேண்டுமென்பதே இதன் கருத்தாகும்.

## அழகியல் நோக்கிலே

இஸ்லாமிய இலக்கியம் மனித உணர்வுகளின் வெளிப்பாட்டுக்கு மிக விரிந்த அளவில் களம் அமைத்துக் கொடுக்கின்றது. ஏனெனில், உயிர்த்தன்மையுள்ள இலக்கியம் உணர்ச்சியுடையதாக இருத்தல் அவசியம். எனவே, இஸ்லாமிய இலக்கியம் என்பது தத்துவரீதியாக இஸ்லாமியக் கோட்பாடுகளை விளக்கும் இலக்கியமன்று; அல்லது அது சில உபதேசங்கள், அறிவுரைகள், போதனைகளின் கூட்டுக் கலவையுமன்று. அது அவற்றைவிடப் பன்மடங்கு விரிந்த பொருட்களை உள்ளடக்குகின்றது. இந்த முழுப் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள பொருட்களையும் இஸ்லாமியக் கோட்பாட்டின் நிலைக்களனில், அழகுணர்ச்சியின் அடிப்படையில் நோக்கி விளக்குவதாகும்.

இஸ்லாமிய இலக்கியம் இஸ்லாத்தையோ அதன் கோட்பாடுகள், நிகழ்ச்சிகள் என்பவற்றையோ, அதனோடு தொடர்புடைய தனிமனிதர்களையோ மட்டும் தழுவி நிற்பதன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அத்தனை பற்றியும் அது பேசினாலும், அதனைத் தாண்டி முழுப் பிரபஞ்சத்தையும் இஸ்லாமிய அழகியல் நோக்கில் அது தழுவி நிற்கின்றது. தென்றலில் அசைந்தாடும் மலர்கள், காலையிளம் சூரியன், வானத்தில் கண் சிமிட்டும் தாரகைகள், தெளிந்த நீரோடை, வசந்தத்தின் வரவு, மனிதனின் வாழ்க்கைப் போராட்டங்கள் ஆகிய அனைத்தும் இஸ்லாமிய இலக்கியத்தின் கருப்பொருளாக அமையலாம். ***உள்ளதை உள்ளவாறு கூறுதல் வரலாறு; அது இலக்கியமன்று. உள்ளதை உணர்ந்தவாறு கூறுதலே இலக்கியமாகும்.*** இந்த இலக்கிய உண்மையை இஸ்லாமிய இலக்கியத்தோடு தொடர்புபடுத்திய பேராசிரியர் முஹம்மத் குத்ப் பின்வருமாறு விளக்குகின்றார் :

"ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களை மிக உன்னத, உயர்ந்த பண்புகளைக் கொண்ட ஒரு சத்திய புருஷர் என வர்ணித்து விளக்குவது இஸ்லாமிய இலக்கியமன்று. ஆனால், அவர் பெருமானார் (ஸல்) அவர்களை இறைவனின் பேரொளிச் சுடரின் ஓர் ஒளிப்பிழம்பாகவும், அந்த ஒளிப்பிழம்பின் வெளிச்சம் உலகின் நான்கு மூலைகளையும் ஒளிமயமாக்கியதாகவும் நோக்கி விளக்கினால், இந்த விளக்கமும், வர்ணணையும் இஸ்லாமிய இலக்கியமாகும். அதே போன்று பத்ர் யுத்தத்தை உலகில் நன்மைக்கும்-தீமைக்கும் இடையில் நடந்த போராட்டமாகவும், அப்போரில் சத்தியத்துக்காகப் போராடியோர், அசத்தியத்துக்காகப் போராடியோரைத் தமது இறை நம்பிக்கையின் சக்தியால் தோற்கடித்தனர் எனவும் விளக்கினால் அது இஸ்லாமிய இலக்கியமன்று; ஆனால், அவர் ஒளியை இருள் விரட்டுவதாகவும் ஒளிக்கும் இருளுக்குமிடையில் நடந்த போரில் இருளை ஒளி வெற்றி கொண்டதாகவும் விளக்கும்பொழுது அது இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமாகின்றது. எனவே, இலக்கியம் எந்தப் பொருளையும் கருப்பொருளாகக் கொள்ளலாம். ஆனால், அப்பொருளைக் கையாளும் வகையைப் பொறுத்தே அது இலக்கியம் என்ற அந்தஸ்தை அடைகின்றது"[5].

எனவே, இஸ்லாமிய இலக்கியத்தின் களம் மிகவும் விரிந்தது. இலக்கியம் மனிதனின் உணர்வுகள், அனுபவங்களின் வெளிப்பாடுகள் எனில், ஒரு முஸ்லிமின் உணர்வுகளும் அனுபவங்களும் எல்லையற்றவை. ஆகவே, இஸ்லாமிய இலக்கியத்தின் களமும் எல்லையற்றது. இஸ்லாமிய சட்டவல்லுனர்கள் இஸ்லாமியச் சட்டத்தைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த அடிப்படை விதிமுறை இஸ்லாமிய இலக்கியத்துக்கும் பொருத்தமானதாகும். அதாவது "அனைத்துப் பொருட்களும் அனுமதிக்கப்பட்டவை; (ஹலாலானவை) – சட்டத்தால் விலக்கப்பட்டவை (ஹறாம்) தவிர." இங்கு அனுமதிக்கப்பட்டவற்றின் களம் மிகவும் விரிந்ததாகவும், அவையல்லாத, விலக்கப்பட்டவற்றின் வட்டம் மிகவும் குறுகியதாகவும் காணப்படுகிறது. கடந்த பல நூற்றாண்டுகளாக முஸ்லிம் சட்ட அறிஞர்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் பொறுத்தளவில் கடைப்பிடித்த இந்த நியதியை வாழ்க்கையின் அம்சங்களுள் ஓர் அம்சமான இலக்கியத்தைப் பொறுத்தளவில் ஏன் கடைப்பிடிக்க முடியாது? எனவே, இஸ்லாமிய இலக்கியம் மனித வாழ்வோடு தொடர்புடைய அனைத்து அம்சங்களையும், இயற்கையோடு தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமையலாம்.

ஒவ்வோர் இலட்சியவாதத்துக்கும் கொள்கைக்கும் பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய ஓர் அணுகுமுறை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இலட்சியவாதங்கள், கொள்கைகளின் இலக்கியம் அந்த அணுகுமுறையிலிருந்தே தோன்றுகின்றது. இந்த வகையில், இந்த இலட்சியவாதங்கள், கொள்கைகளை வரித்துக் கொண்டோர் அக்கொள்கைகளைப் பிரசாரம் புரிய இலக்கியத்தை ஒரு சக்திமிக்க ஆயுதமாகக் கையாளுகின்றனர். ரஷ்ய எழுத்தாளர்களின் கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் முதலாளித்துவச் சமுதாயத்தின் ஊழல்களையும், வர்க்கப் பிரிவினை தோற்றுவிக்கும் பிரச்சினைகளையும், பொதுவுடைமைச் சமுதாயத்தின் சிறப்பியல்புகளையும் மிகவும் நுட்பமாகச் சித்திரிப்பதைக் காணலாம். அதே போன்று அமெரிக்க எழுத்தாளர்கள் தனிமனித சுதந்திரத்தின் சிறப்பையும், பொதுவுடைமைச் சமுதாயத்தின் சீர்கேடுகளையும் சித்திரிக்கும் வகையில் இலக்கியம் படைப்பதை நாம் காணலாம். எனவே, இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது இஸ்லாமியக் கோட்பாடுகளின் வரையறைக்குட்பட்டு இஸ்லாமிய இலட்சியத்தின் சிறப்பினைக் கூறும் இலக்கியங்கள் ஏன் தோன்ற முடியாது?

## இஸ்லாமிய இலக்கியத்தின் அவசியம்

பல்வேறு இலட்சியவாதங்களும் கொள்கைகளும் மனிதனின் சிந்தனையிலும் உள்ளத்திலும் ஆதிக்கம் செலுத்தப் போராடும் இன்றைய காலகட்டத்தில், இஸ்லாமிய மதிப்பீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் இப்போராட்டக்களத்தில் இஸ்லாத்தின் பலம் மிக்க ஆயுதங் களாக அமையலாம். ஆனால், இத்துறையில் முஸ்லிம் உலகில் ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறல் வேண்டும். எமது உடனிகழ்கால இஸ்லாமிய இலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியவாதிகள் இஸ்லாத்தைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் நோக்கி, இஸ்லாத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆராய்ந்து, பல நூல்களை வெளியிட்டு, முஸ்லிம் சமூகத்தின் எமது சமகால அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்துள்ளனர். ஆனால், மக்கள் அறிவு படைத்தவர்கள் மட்டுமல்லர். மக்களின் அறிவுத் தேவை ஆராய்ச்சி நூல்களால் பூர்த்தி செய்யப்படுவது போன்று, அழகியல் உணர்வு பற்றிய தேவைகள் இலக்கியம் மூலமாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு இஸ்லாமியக் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் மூலமாக மக்களின் அழகியல் உணர்வு பற்றிய தேவைகள் பூர்த்தி செய்யப்படாதவிடத்து, அவர்கள் இந்த உணர்வின் தேவையை நிறைவு செய்ய வேறு இலக்கியங்களின் துணையை நாடுவர். பசியால் வாடுபவன் வயிற்றுப்பசிக்கு, கிடைத்த எந்த உணவையும் உண்டு தனது தேவையைப் பூர்த்தி செய்ய முனையும் பொழுது, சில போது அந்த உணவு அவனது உடல் நலத்திற்கு ஊறு விளைவிப்பதாகவும் அமையலாம். இதே போன்று அவனது அழகியல் உணர்வு பூர்த்தியாக, அவன் நாடும் இலக்கியம் அவனது இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கும் அவனது ஒழுங்கமைவிற்கும் கூட ஊறு விளைவிக்கும் வகையில் அமையலாம். இன்று முஸ்லிம்களின் சிந்தனை, நம்பிக்கை, ஒழுங்கமைப்பு ஆகியவற்றைச் சீர்குலைக்கும் கவிதை, சிறுகதை, நாடகங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் பரவிவருவதாக முஸ்லிம் உலகில் குரல் எழுப்பப்படுகிறது. ஆனால், இவ்வாறு குரல் எழுப்புவதனாலோ, அத்தகைய இலக்கியங்களைத் தடை செய்வதாலோ பிரச்சினை தீர்ந்துவிடாது. அந்த இடைவெளியை நிரப்ப, மாற்று வழியாக இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு, வரம்புக்குட்பட்ட கவிதை, சிறுகதை, நாவல், நாடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டு, இளைஞர்களின் அழகியல் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இன்றைய இஸ்லாமிய இலக்கியங்கள் இத்துறையில் போதிய கவனம் செலுத்தவில்லை என்றே கூற வேண்டும்.

## வரலாற்று ஒளியிலே

ஆனால், கடந்தகால இஸ்லாமிய வரலாற்றில் இலக்கியம் இந்தப் பணியை வெற்றிகரமாக ஆற்றியிருப்பதை இஸ்லாமிய வரலாறு உணர்த்துகின்றது. இஸ்லாத்துக்கும், முஸ்லிம் சமூகத்துக்கும் எதிரான சவால்களை அறிவுரீதியான இயக்கங்கள், நூல்கள் சமாளித்தது போன்று, அழகுணர்வின் வழிநின்று இலக்கியமும் சமாளித்து ஒரு மகத்தான பங்கை நிறைவேற்றியுள்ளது. இஸ்லாமிய கோட்பாடுகளுக்கெதிரான 'ஸிந்தீக்குகள்' (Zindig), குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கருத்து, சிலுவைப் போர் ஆகிய சக்திகளுக்கெதிராக இலக்கியக் களத்திலும் போர் தொடுக்கப்பட்டது. பல கவிஞர்கள் இவை பற்றிய கவிதைகளைப் பாடியுள்ளனர். காதிஸிய்யாப் போர்க்களத்தில் ஸஃத் இப்னு அபீ வக்காஸ் போர் வீரர்களை மட்டுமன்றி, திருக்குர்ஆனைச் சிறப்பாக ஓதும் காரிகளையும், அறிஞர்களையும் கவிஞர்களையும் கூட இஸ்லாமிய அணியில் ஒன்றுதிரட்டியிருந்தார். ஷம்மாக், (Shammakh), அல்-ஹதீஆ (Al-Hathia), அவ்ஸ் இப்னு மஃஸா (Aws Ibn ma'za) போன்ற கவிஞர்களை அவர் அங்கு ஒன்று திரட்டியிருந்ததாக வரலாற்று ஆசிரியர் அத்-தபரீ குறிப்பிடுகின்றார்.[3]

எனவே, போர்வீரர்கள் இராணுவத் தேவைகளையும், காரிகள் மக்களின் ஆன்மீகத் தேவைகளையும், அறிஞர்கள் அறிவுத் தேவைகளையும், கவிஞர்கள் அழகியற் தேவைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிஸிய்யாப் போர்க்களத்தில் பூர்த்தி செய்தனர்.

## முஸ்லிம்கள் படைக்கும் இலக்கியங்கள் அனைத்தும் இஸ்லாமிய இலக்கியமாகுமா?

ஆனால், காலப் போக்கில் முஸ்லிம்கள் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் செலுத்தினாலும், இஸ்லாமிய நெறி முறைகளின் வரம்பிற்குட்பட்ட இஸ்லாமிய இலக்கியத்தைப் படைக்கும் பணியை மறந்தனர். மக்களின் அழகியல் தேவைகள் புறக்கணிக்கப்பட்டன. மக்கள், அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேறுவகையான இலக்கியங்களை நாடினர். இவ்விலக்கியங்கள் பெரும்பாலும் முஸ்லிமல்லாதவர்களால் இயற்றப்பட்டதாகவும், சிலபோது இஸ்லாமிய சமூகத்தின் நம்பிக்கைகளுக்கு ஊறு விளைவிப்பனவாகவும் அமைந்தன. முஸ்லிம்கள் கூட, இஸ்லாமிய இலக்கியக் கோட்பாடு பற்றிய எத்தகைய பிரக்ஞையுமின்றி இலக்கியம் படைத்ததால் அதிலும் இஸ்லாத்தின் முத்திரை காணப்படாதது மட்டுமன்றி, சிலபோது அதற்கும் முஸ்லிம் அல்லாதோரின் இலக்கியத்துக்குமிடையில் வித்தியாசமும் காணப்படவில்லை.[7]

எனவே, இஸ்லாமிய இலக்கியக் கோட்பாடு பற்றிய ஒரு தெளிவு இன்று மிகவும் அவசியமாகும். முதலில் இஸ்லாமிய இலக்கியம் என்றால் என்ன? அதன் தன்மைகள், பண்புகள் யாவை? என்பன பற்றி ஒரு தெளிவு ஏற்படின் அந்த எல்லைக் கோட்டின் வரம்பிற்குள் உருவாகும் இலக்கியங்கள் - அவை கவிதை, சிறுகதை, நாவல், நாடகம்-எதுவாயினும், அவை இஸ்லாமிய இலக்கியமாகக் கணிக்கப்படலாம். இஸ்லாம் எந்த இலக்கிய உருவத்திற்கும் எதிரானதன்று; ஏனெனில், ஒவ்வொரு காலப் பிரிவுக்கும் அதற்கே உரிய இலக்கிய உருவம் உண்டு. ஒரு காலப்பிரிவில் கவிதை, காவியம் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவங்களாக விளங்கின. ஆனால், இன்று காவியம் அதன் நிலையை இழந்துவிட்டது. கவிதையோடு, நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய புது இலக்கிய உருவங்கள் தோன்றியுள்ளன. இந்த இலக்கிய உருவங்களை இஸ்லாமிய ஷரீஅத்தின் கட்டுக்கோப்பிற்குட்பட்டு பயன்படுத்துவதன் மூலம் எமது சமகால முஸ்லிம் சமூகத்தின் அழகியல் தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியும்.

இன்றைய எமது காலகட்டத்தில் ஒவ்வொரு கொள்கையினதும் பிரசாரத்திற்காக இலக்கியம் ஒரு பலம் மிக்க ஆயுதமாகக் கருதப்படுகின்றது. எனவே, இலக்கியத்தை 'இஸ்லாமிய தஃவத்தின்' ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இன்று தோன்றியுள்ளது.[8]

## எதிர்காலப் பணியை நோக்கி

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய இலக்கியம் பற்றிய தெளிவு, அதன் பணி பற்றிய அவசியம் உணரப்பட்டு, அதனை உருவாக்குவதற்கான விரிந்த அளவிலான பணி மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை எமது சமகால அறிஞர்கள் சிலர் உணர்ந்து, அப்பணியில் சில ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை நல்ல அறிகுறியாகும். இம்முயற்சிகளை அவற்றின் பல்வேறு வளர்ச்சிப் படிவங்களை விளக்குவதன் மூலம் முஸ்லிம் உலகில் இஸ்லாமிய இலக்கியம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் வெற்றிகரமாக முன்னேறி வரும் பான்மையை நாம் காணமுடிகின்றது.

இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் தனிப்பட்ட சிறப்பியல்புகளைக் கொண்ட 'இஸ்லாமிய இலக்கியம்' என அழைக்கத்தக்க இலக்கிய வகையொன்று முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதிகளினால் தோற்றுவிக்கப்படல் அவசியம் என்ற கருத்தை இன்றைய முஸ்லிம் உலகின் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவரான ஸெய்யித் அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள், டமஸ்கஸிலுள்ள மஜ்மஉல் இல்மி அல்-அரபியின் உறுப்பினர்களுள் ஒருவராக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது முதன்முதல் தெரிவித்தார்கள். அவர்களைத் தொடர்ந்து ஷஹீத் ஸெய்யித் குத்ப் அவர்கள் தங்களது **அத்-தாரிக் பிக்ரதுன் வ மின்ஹாஜுன்**[9] என்ற நூலில் இஸ்லாமிய இலக்கியத்தை உருவாக்குவதற்கான அவசியத்தை வலியுறுத்தி, இஸ்லாமிய இலக்கியத்தின் பண்புகளையும் விளக்கியுள்ளார். ஸெய்யித் குத்பின் சகோதரர் பேராசிரியர் முஹம்மத் குத்ப் தனது 'மன்ஹஜுல் பன்னுல் இஸ்லாமீ'[10] என்னும் நூலில் இஸ்லாமிய இலக்கியத்தின் பண்பினை மிக விரிவாகவும் விளக்கமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்துள்ளார். நஜீப் கைலானி என்னும் அறிஞர், தனது 'அல்-இஸ்லாமியா வல் மதாஹிபுல் அதபிய்யா' என்னும் நூலில் இலக்கியம் பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டையும், இஸ்லாமிய இலக்கியத்தின் எல்லைக் கோடுகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். இமாதுத்தீன் கலீல் என்னும் அறிஞர் தனது 'பிந்-நக்தில் இஸ்லாமியில் மஆஸிர்'[11] என்னும் நூலில் சமகால இஸ்லாமிய இலக்கிய முயற்சிகள் சிலதை விமர்சித்துள்ளார்.

இத்தகைய அறிவு ரீதியான முயற்சிகளுக்கு முஸ்லிம் கலாநிலையங்களில் ஆக்கபூர்வமான சில முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதை நாம் காண முடிகின்றது. றியாதிலுள்ள இமாம் முஹம்மத் ஸுஊத் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பட்டப்படிப்புக்கான பீடங்களில் இஸ்லாமிய இலக்கியம் பற்றிய ஆய்வுத் தலைப்புக்களில் ஆராய்ச்சி நடாத்த மாணவர்கள் தூண்டப்பட்டு, இத்துறையில் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துறையில் அப்துல்லாஹ் ஹம்த் அல்-வய்ஷிக் என்பார், கலாநிதி அப்துர் றஹ்மான் ர.ஃ.பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷாவின் கீழ் தனது பட்டப்படிப்புக்காக இஸ்லாமிய இலக்கியம் பற்றி ஆய்வு நடாத்தி, "அல்-அதப் பீ கித்மதில் ஹயாதி வல் அகீதா" என்னும் தலைப்பில் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரையை அப்பல்கலைக்கழகம் அண்மையில் பிரசுரித்து வெளியிட்டுள்ளது.

இத்துறையில் மிகச் சிறப்பான ஒரு முயற்சி லக்னோவிலுள்ள நத்வதுல் உலமாவில், மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்களின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டது. 1981 ஜூன் மாதத்தில் சர்வதேச இஸ்லாமிய மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மூன்று நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் முஸ்லிம் உலகின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்திருந்த உலக முஸ்லிம் அறிஞர்கள் பலர் இஸ்லாமிய இலக்கியம் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளைச் சமாப்பித்து, கருத்துப் பரிமாற்றம் செய்தனர். இவ்வாய்வுக் கட்டுரைகள் நத்வாவின் மாதாந்தச் சஞ்சிகையான 'அல்-ப ஃஸூல் இஸ்லாமி'யின் 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் இதழில் பிரசுரிக்கப்பட்டன.

இந்த முயற்சிகள் முஸ்லிம் உலகில் இத்துறையில் மிகத் தெளிவான, உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை உணர்த்துகின்றன. இத்துறையில் தமிழ் பேசும் முஸ்லிம்களும் குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம்களும் தீவிர கவனம் செலுத்தல் அவசியம்.

எமது மரபு வழி நின்று, எமது கோட்பாட்டில் காலூன்றி, இலக்கியம் படைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பிற இலக்கியங்களின் தாக்கங்களிலிருந்து எமது இளம் சந்ததியினரைப் பாதுகாப்பதோடு எமக்கென்று ஒரு தனிப்பட்ட இலக்கியப் பாரம்பரியம் தோன்றவும், இஸ்லாமிய த ஃவத்தின் பணிகளுக்கு இலக்கியம் களம் அமைத்துக் கொடுக்கவும் வழி பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்


1. Art. 'Literature' Encyclopaedia Britannica.
2. Pelkanow, Art & Social Life. Moscow, 1951
3. Muhammad Qutb, Manhaj-ul Fann ul Islami, Dar-Us-shuruq, 1980. p.110, 119
4. Najib Kailani, Al-Islamiyya wal Mazahib-ul Adabiya, Maktabat-un-Nur Tripoli. 1963
5. Muhammad Qutb, Op. cit p.130
6. Tabari, Tarikh Ur Rusul wal Muluk, Cairo. 1961. Vol III p. 533
7. Anvar Jundi, Tahdiyat At-Taghrib fi muwajahathi Isalat Al - Adab Al-Arabi. Art. Al-Ba'sul Islami, Lucknow, October. 1981. pp.162-163
8. Abdul Rahman Hasan Al Maidani. Art. Mabadi fil Adab wad Da'wa, Al-Ba'sul Islami, Lucknow. Op. ct., p.138-145
9. Seyyed Qutb, Fit Tarikh Fikrun wa Minhajun, Dar Us Shuruq. Beirut 1978.
10. Imadud din Kalil, Fin-Nakdil Islamiyil Maasir, Beirut.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய அரசியற் கோட்பாடு

இஸ்லாமிய அரசியற் சிந்தனை, கோட்பாடு, அதன் அடிப்படைப் பண்புகள் பற்றிப் பொதுவாக விளக்குவதும், அதன் வளர்ச்சிக்கு முஸ்லிம் சிந்தனையாளர்களின் பங்களிப்புகளின் சில முக்கிய அம்சங்களை ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இஸ்லாமிய அரசியற் சிந்தனையை உரிய முறையில் விளங்குவதற்கு, அதனை அணுகுவதில் சில அடிப்படையான விதிமுறைகளைக் கடைப்பிடித்தலும் பேணுதலும் அவசிய மாகும். இஸ்லாமிய அரசியற் சிந்தனை என்பது முற்றிலும் அதற்கே உரிய சில சிறப்பியல்புகளைக் கொண்ட, அடிப்படையில் ஏனைய அரசியல் சிந்தனைகளிலிருந்து வேறுபட்ட ஒரு கோட்பாடாகும். எனவே, மேலெழுந்தவாரியாக அதற்கும், மேற்கத்திய ஜனநாயகம் போன்றவற்றிற்குமிடையில் காணப்படும் சில ஒருமைப்பாடுகளை வைத்து, அதனை ஏனைய அரசியற் சிந்தனைகளோடு இணைந்ததாக நோக்க முனைவது பொருத்தமானதாக அமைய மாட்டாது. மேலோட்டமாக நோக்கும்போது, இஸ்லாமிய அரசியற் சிந்தனைக்கும், ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் கோட்பாடுகளுக்குமிடையில் சில பொதுவான அம்சங்கள் காணப்படலாம். ஆனால், இஸ்லாமிய அரசியற் சிந்தனை அவற்றிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது என்பதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக, இஸ்லாத்தில் அரசியலுக்கும் (Politics) ஒழுக்கத்திற்கும் (Ethics) இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இந்தப் பண்பு இஸ்லாமிய அரசியற் சித்தாந்தத்திற்கே உரிய சிறப்பியல்பாகும்.

## சமூகச் சூழ்நிலையின் தாக்கம்

ஓர் அரசியற் தத்துவத்தை விளங்குவதற்கு அது தோன்றிய சமூகச் சூழலை அவசியம் விளங்குதல் வேண்டும். ஓர் அரசியற் கோட்பாடு, ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலிலிருந்தே தோற்றமெடுக்கின்றது. இது எல்லா அரசியற் தத்துவங்களுக்கும் பொருந்தும் உண்மையாகும். ஓர் அரசியற் கோட்பாட்டை அது தோன்றிய சமூகச் சூழ்நிலையிலிருந்து வேறுபடுத்தி நோக்கி விளங்குதல் முடியாது. J. Friggs என்பார் Divine Rights of Kinship என்ற கோட்பாடு, அக்காலப் பிரிவில் நிலவிய சமூக அடிப்படையிலிருந்தே உருவாகியது என்ற கருத்தை அவரது நூலில் நிறுவுகின்றார். எனவே, சில நிகழ்வுகளினடியாகவே இந்தச் சித்தாந்தம் தோன்றியதேயன்றி, வெறுமனே ஒரு சிந்தனைக் கோட்பாடாக மட்டும் அது உருவாகவில்லை. இதே போன்று ஹொப்ஸ் (Hobbes), லொக் (Locke), ரூஸோ (Rousseau) போன்றோர்களின் அரசியற் கோட்பாடுகள் அவர்களது காலச் சமூகச் சூழ்நிலையையே பிரதிபலிக்கின்றன. இதேபோன்று இஸ்லாமிய அரசியற் சிந்தனை இஸ்லாமிய வரலாறு, சூழல் என்பவற்றினடியாகவே வளர்ச்சியடைகின்றது. ஆரம்பத்தில் இஸ்லாமிய அரசியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் கோட்பாடுகள் 'கிலாபத்'தை மையமாக வைத்து நிறுவப்பட்டன. கால வளர்ச்சியோடும், மாற்றங்களோடும் இஸ்லாமிய அரசியற் கோட்பாடானது ஆட்சியின் தோற்றம், ஆட்சி பற்றிய கோட்பாடு (Theory of state), ஆட்சியின் அமைப்பு (Form of state), இறைமை (Sovereignty) ஆகிய பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாக வளர்ச்சியுற்றது. இஸ்லாமிய அரசியற் கருத்துக்கள் காலக்கிரமத்தில் கோட்பாடுகளாக வளர்ச்சியடைந்தன. இஸ்லாமியக் கருத்துக்கள், கோட்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தர்க்கரீதியான கருதுகோள்களின் அடிப்படையில், பல்வேறு இஸ்லாமிய அரசியற் சிந்தனை மரபுகள் (School of thought) தோன்றின.

இஸ்லாமிய அரசியற் கோட்பாடானது இன்னொரு சிறப்பம்சத்தைப் பொதிந்து, ஏனைய கோட்பாடுகளிலிருந்து வேறுபடுகின்றது. அதுவே இஸ்லாமிய அரசியற் சிந்தனைகள் 'ஷரீஆ' என்னும் இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்டிருப்பதாகும். 'ஷரீஆ' சமூகத்திற்கு முக்கியத் துவமளிப்பதால், இஸ்லாமிய அரசியற் சிந்தனையானது சமூகத்தோடு இணைந்ததாகவும், சமூகத்தில் கரிசனை யுள்ளதாகவும் அமைந்துள்ளது. உண்மையில், இஸ்லாமிய அரசியற் சிந்தனையைப் பொறுத்தளவில் ஆட்சியின் (State) அடிப்படை நோக்கமே சமூகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுதலும், அதன் பாதுகாப்பும் நலனுமாகும். இந்த நோக்கங்கள் கருதியே ஆட்சி நிறுவப்படுகின்றது. எனவே, தனிமனிதனுக்கு இஸ்லாமிய ஆட்சி அமைப்பில் மிகக் கணிசமான இடம் இருந்தாலும், சமூகக் கட்டுக்கோப்பின் பின்னணியிலேயே அவன் நோக்கப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஜ்திஹாத்

இஸ்லாமிய அரசியற் சித்தாந்தத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றாகக் காணப்படுவது, அது தனிமனிதர்களின் சிந்தனைக்கு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையைப் பெற்றிருப்பதாகும். 'இஜ்திஹாத்' என்ற கோட்பாடு இந்தப் பண்பை அதற்கு வழங்குகின்றது. காலத்தினதும், சமூகச் சூழலினதும் மாற்றமானது, வித்தியாசமான அணுகல்களையும், விளக்கங்களையும் அவசியமானதாக ஆக்குகின்றது என்பதே இஜ்திஹாதின் தத்துவமாகும். ஆழமாக நோக்கினால், இஜ்திஹாத் என்பது மனிதனின் சொந்தக் கருத்துகளுக்கு மதிப்பளித்து, மனித சுதந்திரத்திற்கு இடமளிப்பதாகும். இந்தப் பண்பே முஸ்லிம் அரசியற் சிந்தனையாளர்களுக்கு தங்களது கருத்துக்களைச் சித்தாந்தங்களாகவும் கோட்பாடுகளாகவும் விருத்தி செய்யும் வாய்ப்பை நல்கியது. எனவே, அரசியல் சித்தாந்தங்களை அவர்கள் பல்வேறு கண்ணோட்டங்களிலும் அணுகுமுறைகளிலும் நோக்கி விளக்கியதானது, பல்வேறு அரசியற் சிந்தனை மரபுகளாக வளர்ச்சியடையக் காரணமாக அமைந்தது. உதாரணமாக, கிலாபத் என்ற நிறுவனம் இந்தப் பல்வேறுபட்ட அரசியற் சிந்தனை மரபுகளால் பல்வேறு கண்ணோட்டங்களாக நோக்கி விளக்கப்பட்டது.

இஸ்லாமிய அரசியற் சித்தாந்தத்தில் நாம் அவதானிக்கும் இன்னோர் அடிப்படையான அம்சம், அரசியற் சித்தாந்தம் பற்றிய முழுமையான அணுகலாகும் (Organic approach). அதாவது, இஸ்லாத்தைப் பொறுத்தளவில், அரசியற் கருத்துக்கள் பற்றிய ஆய்வானது, அதன் முழுமையான வாழ்வியலின் ஓர் அங்கமாகும். எனவே, அரசியற் சிந்தனை என்பது ஒரு தனிப்பட்ட துறையாக அமைந்தாலும், மனித அறிவோடு தொடர்புடைய ஏனைய கலைகளான வரலாறு, உயிரியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல், சட்டம், தத்துவம் ஆகியவற்றிலிருந்து பிரிந்து வேறுபட்டதாக அமையவில்லை.

இஸ்லாமிய அரசியற் சிந்தனை பற்றி உரிய முறையில் விளங்குவதற்கு அதில் அரசியலும் ஒழுக்கமும் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ள தன்மையை நன்கு விளங்குதல் வேண்டும். அனைத்து இஸ்லாமிய அரசியற் சிந்தனையாளர்களும் மனிதனின் செயல் சுதந்திரத்திற்கும் நடத்தைக்கும் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இந்தக் கட்டுப்பாடு, அவனது நடத்தைகளுக்கு ஒழுக்கப் பரிமாணத்தை நல்கி, நன்மைக்கும் தீமைக்கும் இடையில் வித்தியாசம் கண்டுணரும் அறிவை அவனுக்கு அளிக்கின்றது. நன்மையிலிருந்து தீமையைப் பிரித்தறியும் இந்த அறிவின் மூலமாகவே ஆட்சியின் மிக உயர்ந்த இலட்சியமான சமூகத்தின் நலனும் மகிழ்வும் என்ற இலக்கை அடைய முடிகின்றது. அப்படியில்லாத நிலையில் மனித நாகரிகமே தூர்ந்து அழிந்து விடுகின்றது.

## ஆட்சியின் தோற்றம்

நவீன ஐரோப்பிய அரசியற் சிந்தனையாளர்களின் கோட்பாடுகள் பல, முஸ்லிம் சிந்தனையாளர்களின் கருத்துக்களினடியாகவே பெறப்பட்டிருப்பதை இத்துறை சார்ந்த ஆய்வுகள் உணர்த்துகின்றன. முஸ்லிம் சிந்தனையாளர்களின் ஆய்வுக்கு உட்பட்ட ஒரு துறை 'ஆட்சியின் தோற்றம்' பற்றியதாகும். முஸ்லிம் அரசியற் சிந்தனையாளர்களுள் சிறப்பிடம் பெறும் அல் பாராபி (கி.பி. 870–950) ஆட்சியின் தோற்றம் பற்றிய பரிசீலனையில் கவனம் செலுத்தினார். 'அல்–மதீனதுல் பாளிலா' என்னும் அவரது நூலில், அவரது கோட்பாடு விளக்கப்பட்டுள்ளது. ஆட்சியின் தோற்றம் பற்றிய அவரது கோட்பாடுகளில் முக்கியமானதாக அமைவது 'உரிமைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறத்தல்' (Concept of denunciation of rights) பற்றிய சித் தாந்தமாகும். ஆட்சியின் தோற்றத்திற்கு முன்னர் மனிதனின் வாழ்வானது, சக்தியும் வல்லமையும் உள்ளவன் பலவீனனை அடக்கியாளும் அநீதியின் அடிப்படை யில் அமைந்திருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். அதிகாரம் படைத்தவன் மற்றைய மனிதனை அடிமையாக விற்கும் அல்லது வாங்கும் இத்தகைய சூழலில், மனித வாழ்வு பரஸ்பரம் பயத்திலும் பகைமையுணர்வின் அடிப்படையிலும் அமைந்திருந்தது. இத்தகைய வாழ்வு மனிதனைப் பலவீனப்படுத்தியது. இந்நிலையில் அவன் பாதுகாவலை வேண்டி நின்றான். இத்தகைய பயமும் அச்சமும் நிறைந்த நிலையானது மனிதனை அவனது சக மனிதர்களோடு சமரசமாக இணங்கி வாழும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கியது. இந்நிலையில் அவன் தனது உரிமை (Rights), அதிகாரம் (Authority) ஆகியவற்றிற் சிலவற்றைத் துறந்து, அவற்றைத் தனக்குப் பாதுகாவல் நல்குபவருக்கு (Protector) அதாவது ஆட்சியாளருக்கு வழங்க இணங்கினான். இவ்வாறு சத்தியப் பிரமாணம் செய்து தனது உரிமைகளைத் துறப்பதானது, ஒரு பக்கம் மக்களுக்கும், இன்னொரு பக்கம் பாதுகாப்பு நல்கும் தலைவர் அல்லது ஆட்சியாளருக்குமிடையில் ஓர் ஒப்பந்தத்தின் அமைப்பைப் பெற்றது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினரே ஒன்றாக இணைந்து, சமாதானமாக வாழ்ந்து ஒரு அரசியற் சமூகத்தை (Political Society)த் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்தது, அம்மக்கள் பிரிவினரிடையே காணப்பட்ட பூகோள ரீதியான, கலாசார ரீதியான உறவுகளும் தொடர்புகளுமாகும். இந்த வகையில் நோக்கும்போது, 17ம் 18ம் நூற்றாண்டுகளில் சமூக ஒப்பந்தத்தின் மூலமாகவே ஆட்சி தோற்றமெடுக்கின்றது என்ற (Theory of social contract) கருத்தை முன்வைத்த ரூஸோ, ஹொப்ஸ் போன்றோரின் முன்னோடியாக நாம் அல்-பாராபியைக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இமாம் கஸ்ஸாலி

இஸ்லாமிய அரசியற் சிந்தனையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த இன்னொரு முக்கியமான சிந்தனையாளர் இமாம் கஸ்ஸாலி (1058-1111) அவர்களாவர். 'இஹ்யா உலூமுத்தீன்' என்னும் அவர்களது பெருநூலில், ஆட்சியின் தோற்றம் பற்றிய அவர்களது கோட்பாட்டைப் பின்வருமாறு விளக்குகின்றார்கள் :

"மனிதன் இயற்கையாகவே தனது தேவைகளுக்காகப் பிறரில் தங்கி நிற்கும் நிலையிலேயே சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். சமூகத்தில் மக்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைப் புரிந்து, அவர்களது பரஸ்பர ஒத்துழைப்பு, கூட்டுறவின் மூலம் சமூகத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வகையிலேயே இயற்கையின் அமைப்பு உள்ளது. இவ்வாறு சமூகத்தில் மக்களிடையே நிலவும் கூட்டுறவு முயற்சியாகப் பல புதிய தொழில்கள் உருவாகின்றன. சமூகத்தின் நிலைபேறு, பாதுகாப்பு என்பன பல புதிய தொழில் முயற்சிகளை, தேவைகளை உருவாக்குகின்றன. உதாரணமாக, மக்க ளிடையே தோன்றும் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து அவற்றை உரிய முறையில் பங்கிடல், போர்களின் போது அவை தொடர்பாக ஏற்படும் பல்வேறு துறை சார்ந்த தொழில் முயற்சிகளை நாம் குறிப்பிடலாம். எனவே, சமூக வாழ்வை ஒழுங்கு படுத்துவதற்கான தேவையானது, ஒவ்வொரு மனிதனையும் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் இயங்கச் செய்வதற்குச் சட்டத்தையும், ஆட்சியையும் அவசிய மாக்குகின்றன. இந்த நிலையிலேயே அந்த ஆட்சியைப் பொறுப்பேற்று நடத்தும் தகுதிவாய்ந்தவன் ஆட்சியாளனாக ஆகின்றான். இத்தகைய சமூகத் தேவைகள் ஓர் ஆட்சியாளன் தோன்றக் காரணமாக அமைகின்றன."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் கஸ்ஸாலி அவர்களின் ஆட்சியின் தோற்றம் பற்றிய கோட்பாடு, மனிதர்கள் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கும் இயற்கைத் தன்மையானது ஒரு பக்கம் சட்டத்தையும் ஆட்சியையும் தோற்றுவிப்பதையும், இன்னொரு பக்கம் அதிகாரத்தின் மத்திய சக்தியாக ஆட்சியாளன் தோன்றுவதையும் விளக்குகின்றது. இமாம் கஸ்ஸாலி அவர்களின் ஆட்சியின் தோற்றம் பற்றிய இக் கோட்பாடு, அவர்களுக்கு எட்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய ஐரோப்பிய அரசியற் சிந்தனையாளர்களான ஸ்பென்ஸர் (Spencer), ஹக்ஸ்லி (Huxley) ஆகியோரின் கருத்துக்களை ஒத்துள்ளது. இத்துறையில் இமாமவர்கள் இத்தகைய ஐரோப்பிய சிந்தனையாளர்களின் முன்னோடியாக அமைகின்றார்கள்.

## இப்னு ஜமாஆ

ஆட்சியின் தோற்றம் பற்றி ஆராய்ந்த இன்னொரு முஸ்லிம் அரசியற் சிந்தனையாளர் இப்னு ஜமாஆ (கி. பி. 1241–1331) ஆவார். இப்னு ஜமாஆவின் 'தஹ்ரீர் அல் அஹ்காம்' என்னும் நூலில் அவரது அரசியற் தத்துவம் விளக்கப்படுகின்றது. அவரது கருத்துப்படி ஆட்சி என்பது 'அதிகாரத்தின்' அடிப்படையில் தோன்றுகின்றது. 'சக்தியும் அதிகாரமும் படைத்த ஒருவன் ஏனைய மனிதர்களைப் படைபலத்தால் அடக்கி, அவனது அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரும்போது, ஆட்சி உருவாகின்றது' என அவர் குறிப்பிடுகின்றார். எனவே, ஆட்சி பற்றிய விடயத்தில் ஆட்சியின் தோற்றம் பற்றிய அல்–பாராபியின் ஒப்பந்தக் கோட்பாட்டிலிருந்து, அவரது கருத்து வித்தியாசப்பட்டதாக அமைந்தது. மனிதன் தனது ஆரம்ப வளர்ச்சிப் படிவத்தில், அவனது அதிகாரத்தையும் ஆட்சி உரிமையையும் பிறருக்காகத் துறக்கும் துறவு நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்திருக்கவில்லை எனக் குறிப்பிடும் இப்னு ஜமாஆ, அவனது அரசியல் வாழ்க்கையை, ஒழுங்குபடுத்துவதற்கு ஒன்றுபட்டு இயங்க முடியாத நிலையிலேயே சக்தியும் அதிகாரமும் படைத்தவன் அவர்களிடையே தோன்றி, அவனது பலத்தின் அடிப்படையில் ஆட்சியை உருவாக்கும் சந்தர்ப்ப சூழ்நிலையை ஏற்படுத்தியது எனக் கருதுகின்றார். எனவே, அவரைப் பொறுத்தளவில் தனிமனிதன் ஒருவனின் சக்தியும் பலமும், அதே நேரத்தில், பல தனி மனிதர்களின் பலவீனமும் சக்தியற்ற தன்மையுமே ஆட்சி தோன்றக் காரணமாக அமைகின்றது.

## இப்னு கல்தூன்

இஸ்லாமிய அரசியற் சிந்தனையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல் கல்லாக, புகழ் பூத்த அரபு வரலாற்றறிஞரான இப்னு கல்தூன் (கி. பி. 1332–1406) விளங்குகின்றார். ஆட்சியின் தோற்றம் பற்றி அரசியல் சமூகவியல் நோக்கில் அணுகி அவர் விளக்கியுள்ளார். ஆட்சியின் தோற்றத்தைச் சமூகத்தோடு தொடர்புபடுத்தி இப்னு கல்தூன் ஆராய்கின்றார். சமூகத் திற்கான மனிதனின் தேவை இயற்கையானது மட்டுமன்றி அவசியமானதுமாகும். சமூக அமைப்பில் பிறரோடு இணைந்து வாழுதல் மனித வாழ்விற்கு மிக அவசியமாகின்றது. சமூகமின்றி தனிமனிதனுக்கு வாழ்வில்லை. மனிதன் ஒரு கூட்டமைப்பில் இணைந்து சமூகம் உருவாகும்போது, சமூக வாழ்வை ஒழுங்குபடுத்துவதும் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டு வதும் அவசியமாகின்றது. மக்கள், இயற்கையாகவே அவர்களில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பு உணர்வு காரணமாகப் பிறரை அடிமைப்படுத்தி, அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதைக் கட்டுப்படுத்துவது இங்கு கட்டாயமாகியது. மிகச் சிறப்பான வீரமும் அறிவு ஞானமும் உடைய ஒருவன் சமூகத்தில் தோன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றான். இவ்வாறு தனது சக்தியையும் அதிகாரத்தையும் பயன்படுத்துபவன் ஆட்சி யாளனாக ஆகின்றான் என இப்னு கல்தூன் குறிப்பிடுகின்றார்.

ஒரு சடப்பொருளுக்கு உருவமும் அமைப்பும் போன்றதே சமூகத்திற்கு ஆட்சியாகும். ஆட்சியே சமூகத்திற்கு ஓர் அமைப்பை வழங்குகின்றது. ஒரு சடப் பொருளிலிருந்து அதன் உருவத்தைப் பிரிக்க முடியாதது போல ஆட்சியும், சமூகத்தோடு பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது. எனவே, சமூகமின்றி ஆட்சியைக் கற்பனை செய்தல் முடியாது. அதே நேரத்தில், ஆட்சியற்ற சமூகமும் சாத்தியமற்றதாகும். ஏனெனில், மனிதனில் இயற்கையாகவே அமைந்துள்ள ஆக்கிரமிப்பு உணர்வு ஒரு கட்டுப்பாட்டை வேண்டி நிற்கின்றது.

ஓர் ஆட்சியானது ஓர் இறைதூதருக்கு அருளப்பட்ட வேதமொன்றின் அடிப்படையில் அமையும்போது, அது மதத்தின் அடிப்படையில் அமைந்த ஆட்சியாக அமைகின்றது. இதனை இப்னு கல்தூன் 'மத ஆட்சி' (Theocratic state) எனக் குறிப்பிடுகிறார். சில சந்தர்ப்பங்களில் ஓர் ஆட்சியாளனின் அதிகாரமும் சக்தியும் 'அஸபிய்யா' என்னும் குழு உணர்விலும் தங்கியிருக்கலாம். ஓர் ஆட்சியாளன் ஒன்றுபட்ட இலட்சியமுடைய ஒரு குழுவிற்குத் தலைமை தாங்கி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் போது இத்தகைய ஆட்சி தோன்றுகின்றது. இதனை இப்னு கல்தூன் அரசராட்சி (Kingly state) என்கின்றார்.

## ஆட்சி பற்றிய கோட்பாடு

மனித வாழ்வின் நிலைப்பாட்டிற்குச் சமூகம் என்ற அமைப்பு இன்றியமையாதது எனக் கருதியது போன்றே, இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டையும் மிக அவசியமானதாகவும் இன்றியமை யாததாகவும் முஸ்லிம் அரசியற் சிந்தனையாளர் கருதினர். சமூகம் என்ற அமைப்பு அதில் ஒழுங்கையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்குப் பொறுப்பாளரான ஓர் அதிகார அமைப்பின்றி நிலைத்திருத்தல் முடியாது என்பதே இந்தக் கோட்பாடாகும். இந்த அதிகார அமைப்பே ஆட்சியாகும். ஆட்சி என்ற நிறுவனமே சமூகத்தில் ஒழுங்கையும் நீதியையும் நிலை நாட்டுகின்றது. எனவே, இஸ்லாமிய அரசியற் சிந்தனை யாளர்களது நோக்கில் ஆட்சி என்பது மனிதனைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தும் ஒரு சக்தியாகும்.

இந்தக் கோட்பாடு எவ்வாறு உருவாகியது என்பதே அடுத்து எமது கவனத்தை ஈர்க்கும் வினாவாகும். இந்த வினாவிற்கு விடை காண இஸ்லாமிய 'உம்மத்' பற்றிய கோட்பாட்டையும், அதன் அமைப்பு, அது தொடர்பான அடிப்படை விதிகளையும் நாம் அறிதல் வேண்டும். பல்வேறு செங்கற்கள் ஒன்றையொன்று தாங்கி நிற்கும் வகையில் ஒன்றாக இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு கட்டடத்திற்கு இஸ்லாமிய சமூகத்தை நாம் உவமிக்கலாம். கட்டடத்தின் ஒவ்வொரு செங்கல் போன்று சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் அமைகின்றான். இத்தகைய சமூகம் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட சட்ட அமைப்பும், அந்தச் சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற நிறுவனமும் இன்றி, ஒன்றுபட்ட ஒழுங்கான சமூகமாக இயங்குதல் முடியாது. இஸ்லாமிய நோக்கில் இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டுச் செயல்படும் ஆட்சியே இந்த அதிகாரம் பெற்ற நிறுவனமாகும். எனவே, ஆட்சி என்பது சட்டத்தினால் – ஷரீஆவினால் கட்டுப்படுத்தப் படுகின்றது.

இவ்வாறு ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி என்பது இன்னோர் உண்மையினை உணர்த்துகின்றது. சட்டம் என்பது சமூகத்தில் செயல்படுத்தப்படும்போதுதான் அது செயல்பாட்டுத்தன்மை பெறுகின்றது. எனவே, இஸ்லாமிய ஆட்சி என்பது வெறுமனே கோட்பாட்டினதும், சித்தாந்தத்தினதும் அடிப்படையில் அமைந்த ஆட்சியன்று. சட்டத்தின் செயல்பாடே அந்த ஆட்சிக்கு இஸ்லாமிய முத்திரையை வழங்குகின்றது. இத்தகைய சட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஆட்சியானது மனித நடத்தைகளை நெறிப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருப்பதால், ஆட்சியின் பிரஜைகளுக்கு மகிழ்வையும், நிறைவையும் அளிக்கும் வகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல் அதன் முக்கிய பணியாக அமைகிறது. இந்த வகையில், இஸ்லாமிய ஆட்சியின் பணியானது, அதற்கு மிகத் தெளிவான உறுதியான நோக்கங்களையும் இலட்சியங்களையும் வழங்குகின்றது. எனவே, ஆட்சியானது இஸ்லாமியக் கொள்கைகள், அடிப்படைகளின் அத்திவாரத்தில் எழுப்பப்படுவது அவசிய மாகின்றது.

## நீதி

இஸ்லாமிய ஆட்சிக் கோட்பாட்டில் ஏனைய எல்லா நோக்கங்கள், இலட்சியங்களை விட நீதியே மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை இலட்சியம் நீதியாகும். இங்கு நீதி என்பது அதன் விரிவான கருத்தில் சமூக, பொருளாதார, அரசியல், சட்ட ரீதியான நீதியை உள்ளடக்குகின்றது. நீதி என்பது எப்போதும் சமூகத்தின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் நோக்காகக் கொண்டே செயல்படல் வேண்டும். "நீதியின் அடிப்படையில் அமைந்த ஓர் ஆட்சியே முன்னேற்றத்தையும் மிக உயர்ந்த நாகரிக உயர்ச்சியையும் காண முடியும். இதற்கு மாறாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதியின் அடிப்படையில் அமைந்த ஆட்சி வீழ்ச்சியடைந்து இறுதியில் மரணத்தைத் தழுவும்" என்ற இப்னு கல்தூனின் கருத்து இதனை மிகச் சிறப்பாக உணர்த்துகின்றது.

இஸ்லாமிய அரசியற் சிந்தனையானது நீதிக்கும் பொறுப்புக்குமிடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாமிய ஆட்சித் தத்துவத்தில் இரண்டாவது முக்கிய அடிப்படையாக இது கொள்ளப்படுகின்றது. இது பற்றிக் குறிப்பிடும் போது அல்-பாராபி, "அறிவும் விவேக உணர்வும் அற்ற அதிகாரமானது, வளர்ச்சிக்குப் பதிலாக சமூகத்தின் சீர்குலைவிற்கும் வீழ்ச்சிக்குமே வழிகோலும்" எனக் கூறுகின்றார். இத்தகைய ஆட்சி அதிகாரத்தை 'அறியாமை படைத்த அதிகாரம்' என அவர் வர்ணிக்கின்றார். ஆனால், நீதியின் அடிப்படையில் அமைந்த பொறுப்புணர்வுள்ள அதிகாரமே சமூகத்தை மகிழ்ச்சியின்பால் இட்டுச்செல்லும். அல்-பாராபி இத்தகைய ஆட்சியைச் 'சிறப்பான ஆட்சி' என அழைக்கின்றார்.

அல்-பாராபி சமூக நன்மைக்கும் பொறுப்புணர்ச்சியை ஒரு முக்கிய காரணியாகக் கருத, இப்னு பஜ்ஜா (மரணம் 1138) ஒரு நல்ல ஆட்சிக்கும் தீய ஆட்சிக்கும் அடிப்படையாக அமைவது, அந்த ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற ஆட்சியாளனின் பண்புகளாகும் எனக் கூறுகின்றார். இந்தப் பண்புகளே ஆட்சியாளனைப் பொறுப்புணர்வுள்ளவனாக அல்லது பொறுப்புணர்வு அற்றவனாக ஆக்குகின்றது.

பொறுப்புணர்வைப் பொறுத்தளவில் ஆட்சியாளருக்கும் பிரஜைகளுக்குமிடையேயுள்ள தொடர்புபற்றி அல்-மாவர்தி (மரணம்-1058)யின் விளக்கங்கள் ஏனைய சிந்தனையாளர்களிலிருந்து ஒரு விடயத்தில் வித்தியாசப்படுகின்றன. அல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவர்தி இவ்விடயத்தை மிக விசாலமான உலக நோக்கில் அணுகுகின்றார்.

## கலந்தாலோசனை

இஸ்லாமிய ஆட்சி அமைப்பின் மூன்றாவது அடிப்படையான 'ஷூரா என்பது அரசியல் வாழ்வில் தோன்றும் பிரச்சினைகளைக் கூட்டாகச் சிந்தித்து அணுகி, பொருத்தமான முடிவுகளுக்கு வருவதாகும். 'ஷூரா' எனில் ஆலோசனையைப் பெறுதல் என்பது கருத்தாகும். பிறரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கருத்திற் கொண்டு ஒரு முடிவுக்கு வருதலை இது குறிக்கின்றது.

இஸ்லாமிய ஆட்சியில் சட்டசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற, விவேகமும் கண்ணியமுமுள்ள பிரிவினரின் (அஹ்லுல் ஹல் வல் அக்த்) ஆலோசனையைப் பெறுவதையே இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் ஷூரா என்ற பதம் குறிக்கின்றது. இமாம் இப்னு தைமியா (மரணம் 1328) தனது 'அஸ்ஸியாஸா அஷ் ஷரீஆ' என்னும் நூலில் நபி (ஸல்) அவர்கள் தங்களது எல்லாத் தீர்ப்புகளிலும் ஷூராவைக் கடைப்பிடித்தது மட்டுமன்றி, இஸ்லாமிய ஆட்சிச் சித்தாந்தத்தின் ஒரு முக்கிய அடிப்படையாக அது அமைகின்றது என்பதனையும் வலியுறுத்தியுள்ளார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

## ஆட்சியின் அமைப்பு

ஆட்சியின் அமைப்பு (Form of the State) பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு, இஸ்லாமிய அரசியல் சூழல், அதன் பாரம்பரியங்களின் பிரதிபலிப்பாகவே அமைவதை அவதானிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. இஸ்லாமிய அரசியற் சூழல், பாரம்பரியம் என்பவற்றை நாம் நன்கு பரிசீலனையுடன் நோக்கும் போது, இஸ்லாமிய அரசியல் சிந்தனை கிலாபத் அமைப்பை மையமாக வைத்துச் செயற்படுவதைக் காண முடிகின்றது. கிலாபத் என்பது உண்மையில் கலீபாவுக்கும் உம்ம(சமூக)த்துக்குமிடையில் செயற்படும் ஓர் ஒப்பந்தமாகும். கிலாபத்தின் நோக்கம் இத்தகைய சட்டரீதியான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கலீபா தெரிவு செய்யப்படும் முறையில் அமைந்த ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதாகும். கலீபா தேர்வு இரண்டு ஒப்பந்தங்களின் மூலம் நடைபெறுகின்றது. முதலில் 'அஹ்லுல் ஹல் வல் அக்த்' என்னும் தேர்வுக்குழு கலீபாவுக்கு 'பைஅத்' அளித்து ஒப்பந்தம் செய்கின்றது. அதனைத் தொடர்ந்து மக்களுடனான பொதுவான 'பைஅத்' (ஒப்பந்தம்) நடைபெறுகின்றது. ஆனால், இவ்வாறு தெரிவு செய்யப்படும் கலீபாவும், அவரைத் தெரிவு செய்யும் சமூகமும் (உம்மத்) இஸ்லாமிய ஷரீஆவின் கட்டுப்பாட்டின் வரம்புகளுக்கு உட்பட்டோராவர்.

கிலாபத்தைப் பொறுத்தவரையில் அதன் முக்கிய பண்பாக விளங்குவது சட்ட ஆக்கம் (Legislation), சட்ட அமுலாக்கம் (Execution), நீதி பரிபாலனம் (Judiciary) ஆகிய ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்குவதாகும். சட்டம் ஆக்கும் உரிமை 'உம்மத்'திற்கு உரியது. சட்டத்தின் செயற்பாடு கலீபாவின் பொறுப்பாகக் காணப்பட, நீதிபரிபாலனம் முற்றிலும் சுதந்திரமான ஒரு தனிப்பிரிவாக இயங்குகின்றது.

## சமூக ஒப்பந்தம்

எனவே, இஸ்லாமிய அரசியற் சிந்தனை என்பது, அதற்கே உரிய, தனிப்பட்ட சிறப்பியல்புகளைக் கொண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவது மட்டுமன்றி, அதன் தோற்றத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் மேற்கத்திய உலகில் தோன்றிய பல அரசியற் சிந்தனைகளின் முன்னோடியாகவும் விளங்கியது. அதிகாரம் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டுத் தனித்து இயங்கும் பண்பு (Separation of Powers), பிரதிநிதித்துவம் பற்றிய கோட்பாடு (Principle of Representation) ஆகியவற்றை நாம் இதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம். முஸ்லிம் சிந்தனையாளர்கள் மொான்டெஸ்கியூ(Montesquie) விற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அதிகாரப் பாகுபாடு பற்றிச் சிந்தித்தனர். அதே போன்று ரூஸோவின் சமூக ஒப்பந்தம் (Social Contract) பற்றிய நூல் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவனின் தேர்வு என்பது மக்களுக்கும் அத்தலைவனுக்கும் இடையில் செய்யப்படும் ஓர் ஒப்பந்தம் என்ற கருத்தை முஸ்லிம் அரசியல் சிந்தனையாளர்கள் கொண்டிருந்தனர். ரூஸோ தனது 'சமூக ஒப்பந்தம்' என்ற நூலில் இலட்சியக் கனவாகக் கண்ட கோட்பாடு ஏற்கெனவே இஸ்லாமிய உலகில் ஒரு யதார்த்த அடிப்படையாகச் செயலுருவில் காணப்பட்டது.

இஸ்லாமிய அரசியல் சித்தாந்தத்தின் இன்னொரு சிறப்பம்சம் 'அல் கிபாயா' (Kifaya) என்னும் கோட்பாடாகும். அல்-கிபாயா என்பது அரசியல், அறிவு, பொறுப்புணர்வு, நம்பிக்கை, விசுவாசம் ஆகிய பண்புகளைத் தகைமைகளாகக் கொண்ட தனிமனிதர்களுக்கு, மக்களின் பெயரால் ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் உரிமையை வழங்குவதாகும். கிபாயா என்பதே நவீன அரசியல் கோட்பாட்டில் (Priciple of Representation) 'தெரிவின் அடிப்படை' எனக் குறிப் பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமையும் இறைமை அதிகாரமும்

மக்களால் தெரிவு செய்யப்படும் கலீபா மக்களுக்குப் பொறுப்பாக உள்ளவராகக் கணிக்கப்படுவார். இந்த வகையில், கலீபா தனது அதிகாரத்தை இஸ்லாமிய உம்மத்திலிருந்தே பெறுகின்றார். கலீபாவிற்கும் மக்களுக்குமிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தமே அவருக்கு இந்த அதிகாரத்தை வழங்குகின்றது. கலீபா இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் செயல்படும் வரை இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும். கலீபா ஷரீஆவிற்கு முரணாகச் செயற்பட்டு, இந்த ஒப்பந்தம் மீறப்படும் போது, மக்களுக்கு இந்த ஒப்பந்தத்தை முறித்து, வேறு ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் உரிமை உண்டு. ஆனால், இந்தக் கருத்தை இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்கள் அனைவரும் ஒருமித்து ஏற்றுக் கொள்ளவில்லை. இப்னு ஜமாஆ, அல்-அஷ்அரீ போன்றோர் ஒரு கலீபாவை நீக்கி நாட்டில் அராஜகமும், குழப்ப நிலையும், சமூகச் சீர்குலைவும் ஏற்படுவதை விட, ஷரீஆவுக்கு முரணாகச் செயற்படும் கலீபாவிற்கு வழிப்படுவது சிறந்தது எனக் கூறுகின்றனர். இவ்விடயத்தில் கவாரிஜ்கள் மிகத் தீவிரப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். ஒரு கலீபா நெறிபிறழ்ந்து நடக்கும் போது, அவருக்கு எதிராகப் புரட்சி செய்து, அவரை நீக்குதல் வேண்டும் என்பது கவாரிஜ்களின் கருத்தாகும்.

இஸ்லாமிய அரசியல் சிந்தனை என்பது அதற்கே உரிய பல தனிச் சிறப்புகளைக் கொண்ட ஒரு கோட்பாடாகும். அது அரசியல் சிந்தனைத் துறைக்குப் பல புதிய கருத்துக்களையும் கோட்பாடுகளையும் வழங்கியது. இஸ்லாமிய அரசியற் சிந்தனைத் துறையின் வளர்ச்சியில் தோன்றிய ஒப்பந்தக் கோட்பாடு' பிற்காலத்தில் ரூஸோ, லொக் போன்ற ஐரோப்பிய சிந்தனையாளர்களில் பிரதிபலிப்பதைக் காண்கின்றோம். இப்னு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தூனின் அரசியல் சிந்தனையின் தாக்கத்தை ஹொப்ஸின் கருத்துகளில் காணமுடிகின்றது. இறைமை பற்றிய அல்-பராபியின் சித்தாந்தங்களின் எதிரொலியைப் பதினாறாம் நூற்றாண்டில் போடினின் (Bodin) சித்தாந்தங்களில் நாம் அவதானிக்க முடிகின்றது.

## தவறான அபிப்பிராயம்

இங்கு இஸ்லாமிய அரசியல் சிந்தனை தொடர்பான மேற்கத்தியவாதிகள் சிலரின் ஒரு தவறான கருத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். D.P. Macdonald தனது Development of Muslim Theology. (P.58) என்ற நூலில் இஸ்லாமியக் கலீபா சர்வ அதிகாரங்களும் படைத்த ஒரு மன்னராகவே (Absolute monarch) விளங்குகிறார் எனக் குறிப்பிடுகிறார். இதே கருத்தை Sir William Muir தனது The Caliphate என்ற நூலிலும் வலியுறுத்துகின்றார். இஸ்லாமிய அரசியற் சிந்தனைக் கோட்பாட்டிற்கும் நடைமுறையில் அதன் செயற்பாட்டிற்குமிடையில் காணப்பட்ட வித்தியாசத்தை உணரத் தவறியதே இவர்கள் இந்தத் தவறான கருத்தைக் கொள்ளக் காரணமாக இருக்கலாம். இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டின் செயற்பாட்டு வளர்ச்சியிலும் வரலாற்றிலும் இஸ்லாமிய வரலாற்றில் சில கலீபாக்கள் இஸ்லாமியச் சட்டங்களையும் வரையறைகளையும் மீறிச் செயற்பட்டிருக்கலாம். ஆனால், இது எந்த வகையிலும் அக்கோட்பாட்டில் குறை காண்பதற்கோ அல்லது அதனைத் தவறாக விளங்கவோ, விளக்கவோ காரணமாக அமைதல் கூடாது.

இதே போன்று இஸ்லாமிய அரசியல் சிந்தனை பற்றி விளக்க முற்படும் நவீன அறிஞர்கள் சிலர் அதற்கும் வேறு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சித்தாந்தங்களுக்குமிடையில் காணப்படும் சில மேலோட்டமான ஒருமைப்பாடுகளை வைத்து, அதனை அந்தச் சித்தாந்தங்களோடு இணைத்து விளக்குகின்றனர். உதாரணமாக, மக்களின் இறைமை, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு, சிந்தனைச் சுதந்திரம், அதிகாரப் பிரிவுகள் போன்ற விடயங்களில் இஸ்லாமிய அரசியற் சிந்தனைக்கும் ஜனநாயகத்துக்குமிடையில் சில ஒருமைப் பாடுகள் காணப்படலாம். ஆனால், இரண்டிற்குமிடையிற் சில அடிப்படை வித்தியாசங்கள் உள்ளன. இஸ்லாமிய அரசியற் சிந்தனை, பூகோள ஒருமைப்பாட்டை மையமாகக் கொள்ளாது, இலட்சிய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்தோடு இஸ்லாம் வாழ்க்கையை லோகாயதம், ஆத்மீகம் எனக் கூறு போட்டு நோக்காது, ஒன்றுபட்ட கட்டுக்கோப்பாகக் கொள்கின்றது. இதனால் இஸ்லாம் ஒவ்வோர் அரசியல் சிந்தனைக்கும் செயலுக்கும் ஓர் ஒழுக்கப் பரிமாணத்தை வழங்குகின்றது.

மேலும், நவீன ஜனநாயக அமைப்பில் இறைமை என்பது முற்றிலும் மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. ஆனால், இஸ்லாமிய அரசியற் துறையில் உம்மத் (சமூகம்) ஷரீஆவினால் வழிநடத்தப்படுகின்றது. எனவே மக்களின் இறைமை ஷரீஆவிலிருந்தே பெறப்படுகின்றது.

எனவே, இஸ்லாமிய அரசியற் சிந்தனை என்பது இஸ்லாமிய ஷரீஆவினடியாக எழுதப்பட்ட ஒரு கோட்பாடாகும். அதற்கும் வேறு சில அரசியற் கோட்பாடுகளுக்கும் இடையில் காணப்படும் மேலோட்டமான ஒருமைப்பாடுகளை வைத்து அதனை அவற்றோடு இணைத்து நோக்குதல் தவறாகும். இஸ்லாமிய அரசியற் சிந்தனையின் வரலாற்றில் கோட்பாட்டிற்கும், செயலாக்கத்திற்குமிடையில் காலத்திற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் சில முரண்பாடுகள் காணப்படுவதை கொண்டு, அந்த முரண்பாடுகளை வைத்து, அதனைத் தவறாக விளக்க முற்படுதல், அதனை உரிய முறையில் அணுகச் சரியான அணுகுமுறையாக அமைய மாட்டாது.

உசாத்துணை நூல்கள்


1. Mohammed Al - Rayyes, Islamic Political Theories
2. Al- Gazzali, Ihya-ulum-ud-din
3. Al-Mawardi, Al-Ahkam As-Sultaniyya
4. Ibn- Khaldoon, Al-Muqaddima
5. E. Rosenthal, Political Thought in Medieval Islam.
6. H. Sherwani, Studies in Muslim Political Thought and Administration.
7. J. Friggs, The Divine Rights of Kings.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி........

எழுத்துத் துறையிலும் பேச்சுத் துறையிலும் தடம் பதித்துள்ள, பன்மொழிப் புலமை பெற்ற, பேருவலை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர், கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி அவர்கள், 1965இல், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழித் துறையில் முதலாம் தரத்தில் சித்தியடைந்து ,1973இல், பொதுநலவாய நாடுகளின் புலமைப் பரிசில் பெற்று, பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்காக ஐக்கிய இராச்சியம் நோக்கிப் பயணமானார். ஐக்கிய இராச்சியத்தின் எடின்பரோ சர்வகலாசாலையினால் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

பேராதனை, களனி பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமை புரிந்த இவர், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அரபு, இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவராக நியமனம் பெற்றார்.

தற்போது ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளராகக் கடமை புரியும் இவர், நளீமிய்யாவின் நிருவாகப் பொறு ப்புகளுக்கு மத்தியிலும், அரபு மொழித்துறை, குர்ஆனியக் கலைகள், இஸ்லாமிய கலாசார, வரலாறு முதலிய துறைகளில் பல ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு முஸ்லிம் சமூகத்திற்குப் பல அரிய பொக்கிஷங்களை வழங்கியுள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இடம்பெற்ற பல சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு பல ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். இவ்வாய்வுக் கட்டுரைகளில் பல சர்வதேச சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் கீழ் இயங்கும் இலங்கை முஸ்லிம் கல்வி நம்பிக்கை நிதியம், இல்மா சர்வதேச பெண்கள் பாடசாலையின் கல்வி ஆலோசனைச் சபை, இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சிப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிருவாக சபை, இலங்கைத் தேசிய நூதனசாலை ஆலோசனை சபை முதலியவை இவர் அங்கத்துவம் வகிக்கின்ற சில அமைப்புகளாகும்.

PRINTED BY AJ PRINTS, 44, STATION ROAD, DEHIWEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org